# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - 20
பக்கங்கள் - 28

சுடர் 32 | கதிர் 65 | வள்ளுவர் ஆண்டு 2048 | தை 17. திங்கட்கிழமை 30.01.2017


## கடலில் குளித்த 2இளைஞர்களை காணவில்லை

திருமலை, ஜன. 30
திருகோணமலை அலஸ்தோட்டம் பகுதியிலுள்ள சோலையடி கடற்கரையில் குளிக்கச் சென்ற இரண்டு இளைஞர்கள் நேற்று மாலை நீரில் மூழ்கி காணாமற்போயுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். >> 24

## 'குல்லா' படகு கவிழ்ந்து தந்தையும் தனயனும் சாவு

*மன்னாரில் பரிதாபச் சம்பவம்*

மன்னார், ஜன. 30
மன்னாரில் கடற்றொழிலுக்குச் சென்ற தந்தையும் மகனும் சடலங்களாகக் கரையொதுங்கினர் என்று பொலிஸார் தெரிவித் தனர்.
மன்னார் சௌத்பார் கிராமத்தில் இருந்து மீன் பிடிப்பதற்காக தந்தையும் மகனும் 'குல்லா' என்ற படகில் நேற்று முன்தினம் மீன் பிடிக்கச் >> 24

## அரசியல் தீர்வுக்குப் பின் உண்மை ஆணைக்குழு

*அதுவே ஒழுங்கு என்கிறார் வடக்கு முதலமைச்சர் விக்கி*

யாழ்ப்பாணம், ஜன. 30
உண்மை நல்லிணக்க ஆணைக் குழுவை அமைப்பதற்கான முயற்சியில் அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ள நிலையில், அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்ட பின்னரே இதனை உருவாக்க வேண்டும் என்று வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.
'தென்னாபிரிக்காவில் அரசியல் ரீதியான ஒரு தீர்வு பெற்ற பின்னரே உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு அமைக்கப்பட்டது. இங்கு எமது மக்களுக்கு ஒரு சந்தேகம் உண்டு. கொழும்பு அரசு அதைச் செய்து இதைச் செய்து விட்டு மக்களுக்கான நியாயமான அரசியல் தீர்வைத் தராது விட்டுவிடுமோ என்ற ஒரு ஐயம் எம்மைப் பீடித்தே இருக்கின்றது' என்று முதலமைச்சர் தெரிவித்தார்.

(விரிவு பக். 10)

### மைத்திரி இருக்கும் வரை

# வடக்கு, கிழக்கு இணைப்பு கனவிலும் நடக்காது

*இப்படிச் சொல்கிறார் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளர் மகிந்த அமரவீர*



கொழும்பு, ஜனவரி 30
மைத்திரிபால சிறிசேன அரச தலைவராக இருக்கும்வரை, கூட்டாட்சி (சமஷ்டி) என்ற பேச்சுக்கே இடமில்லை. வடக்கு - கிழக்கு இணைப்புக் கனவிலும் நடக்காது. பன்னாட்டுக்கு அடிபணிந்தோ அல்லது வேறு சக்திகளுக்கு அடிபணிந்தோ நாம் இந்த நாட்டைக் கூறுபோடமாட்டோம் - காட்டிக் கொடுக்கமாட்டோம். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பொதுச் செயலாளரும் அமைச்சருமான மகிந்த அமரவீர தெரிவித் >> 24

### முச்சந்தி முனி



வடக்கில
வேலியே பயிரை
மேயுது பாருங்கோ...

## சுமந்திரனைக் கொல்ல நோர்வேயிலிருந்தே சதி

*அமைச்சர் சம்பிக்க புதுக் கதை*

கொழும்பு,.ஜன. 30
நோர்வேயிலிருந்து செயற்படும், மகிந்த ஆட்சியில் விடுவிக்கப்பட்ட புலிகள் அமைப்பின் உறுப்பினர்களே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைப் படுகொலை செய்வதற்குரிய திட்டத்தை வகுத்துள்ளனர்.
இவ்வாறு புதுத் தகவலை வெளியிட்டார் அமைச்சர் >> 24

### சித்திரவதைக் குற்றச்சாட்டு

## ஐ.நாவுக்குப் பதிலளிக்க தயாராகிறது கொழும்பு

கொழும்பு, ஜன. 30
சித்திரவதைகள் தொடர்பான ஐ.நா. சிறப்பு அறிக்கையாளரின் எந்தவொரு பரிந்துரைக்கும் இணங்க முடியாது என்று அவரின் அறிக்கையைகொழும்பு அரசு நிராகரித்துள்ளது. இந்த அறிக்கைக்கு பதில் வழங்கும் அறிக்கையை ஐ.நா. மனித உரிமைகள் சபையில் சமர்ப்பிப்ப >> 24

## நாவற்குழி வீடமைப்புக்கு அடிக்கல் நடுகை இன்று

யாழ்ப்பாணம், ஜன. 30
நாவற்குழியில் சிங்கள மற்றும் தமிழ் மக்களுக்குரிய வீடுகளை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு திட்டமிட்டவாறு இன்று நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. >> 24

## ஓய்வெடுக்கவிருந்த மகிந்த ஏன் 3 ஆவது தடவை போட்டியிட்டார்?

*ரணில் கேள்வி*

கொழும்பு, ஜன. 30
அரசியலிலிருந்து ஓய்வு பெறுவதற்கு மகிந்த எண்ணியிருந்தால், எதற்காக 18ஆவது அரசமைப்புத் திருத்தத்தை மேற்காண்டு மீண்டும் அரச தலைவர் தேர்தலில் மூன்றாவது >> 24



## சாலையைக் கடந்த மாடுகளை மோதித் தள்ளியது பேருந்து

*15 எருமை மாடுகள் துடிதுடித்துச் சாவு*
*10 பயணிகள் படுகாயம்*

மாங்குளம், ஜன. 30
யாழ்ப்பாணத்தில் இருந்து மொறட்டுவ நோக்கிப் பயணித்த பேருந்து ஏ-9 முதன்மைச் சாலையில் கொல்லர்புளியங்குளம் பகுதியில் சாலையைக் கடந்த எருமை மாட்டுப் பட்டியுடன் மோதுண்டு விபத்துக் >> 24

## ஐ.தே.கட்சியின் நிலைப்பாடும் அதுவேதானாம்

கொழும்பு, ஜன. 30
வடக்கு - கிழக்கு மாகாணங்களைக் கூட்டு அரசு ஒரு போதும் ஒன்றிணைக்காது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் மூத்த உறுப்பினரும் வீடமைப்பு அமைச்சருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.
திஸ்ஸமகாராமவில் நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்று



கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.
புதிய அரசமைப் >> 24

### தீர்வு குறித்து கூட்டமைப்புடன்

## மனம் திறந்து பேசவேண்டும்

*ரத்ன தேரர் எம்.பி. அரசுக்கு அறிவுரை*

கொழும்பு, ஜன. 30
தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையில் எந்தவோர் இரகசிய ஒப்பந்தமும் இல்லை. கூட்டமைப்புடன் மனம் திறந்து பேசினால் அரசியல் தீர்வு தொடர்பில் >> 24

### காணாமற்போனோர் அலுவலகம்

## சில பிரிவுகள் தொடர்பிலேயே பாதுகாப்பு அமைச்சு கரிசனை

கொழும்பு, ஜன. 30
காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டவரைவில், இராணுவ நிலைகளுக்குள் நுழைந்து தேடுதல் நடத்த அனுமதித்தல் உள்ளிட்ட சில சட்டப் பிரிவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவை தொடர்பாகவே, பாதுகாப்பு அமைச்சு கரிசனை செலுத்துமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவைக் கேட்டுக் கொண்டதாக, பாதுகாப்பு >> 24

## நுகேகொடை கூட்டம் சவால் கிடையாதாம்

*ஐ.தே.க. கூறுகிறது*

கொழும்பு, ஜன. 30
மகிந்த அணியின் நுகேகொடை கூட்டமானது அரசுக்கு எந்த விதத்திலும் சவாலாக அமையவில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்தது.
'புரட்சியின் ஆரம்பம்' எனும் தொனிப் பொருளில் அரசுக்கு எதிராக கடந்த வெள்ளியன்று பொது எதிரணியினர் நுகே கொடையில் கூட்டமொன்றை ஏற்பாடு செய்திருந்தனர். >> 24

## கேரளக் கஞ்சா கடத்திய பொலிஸ் உத்தியோகத்தர் வசமாகச் சிக்கினார்

கொழும்பு, ஜன. 30
தலைமன்னாரிலிருந்து கொழும்புக்குக் கேரளக்கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில்பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னார் பொலிஸ் நிலையத்தில் பணி புரியும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார். அவரிடமிருந்து 3 கிலோ 650 கிராம் நிறை கொண்ட கேரளக் கஞ்சாப் பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.
புலனாய் >> 24



இடித்தழிக்கப்பட்ட காங்கேசன்துறை ஊறணி புனித அந்தோனியார் ஆலய வளவில் நேற்றைய தினம் பாதீனியச் செடிகள் வேரோடு பிடுங்கி அழிக்கப்பட்டன. இந்தச்சிரமதான நிகழ்வில் 50க்கு மேற்பட்ட ஊறணி மக்கள் கலந்து கொண்டனர். (த)

# பிள்ளைகளின் உடல் எடையில் பெற்றோரின் அக்கறை அவசியம்

## சுகாதார அமைச்சு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 30

போசாக்கின்மையால் பாதிக்கப்படும் சிறுவர்களைவிட அதிகூடிய நிறையுடன் காணப்படும் சிறுவர்களின் எண்ணிக்கை இலங்கை உட்பட உலகெங்கும் காணப்படுகிறது. இதனை உரிய காலத்தில் கட்டுப்படுத்த பெற்றோர் நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறின் உங்கள் சிறுவர்கள் நோயாளிகளாகிவிடுவார்கள்.

இவ்வாறு சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

சுகாதார அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பிரகாரம் உலகம் முழுவதும் 2014ஆம் ஆண்டு அதிகூடிய நிறையுடைய ஒரு வயதுக்கும் 5 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்களின் எண்ணிக்கை 41 மில்லியனாகக் காணப்பட்டது. இந்த எண்ணிக்கை எதிர்வரும் 2025 ஆம் ஆண்டில் 70 மில்லியனாக அதிகரிக்கும் என அறிவித்துள்ளது.

அமைச்சால் வாராந்தம் வெளியிடும் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

சிறுவர்கள் அதிகூடிய நிறையுடன் காணப்படுவது ஆரம்பத்தில் பொருளாதாரத்தில் வளர்ச்சியடைந்த நாடுகளில் மட்டும் காணப்பட்டு தற்போது எமது நாட்டிலும் அதிகரித்துள்ளது.

போசாக்கு குறைந்த சிறுவர்களுக்கு சுகாதார அமைச்சு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் செலவிடப்படும் தொகையைவிட அதிகூடிய நிறை கொண்ட சிறுவர்களைப் பாதுகாக்க செலவிடும் தொகை அதிகமாகவுள்ளது.

இதற்குக் காரணம் பெண்களிடையே கர்ப்ப காலம் தொடக்கம் பிரசவம் மற்றம் குழந்தை வளர்ப்பு போன்ற விடங்களில் போதிய விழிப்புணர்வு ஏற்படாததே.

ஒரு பெண் கர்ப்பமடைய முன்னர் தனக்கு கர்ப்பம் தரித்தால் ஏற்படக்கூடிய பாதிப்புகள் தொடர்பான பரிசோதனைகள் எதுவும் மேற்கொள்வதில்லை. பெண்களைத் தாக்கும் பல்வேறு நோய்கள் கர்ப்ப காலத்தில் கருவில் உள்ள குழந்தைக்குப் பாதிப்புகளை ஏற்படுத்தும். கர்ப்ப காலத்தில் பெண்களுக்கு நீரிழிவு நோய் உள்ளிட்ட பல நோய்கள் தாக்கும் அபாயம் உள்ளன. அவை அவர்களுக்கு நடத்தப்படும் கிளினிக்குகளில் கண்டு பிடிக்கப்பட்டு அதனைக் கட்டுப்படுத்த சுகாதாரத் திணைக்களத்தினால் மருந்துகள் வழங்கப்படுகின்றன. அந்த மருந்துகள் கருவில் உள்ள குழந்தையைப் பாதிக்கும் என்ற நோக்கில் அவர்கள் மருந்துகளை அருந்துவதில்லை.

கர்ப்ப காலத்தில் நிறைகுறைவான பெண் சாப்பிடும் உணவுகள் சத்துள்ளவையாக அமைவதால் அதிலிருக்கும் கொழுப்பு போன்ற படிமங்கள் கருவில் உள்ள குழந்தையைச் சென்றடைகின்றன. அவ்வாறுதாயால் அருந்தும் போசாக்கு நிறைந்த உணவு வகைகள் கருவில் உள்ள குழந்தையை நேரடியாகச் சென்றடைந்து அதிகூடிய நிறையுடைய குழந்தையாகப் பிறக்கிறது. கர்ப்ப காலத்தில் கிளினிக்குகளில் வழங்கப்படும் நீரிழிவு போன்ற நோய்களைக் கட்டுப்படுத்தும் மருந்துகளை அவசியம் எடுக்கும் போது தாய் அருந்தும் போசாக்கு உணவுகள் மருந்துகளின் செயற்பாட்டால் கருவை சென்றடைவதில்லை. மருந்துகளை ஒழுங்காகப் பாவிக்காமல் விடுவதால் அதன் தாக்கம் கருவில் உள்ள குழந்தையை சென்றடைந்து பிற்காலத்தில் அதிகூடிய நிறையுடைய குழந்தையாகப் பிறந்து நிரந்தர நோயாளியாக மாற்றிவிடும். ஒவ்வொரு மாதத்திலும் பரிசோதனையின் போது காலத்திற்கேற்ற எடை இருக்க வேண்டும்.

நோய் எதிர்ப்புசக்தி கொண்ட தாய்ப்பாலை குறைந்தது ஆறு மாதங்களாவது பிள்ளைக்குக் கட்டாயம் வழங்கவேண்டும். தவறினாலும் பிள்ளையின் எடையை அதிகரிக்கச் செய்யும். தாய்ப்பாலை நிறுத்தி மனித உணவுக்கு மாறும்போது சிறு குழந்தைகளுக்கான பாரம்பரிய உணவுப் பொருள்களான உழுத்தம் களி, பப்பாப்பழம், இராசவள்ளிக் கிழங்கு, சிவப்பரிசி, கஞ்சி போன்றவற்றை வழங்காமல் அதிகூடிய சத்துக்களைக் கொண்ட அதிகூடிய சீனிச்சத்து அதிகூடிய கொழுப்புச் சத்து அதிகளவு உப்புச் சத்து போன்றவற்றை குழந்தைகளுக்கு ஊட்டுவதால் சிறுவர்களை அதிகூடிய நிறையுள்ளவர்களாக மாற்றிவிடும்.

அதிகூடிய நிறையுடைய சிறுவர்களின் உயர வளர்ச்சி பாதிக்கப்படும். உடல் பருமன் காரணமாக எலும்புகள் வளைவடையும். மூட்டுகள் வீங்கும். சுவாசிக்கும் அளவு குறைவடையும். எந்த நேரமும் தூக்க நிலையில் காணப்படுவர். தூக்கவேளையில் பெரிய சத்தத்துடன் குறட்டை விடுவர். சுவாச நோய்கள், இருதய வீக்கம், நீரிழிவு, சிலவகைப் புற்றுநோய்கள், குருதி அமுக்கம் போன்றவை ஏற்படலாம். இவற்றைத் தவிர்க்க, கர்ப்ப காலத்துக்கு முன்னர் அது தொடர்பான கிளினிக்குகளுக்குச் செல்ல வேண்டும், கர்ப்பகாலத்தில் நீரிழிவு பரிசோதனைகள் மேற்கொள்ளுதல், பிரசவத்தின் பின்னர் 6 மாத காலத்துக்கு குழந்தைக்குக் கட்டாயம் தாய்ப்பால் கொடுத்தல், தாய்ப்பாலிலிருந்து மனித உணவுக்கு மாறும் போது எமது கலாசாரத்துக்கு ஏற்ற உள்நாட்டு உணவு வழங்குதல், அதிகூடிய இனிப்பு, கொழுப்பு, உப்பு உணவுகளைப் பிள்ளைகளுக்கு வழங்குவதைத் தவிர்த்தல் வேண்டும் - என்றுள்ளது. (வ-4,9)

# மாணவிகள் விடுதிக் கட்டடத்தின் தரத்தை உறுதிப்படுத்தப் பணிப்பு

## தீ பாதிப்பை அடுத்து

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவிகள் விடுதியில் ஏற்பட்ட தீயினால், கட்டடத்துக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதா என்பதனை ஆராய, கட்டடத்தை நிர்மாணித்த நிறுவனத்துக்கு அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் கட்டடத்தின் தரத்தை உறுதி செய்த பின்னரே அதில் மாணவிகள் தங்க அனுமதிக்கப்படுவர்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் தெரிவித்தார்.

பல்கலைக்கழக மாணவர் விடுதிகளில் பெண்களுக்கான புதிய விடுதியில் கடந்த வியாழக்கிழமை பெரும் தீ ஏற்பட்டது. யாழ்ப்பாண மாநகர சபையின் தீ அணைப்புப் பிரிவினரின் உதவியுடன் தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. அங்கிருந்த மாணவிகள் பாதுகாப்பாக அவசர அவசரமாக ஏணி மூலமாக மாடியிலிருந்து வெளியேற்றப்பட்டனர். இந்தநிலையிலேயே விடுதிக் கட்ட டத்தின் நிலை குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கட்டடத்தை நிர்மாணித்த நிறுவனத்திடம் யாழ். பல்கலைக்கழக நிர்வாகம் கேட்டுள்ளது. (வ-101)

# வடக்கு எதிர்க்கட்சித் தலைவர் மீது இலங்கை ஆசிரியர் சங்கம் சாடல்

கொழும்பு, ஜன. 30

பொறுப்புவாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர், இரண்டு பக்கத்தினரதும் நியாயங்களையும் அறிந்து செயற்பட்டிருக்கவேண்டும்என்று இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பில் சங்கம் அனுப்பியுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

வடக்கு மாகாணக் கல்விச் செயலரை ஆசிரியர்கள் அவமதித்ததாகவும் அதனைக் கண்டித்து வடக்கு மாகாண சபையின் நாளைய அமர்வில், எதிர்க்கட்சித்தலைவரும் ஈ.பி.டி.பி கட்சியின் உறுப்பினருமான சி.தவராசாவினால் பிரேரணை கொண்டுவரவுள்ளதாக ஊடகங்கள் வாயிலாக அறிகின்றோம்.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களை எதிர்க்கட்சித் தலைவர் சுமத்தியுள்ளமையானது வடக்கு மாகாண கல்வியமைச்சு மூன்று ஆசிரியர்களுக்கு வழங்கிய தவறான பணித்தடையினை நியாயப்படுத்தும் செயற்பாடாகும்.

வடக்கு மாகாணக் கல்வியமைச்சில் நடைபெறும் அநீதிகள், பாரபட்சங்கள், இடமாற்ற முறைகேடுகள், ஆசிரியர்களுக்கு உரித்தான சம்பள ஏற்றங்கள், நிலுவைகள் வழங்கப்படாமை தொடர்பான ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் வடக்கு மாகாண கல்வியமைச்சின் சீர்கேடுகள் தொடர்பாகவுமே எதிர்க்கட்சித் தலைவர் பிரேரணை கொண்டு வந்திருக்கவேண்டும்.

கடந்த 10ஆம் திகதி நடைபெற்ற சம்பவம் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சித் தலைவர், இரண்டு பக்கத்தினரதும் நியாயங்களையும் அறிந்து செயற்பட்டிருக்க வேண்டும். வடக்கு மாகாண கல்வியமைச்சின் பொறுப்பற்ற செயற்பாடுகளால், ஆசிரியர்களின் ஜனநாயக உரிமை நசுக்கப்பட்டமை தொடர்பாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சிந்திக்க வேண்டும் - என்றுள்ளது. (வ-4)

# பௌத்த மயமாக்கல் நயினாதீவில் தீவிரம்

நயினாதீவில் பௌத்த சின்னங்களை அதிகரித்து, பௌத்த மத அடையாளங்களைப் பலப்படுத்தும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

இதன் ஒரு கட்டமாக, நயினாதீவு நாகதீப விகாரையில் புதிதாக புத்தர் சிலை ஒன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த 26ஆம் திகதி பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி கருங்கல்லில் செதுக்கப்பட்ட இந்தப் புத்தர் சிலையைத் திறந்து வைத்தார்.

நாகபாம்பு மீது புத்தர் தியானத்தில் அமர்ந்திருக்கும் வகையில் இந்தச் சிலை அமைக்கப்பட்டுள்ளது. கடற்படையில் இருந்து ஓய்வு பெற்ற லெப்.கொமாண்டர் ஜெயவர்த்தன இந்தச் சிலையை வடிவமைத்துள்ளார். (வ-5)

# வட்டக்கண்டல் படுகொலையின் 32ஆவது நினைவேந்தல் இன்று

மன்னார், ஜன. 30

மன்னார் மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவுக்குற்பட்ட வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் இடம்பெற்ற படுகொலையின் 32ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை என்று அறிவிக்கப்பட்டது.

வட்டக்கண்டல் கிராமத்தில் 1985ஆம் ஆண்டு இதே நாளில் மன்னார் வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை அதிபர் அமரர் வி.சுந்தரமூர்த்தி மற்றும் ஆசிரியர்களான ரி.மகேந்திரன் மற்றும் எஸ்.இரட்னதுரை உட்பட பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

வட்டக்கண்டல் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் அதிபர் ஏ.தேவதாஸ் தலைமையில் நடைபெறும் நிகழ்வில், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அமைச்சர் ரிசாத் பதியுதீன், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதி அவைத் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண அமைச்சர்களான த.குருகுலராஜா, பா.டெனீஸ்வரன், வடக்கு மாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா ஆகியோர் கலந்துகொள்வர் என்று தெரிவிக்கப்பட்டது. (வ-56)

# இந்தியாவிலிருந்து பஸ் சாரதிகளை வரவழைக்க யோசனை

கொழும்பு, ஜன. 30

இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சாரதிகள் கொண்டு வரப்பட வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

இலங்கையில் பேருந்து சாரதிகளுக்குப் பற்றாக்குறை காணப்படுகிறது. பேருந்து சாரதிகளின் பற்றாக்குறைக்குத் தீர்வாக இந்திய சாரதிகள் இலங்கையில் கடமையாற்ற அனுமதிக்கப்பட வேண்டும்.

இது தொடர்பிலான யோசனைத் திட்டமொன்று விரைவில் அரசிடம் சமர்ப்பிக்கப்படும். சாரதிகள் இல்லாத காரணத்தால் சில வீடுகளில் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்று சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (வ-4)

யாழ். மாவட்டச் செயலகம் முன்னுள்ள

# குப்பைத் தொட்டிகளால் பெரும் சுகாதாரக் கேடு

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள குப்பைத் தொட்டிகளில் துர்நாற்றம் வீசுகின்றது. வீதியில் செல்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர். கழிவுகளைச் சேகரிப்பதற்காக யாழ். மாநகர சபையினரால் குப்பைத் தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. குப்பைத் தொட்டிகள் கழிவுகளால் நிரம்பி வழிகின்றன. அவற்றுக்குச் சீரான கதவுகள் இல்லை. கழிவுகளை கட்டாக்காலி நாய்கள் இழுத்து வீதியில் பரவுகின்றன. அந்தப் பகுதி முழுவதும் துர்நாற்றம் வீசுகின்றது.

தற்போது பெய்த மழையால் சுகாதாரச் சீர்கேடும் ஏற்பட்டுள்ளது. குப்பைத் தொட்டிகளை முறையாகப் பராமரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது குப்பைத் தொட்டிகளை அகற்ற நடவடிக்கை எடுக்க வெண்டும்- என்று அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

யாழ். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக உள்ள குப்பைத் தொட்டிகள் தினமும் சுத்திகரிக்கப்படுகின்றன. ஞாயிற்றுக்கிழமைகளில் வரையறுக்கப்பட்ட சேவையின் காரணமாகச் சில வேளை கழிவுகள் அகற்றப்படாதிருக்கலாம். இது தொடர்பாகக் கவனம் எடுக்கப்படும்- என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்தார். (ந-288)

# பொருளாதாரத்தை சீர்குலைக்க முயன்றால் விளைவு விபரீதம்

## எச்சரிக்கின்றார் பிரதமர் ரணில்

கொழும்பு, ஜன.30

பணிப் புறக்கணிப்பு, ஆர்ப்பாட்டம் எனப் பல்வேறு போராட்டங்களை நடத்தி நாட்டின் பொருளாதாரத்தை சீர் குலைக்க எதிர்த்



தரப்பினர் முயற்சிப்பார்களாக இருந்தால், விளைவு மோசமானதாக இருக்கும்.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

அனுராதபுர மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சி செயற்பாட்டாளர்களுடன் நேற்று சந்திப்பு நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

நாம் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நிலையில் உள்ள நாட்டையே கையேற்றோம். 2015 இல் தேசிய அரசு ஒன்றை உருவாக்கத் தீர்மானித்தோம். பொருளாதாரத்தைச் சரிசெய்து நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தி வரும் போது அடிப்படை வாதிகள் பிரச்சினைப்படுத்துகின்றனர். அடிப்படைவாதிகள் தலை தூக்க முடியாதவிதத்தில் எமது வேலைத்திட்டத்தை முன்னெடுப்போம்.

எமது பயணத்தை தவிடுபொடியாக்க இடமளிக்க முடியாது. 2015ஆம் ஆண்டு தேர்தலின் பின்னர் நாம் விடுமுறையொன்றை எடுத்தோம். தற்பொழுது ஐக்கிய தேசியக் கட்சியை மீளமைக்க நடவடிக்கை எடுப்போம்- என்றார். (ந)

# ஓய்வூதியத்தை அதிகரிக்குமாறு ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜன. 30

ஓய்வூதியக் கொடுப்பனவு அதிகரித்தல் உள்ளிட்ட சில கோரிக்கைகளை முன்வைத்து ஓய்வு பெற்ற அரச பணியாளர்கள் சிலர் கண்டியில் நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரச பணியாளர்களுக்காக வழங்கப்படும் ஓய்வூதியக் கொடுப்பனவுகள் படிப்படியாக குறைகின்றது என்று ஓய்வுபெற்ற அரச பணியாளர்கள் சங்கங்கத்தின் உறுப்பினரான வணக்கத்துக்குரிய அகுனவில கஸ்சப்ப தேரர் குறிப்பிட்டார்.

அரச பணியாளர்களின் வேதனத்தை அதிகரிக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ள நிலையில், குறைந்த பட்சம் ஓய்வூதியக்காரர்களின் கொடுப்பனவுகளை ஓரளவேனும் அதிகரிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ந-4)

# ஊர்காவற்றுறைப் படுகொலை; விரைவான விசாரணை தேவை

*யாழ். பல்கலை. ஆசிரிய சங்கம் வலியுறுத்து*

யாழ்ப்பாணம், ஜன.30

யாழ். ஊர்காவற்றுறையில் வசித்த ஞானேஸ்வரன் மேரி ரம்சியாவின் படுகொலையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். குற்றவாளிகள் யாராக இருந்தாலும் காலந்தாழ்த்தாது விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தெரிவித்தது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டதாவது:

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலை தொடர்பான நீதிமன்ற விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இன்னும் விசாரணைகள் பூர்த்தியாகி குற்றவாளிகள் தண்டிக்கப்படாத நிலையில் தீவகப் பிரதேசத்தில் ரம்சியாவின் இந்தப் படுகொலையும் நிகழ்த்தப்பட்டிருக்கின்றது.

சாதாரண பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதுகாப்பற்று இருப்பதைப் பகல் நேரத்தில் நடந்த இந்தக் கொடூரமான படுகொலை வெளிக்காட்டுகின்றது.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் காலந்தாழ்த்தாது சட்டநடவடிக்கைகளுக்கு முன்நிறுத்தப்பட்டு பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டு கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும்.

அதேவேளை கிழக்கு மாகாணத்தில் நடைபெறவுள்ள எழுக தமிழ் நிகழ்வுக்கும் சங்கம் ஆதரவு வழங்குகின்றது - என்றும் அவர்களது மற்றொரு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந)

# ஆழ்கடல் மீன்பிடி வழமைக்கு

யாழ்ப்பாணம், ஜன.30

காலநிலை சீரானதை அடுத்து யாழ்.குடாநாட்டு மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியை ஆரம்பித்துள்ளனர்.

கடந்த வாரம் நிலவிய சீரற்ற காலநிலையால் மீனவர்கள் ஆழ்கடல் மீன்பிடியைத் தவிர்த்தனர். அதனால் குடாநாட்டில் கடலுணவுக்குப் பற்றாக்குறை காணப்பட்டது.

அதேவேளை, வடமராட்சிக் கிழக்குக் கடல் தொடர்ந்தும் கொந்தளிப்பாகக் காணப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டது. கடந்த புதன்கிழமை காலை மருதங்கேணி, கட்டைக்காட்டில் ஏற்பட்ட மினி சுறாவளிக் காற்றால் கரையில் நங்கூரமிடப்பட்டிருந்த படகு தூக்கி வீசப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ந-17)

# தப்பி வந்த கருணாவை வீரராக்கியது மகிந்தவே

## சரத் பொன்சேகா சீற்றம்

கொழும்பு, ஜன. 30

கருணா அம்மான் எனப்படும் விநாகமூர்த்தி முரளிதரன் பிரபாகரனிடமிருந்து தனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளவே தப்பி வந்தவர். அவரை வீரனாக்கியது மகிந்தவே.



இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கண்டியில் மல்வத்து அஸ்கிரிய தேரரை நேற்றுச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கருணா அம்மான் பிரபாகரனிடமிருந்து உயிரைக் காப்பாற்றிகொள்ள தப்பி வந்த ஒருவர். இவர் பிரபாகரனுடன் ஒன்றாக இருந்தவர். அவர் பிரபாகரனின் வீடு இருக்கும் இடத்தைக் கூட காட்டாதவர். எமது இராணுவமே பிரபாகரனின் வீட்டை கண்டுபிடித்தது. அவரை வீரராக்கியவர் மகிந்த ராஜபக்சவே - என்றார். (ந-4)

# வலி.கிழக்கில் திருடர்களால் அச்சம்

யாழ்ப்பாணம், ஜன.30

வலி.கிழக்குப் பிரதேசத்தில் வாள்வெட்டு, திருட்டுக் குற்றச் செயல்கள் அதிகரித்துள்ளன. மக்கள் இரவுப் பொழுதைப் பீதியுடன் கழிக்க வேண்டியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

பொலிஸ் மற்றும் அதிரடிப் படையினரின் இரவு ரோந்துப் பணிகள் குறைந்து காணப்படுவதைப் பயன்படுத்தித் திருடர்களின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்துள்ளது.

விவசாயத் தோட்டங்களில் வாழைக் குலைகளைக் களவாடிச் செல்வது மற்றும் வாள், கத்தி, பொல்லுகளுடன் வீடுகளுக்குப் புகுந்து திருட்டுச் சம்பவங்ளில் ஈடுபடுதல் அதிகரித்துள்ளன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர். (ந-17)

# பிரச்சினைகள் தொடர்பில் அரசுக்குக் கவலையில்லை

## சாடுகின்றது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன. 30

அரசுக்கு மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் கவலை இல்லை.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான அனுரகுமார திஸாநாயக்க குற்றஞ்சாட்டினார்.

அநுராதபுரத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

சிறந்த கல்வி இல்லையென்றால், போதுமான சுகாதார சேவை இல்லை என்றால், வாழ்வதற்கு ஜீவனோபாயம் இல்லை என்றால், இருப்பதற்கு இடமில்லை என்றால் ஏன் அரசை அமைக்கவேண்டும்?

இந்தக் கேள்வி எம்மிடம் இருக்கின்றது. ஆனால் மற்றவர்களிடம் இல்லை. மக்கள் மீது அக்கறையில்லாத தன்மையை இது காட்டுகிறது- என்றார். (ந-4)

# அமெரிக்க வருகையால் சுதந்திரத்துக்கு ஆபத்து

## திஸ்ஸ விதாரண அச்சம்

கொழும்பு, ஜன. 30



திருகோணமலையில் அமெரிக்கா தனது படைமுகாமை அமைப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறது. இதனால் நாட்டின் சுதந்திரம் மற்றும் சுயாதிபத்தியம் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

அங்கு அமெரிக்காவின் போர்க் கப்பல்களும் வரவுள்ளன. அதனால் எமது நாட்டுக்குக் கடும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இதனை இந்த அரசு ஏன் உணர்ந்து கொள்ளவில்லை? - என்றார். (ந-4)

# கொள்ளையுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது

கொழும்பு, ஜன. 30

நீர்கொழும்பு பிரதேசத்தில் இடம்பெற்ற பல கொள்ளைகளுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்களிடம் இருந்து அலைபேசிகள் மற்றும் திருப்பட்டதாகக் கூறப்படும் பல பொருள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் நீர்கொழும்பு கதான பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ந-4)

# காணி விடயத்தில் முஸ்லிம்களுக்கு துரோகம் இழைக்கவில்லை

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவிப்பு

கொக்கட்டிச்சோலை, ஜன.30
மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் மக்களுக்கு, தமிழ் மக்கள் காணி விடயத்தில் துரோகம் இழைக்கின்றோம் என ஒருசிலர் கூறுகின்றனர். அதில் உண்மையில்லை.

இவ்வாறு கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்தில் குடியிருப்புக் காணி, கடற்கரைக் காணி, மேட்டுநிலப் பயிர்செய்கைக் காணி, வயல்காணிகள், குளம், நீர்நிலைகளுக்காக ஒதுக்கப்பட்ட காணி, வனவிலங்குக்குரிய காணியென ஐந்து இலட்சத்து எழுபத்தையாயிரத்துக்கு மேற்பட்ட காணிகள் அண்ணளவாக உள்ளன.

அவற்றில் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும், குடியிருப்புக் காணிகள், வயல் காணிகள், மேட்டு நில பயிர்செய்கைக்காணிகள், மகாவலிக்குரிய காணிகள், இதுபோன்ற இன்னும் சில காணிகள் அடங்கலாக 23 வீதத்துக்கும் மேற்பட்ட காணிகள் முஸ்லிம் மக்களுக்கு உள்ளன.

பிரதேச செயலகத் தரவைப் பெறும் பட்சத்தில் அதற்கான சரியான தகவலைப் பெறமுடியும். 23 வீதத்துக்கும் மேற்பட்ட காணிகள் முஸ்லிம்களுக்கு உள்ளபோதிலும், 6 வீதம் எனக் கூறப்படுவதை நிராகரிக்கின்றேன்.

தமிழ் மக்கள் காணிவிடயத்தில் முஸ்லிம்களுக்கு துரோகம் செய்தார்கள் என்பதையும் நிராகரிக்கின்றேன் - என்றார். (ந-ய)

## கோயிலை சீரமைக்குமாறு கோரிக்கை

திருமலை, ஜன.30
திருகோணமலை, தென்னமரவாடிக் கிராமத்தில் உள்ள வரிசித்தி விநாயகர் ஆலயத்தை சீரமைத்து தர வேண்டும்என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

1984 டிசம்பர் மாதம் ஏற்பட்ட வன்செயல் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்துமுல்லைத்தீவு மாவட்டத்துக்கு இடம்பெயர்ந்தனர். 2011ஆம் ஆண்டு தென்னமரவாடி கிராமத்தில் மீள்குடியமர்த்தப்பட்டனர்.

அக்கிராமத்தில் உள்ள வரிசித்தி விநாயகர் ஆலயம் முழுமையாக சேதமாக்கப்பட்டிருந்தது. தொண்டு நிறுவனங்கள் மற்றும் அரசால் கோயிலை சீரமைக்க 40 இலட்சம் ரூபா வழங்கப்பட்டது. ஆனாலும் கோயில் நிர்மாணப் பணிகள் இன்னமும் நிறைவுபெறவில்லை. நிர்மாணப்பணிகளை கூடியவிரைவில்நிறைவு செய்ய வேண்டும் என்று கிராம மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ந-ய-45)

## இரு இறங்குதுறைகளை விடுவிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.30
வலி.வடக்கில் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள ஊறணி இறங்குதுறைகளில், இரு துறைகள் மீனவர்களின் பயன்பாட்டுக்கு ஒப்படைக்கப் படவுள்ளன.

ஊறணியில் அண்மையில் 2 ஏக்கர் நிலம் விடுவிக்கப்பட்டு அங்கு இறங்கு துறை அமைக்கப்பட்டது. அது நல்லிணக்கபுரம் கிராம மீனவர்களுக்கு வழங்கப்பட்டது. ஊறணியைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் பயன்படுத்த அனுமதி வழங்கப்படவில்லை.

தற்போது ஊறணியில் உள்ள 4 இறங்கு துறைகளில் இரு இறங்குதுறைகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஊறணியில் அண்மையில் ஒரு கிலோமீற்றர் காணி விடுவிக்கப்பட்டது. 200மீற்றர்நீளமான இறங்குதுறையுடன் கூடிய பகுதி இன்னமும் கடற்படையின் வசமுள்ளது. அந்தப் பிரதேசம் விடுவிக்கப்பட்டால், சுமார் 100 குடும்பங்கள் மீள்குடியமர வாய்ப்புக் கிட்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ந-101)



நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்திய கல்லூரியின் தொழில்நுட்ப ஆய்வுகூடம் அண்மையில் திறக்கப்பட்டது. கல்வி இராஜாங்க அமைச்சர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் ஆய்வுகூடத்தைத் திறந்து வைத்தார். (ந-ய)

**நாளை** தை-18
செவ்வாய்க்கிழமை -31.01.2017
திதி: சதுர்த்தி பி.இ. 04.17
நட்சத்திரம்: பூரட்டாதி மு.இ. 11.24
ராகுகாலம்:03.36-05.06 வரை
சுபநேரம்:11.06-12.36 வரை
சதுர்த்தி விரதம்




# மரண அறிவித்தல்

## வல்லிபுரம் சிவசூரியகுமாரன் (தவராசா)

(பிரபல தொழில் அதிபர்)

**தோற்றம்** 09.03.1951 **மறைவு** 29.01.2017



கரவெட்டி மத்தியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் சிவசூரியகுமாரன் (தவராசா) நேற்று (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - சிவகாமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சரஸ்வதியின் பாசமிகு கணவரும் தயாபரன், சுகந்தினி, குமுதினி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவைகுகன், இராகுலன், சிவகௌரி ஆகியோரின் அன்பு மாமனாரும் வைஸ்ணவி, சக்தி, விபூஷா, சஞ்ஷைய், பபிஷன், ஆதேஷ், அகிலேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக சோனப்பு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்தஅறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரவெட்டி மத்தி,**
**கரவெட்டி.**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

தொடர்பு: 077 234 7453

# மழை பெய்தும் பயனில்லை நெற்செய்கை பெரும் அழிவு

## விவசாயிகள் பொருளாதார இழப்பைச் சந்திப்பர் கமநல அபிவிருத்தித் திணைக்களம் தகவல்

முல்லைத்தீவு, ஜன.30

மழைவீழ்ச்சி கிடைத்தாலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான ஏக்கர் நெற்செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது. இதனால் இம் முறை பெரிய அளவிலான பொருளாதார இழப்பை விவசாயிகள் எதிர்நோக்கி உள்ளனர் என்று முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் செ.புனிதகுமார் தெரிவித்தார்.



அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்போது பெய்து வரும் மழையால், ஏற்கனவே உரிய காலத்தில் நீர் மற்றும் பசளை, கிருமி நாசினிகள் கிடைக்காமையால் அழிவை எதிர் நோக்கியுள்ள நெற்பயிர்களுக்கு எவ்வித பயன்களும் கிடைக்காத நிலையே காணப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்திற்குட்பட்ட 10 கமநல சேவைகள் நிலையங்களிலும் நெற் செய்கை பெரும் அழிவைச் சந்தித்துள்ளது.

முள்ளியவளை கமநல சேவை நிலையத்தின் கீழ் 1126 விவசாயிகள் 3 ஆயிரத்து 963.25 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், 630 விவசாயிகளின் 2ஆயிரத்து 171.5 ஏக்கர் நெற் செய்கையும், அளம்பில் கமநல சேவை நிலையத்தின் கீழ் 151 விவசாயிகள் 305 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், முழுவதும் அழிவடையும் இறுதி நிலையையும் எட்டியுள்ளது.

குமுளமுனை கமநல சேவை நிலையத்தின் கீழ் ஆயிரத்து 78 விவசாயிகள் 3 ஆயிரத்து 644 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், 210 விவசாயிகளின் 610 ஏக்கர் நெற் செய்கையும், கொக்குத்தொடுவாய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 300 விவசாயிகள் ஆயிரத்து 18.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில் 295 விவசாயிகளின் 884 ஏக்கர் நெற் செய்கையும், ஒட்டுசுட்டான் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 3 ஆயிரத்து 144 விவசாயிகள் 9 ஆயிரத்து 676 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், 2 ஆயிரத்து 874 விவசாயிகளின் 8ஆயிரத்து 730.95 ஏக்கர் நெற் செய்கையும், புதுக்குடியிருப்பு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 210 விவசாயிகள் 3ஆயிரத்து 538.5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், ஆயிரத்து 85 விவசாயிகளின் 2ஆயிரத்து 975.5 ஏக்கர் நெற் செய்கையும், ஒலுமடு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 588 விவசாயிகள் 2ஆயிரத்து 16.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், 550 விவசாயிகளின் ஆயிரத்து 616.25 ஏக்கர் நெற்செய்கையும், பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 674 விவசாயிகள், 5 ஆயிரத்து 428.5 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், 273 விவசாயிகளின் 829.75 ஏக்கர் நெற் செய்கையும், துணுக்காய் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள 2ஆயிரத்து 227 விவசாயிகள் 6ஆயிரத்து 841 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், ஆயிரத்து 778 விவசாயிகளின் 4ஆயிரத்து 598 ஏக்கர் நெற் செய்கையும், உடையார்கட்டு கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள ஆயிரத்து 435 விவசாயிகள் 3ஆயிரத்து 570 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், 832 விவசாயிகளின் ஆயிரத்து 791.5 ஏக்கர் நெற் செய்கையும் அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது.

ஒட்டு மொத்தமாக 12 ஆயிரத்து 928 விவசாயிகள் 40ஆயிரத்து 1.75 ஏக்கரில் நெல் பயிரிட்டுள்ள நிலையில், 8ஆயிரத்து 683 விவசாயிகளின் 22ஆயிரத்து 720.95 ஏக்கர் நெற் செய்கை அழிவடையும் இறுதி நிலையை எட்டியுள்ளது. இதனால் இம்முறை பெரிய அளவிலான பொருளாதார இழப்பை விவசாயிகள் எதிர்நோக்கிஉள்ளனர்- என்றார். (ஜ-21,7)




மாகாண உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் (திருத்தச்சட்டம்) சட்டத்தினால் பெண்களுக்கு கிடைக்கப்பெற்ற அரசியல் உரிமையைச் செயற்படுத்தும் நோக்கத்தோடு. மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையத்தின் ஏற்பாட்டில் 'உள்ளூராட்சி அரசியலில் பெண்களின் பங்களிப்பை வலுப்படுத்தல்' என்ற தொனிப்பொருளில் முல்லைத்தீவு மவாட்டத்தில் நேற்று கையெழுத்துப் போரட்டம் நடைபெற்றது. (ஜ-7)

# முல்லை. மருத்துவ சங்கத்தால் தேவிபுரத்தில் மருத்துவ முகாம்

முல்லைத்தீவு, ஜன.30

முல்லைத்தீவின் மருத்துவ சேவையை மேம்படுத்தும் நோக்கோடு உதயமாகிய முல்லை மருத்துவ சங்கத்தால் நேற்று தேவிபுரம் ஆரம்ப வைத்தியசாலையில் இலவச மருத்துவ முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் முல்லை மருத்துவ, சங்கத்தின் போசகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான, மருத்துவர் சி.சிவமோகன், மருத்துவர் சங்கத்தின் தலைவர் மருத்துவர் சுதர்சன் மற்றும் சிறப்பு மருத்துவர் நிபுணர்கள் ஏழு பேருடன் 20 இக்கும் மேற்பட்ட மருத்துவர்கள் கலந்து கொண்டு மருத்துவ சேவை வழங்கினர்.

இதில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவைச் சேர்ந்த பலகிராமங்களில் இருந்து மக்கள் கலந்து பயன்பெற்றனர். (ஜ-21)

ஏழாலை தெற்கு - வசந்தபுரம் - களபாவோடை
அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள்
தேவஸ்தானம்

மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2017



நிகழும் மங்கலகரமான துர்முகி ஆண்டு
தைத்திங்கள் 19ஆம் நாள் (01.02.2017)
புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்ற
வைபவத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து
10 தினங்கள் மஹோற்சவம் இடம்பெற
அம்பிகையின்
திருவருள் கைகூடியுள்ளது.

உற்சவ காலங்களில் (பத்து தினங்களும்)

காலை 07.00 மணிக்கு அபிஷேகம்
காலை 09.00 மணிக்கு மூலஸ்தானபூசை
காலை 09.30 மணிக்கு சொற்பொழிவு
காலை 09.45 மணிக்கு வசந்தமண்டப பூசை
முற்பகல் 11.00 மணிக்கு அன்னதானம் இடம்பெறும்

விசேட உற்சவங்கள்

கொடியேற்றம் - புதன்கிழமை - 01.02.2017 பூசை முற்பகல் 9.00 மணி
கொடியேற்றம் முற்பகல் 10.00 மணி.

வேட்டைத் திருவிழா - செவ்வாய்க்கிழமை - 07.02.2017 பூசை முற்பகல் 9.00 மணி
வேட்டைத்திருவிழா முற்பகல் 10.00 மணி.

சப்பறத் திருவிழா - புதன்கிழமை - 08.02.2017 பூசை முற்பகல் 9.00 மணி
சப்பறத் திருவிழா முற்பகல் 10.00 மணி.

தேர்த்திருவிழா - வியாழக்கிழமை - 09.02.2017 பூசை முற்பகல் 9.00 மணி.
தேர்த்திருவிழா முற்பகல் 10.00 மணி

தீர்த்தத் திருவிழா - வெள்ளிக்கிழமை - 10.02.2017 பூசை முற்பகல் 9.00 மணி
தீர்த்தம் முற்பகல் 10.00 மணி.

அன்னையின் திருவருள் பாரெங்கும் பொங்கிப் பொலிவதாக

அருள்மிகு வசந்தநாகபூசணி-
அம்பாள் தேவஸ்தானம்.

(C/27878)01,17,18)

# மாங்குளத்தில் பேருந்து நிலையத்தை அமைக்குமாறு மீண்டும் கோரிக்கை

## வடக்கு உள்ளூராட்சி அமைச்சுக்குக் கடிதம்

முல்லைத்தீவு,ஜன.30

முல்லைத்தீவு, மாங்குளத்தில் பேருந்து நிலையம் ஒன்றை அமைக்குமாறு வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளருக்கு வடமாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாங்குளத்தில் அமைக்கப்படும் பேருந்து நிலையத்தின் ஊடாக முல்லைத்தீவு, துணுக்காய், வெள்ளாங்குளம், முழங்காவில் ஆகிய பகுதிகளுக்கு பேரூந்துச் சேவைகளை நடத்த முடியும்.

மேற்படி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குறிப்பாக பாடசாலை மாண வர்கள், ஆசிரியர்கள் போக்குவரத்துச் செய் வதில் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ள நிலையில் மாங்குளத்தில் பேருந்து நிலையம் அமைப்பதன் ஊடாக போக்குவரத்துகள் இலகுபடுத்தப்படும்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில், போக்குவரத்து நெருக்கடிகள் மிகுந்த பகுதிகளாக மாந்தை கிழக்கு, துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுகள் காணப்படுகின்றன. இந்தப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள பேருந்துகள் பணியில் ஈடுபடாததன் காரணமாக பாடசாலைக்கு மாணவர்கள் நடந்தே செல்கின்றனர். பிற மாவட்டங்களில் இருந்து துணுக்காய், மாந்தை கிழக்குப் பகுதிக்கு, பணிக்கு வரும் உத்தியோகத்தர்கள் மாங்குளத்தில் நீண்ட நேரம் காத்திருந்தே பேருந்துகளில் பயணிக்கும் நிலைமை காணப்படுகின்றது.

இது தொடர்பாக 2010ஆம் ஆண்டில் இருந்து பிரதேச, மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் கோரிக்கைகள் விடுக்கப்பட்ட போதிலும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதன் காரணமாக போக்குவரத்து நெருக்கடிகள் தொடர்கின்றன. -என்றுள்ளது. (ஜ-21)

டெங்குக் கட்டுப்பாட்டு நடவடிக்கையில்

# 42 பேருக்கு எதிராக வழக்கு

யாழ்ப்பாணம்,ஜன.30
டெங்கு நுளம்பு பெருகும் இடங்கள் தொடர்பான சோதனை நடவடிக்கைகளில் 42 பேருக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யப்படும் என்று சுகாதார பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

இணுவில் மற்றும் சுன்னாகப் பகுதிகளில் டெங்கின் தாக்கம் அதிகமாக உள்ளதாக அறியப் பட்டதையடுத்து நேற்றையதினம் இணுவில் பொதுச் சுகாதார பிரிவினருடன் யாழ்ப்பாண மாவட்ட பொதுச் சுகாதாரச் சங்கம் இணைந்து 40பேர்கொண்டகுழு வினரால் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கை காலை 7 மணி முதல் நண்பகல் 12 மணிவரை இடம்பெற்றது. சுற்றிவளைப்பு நடவக்கைகளில் வலி. தெற்கு பிரதேச சபையின் முழு ஒத்து ழைப்புடன் கழிவுகளும் அகற்றப்பட்டன.

இந்தச் சோதனை நடவடிக்கையில் இணுவில் பகுதியில் 336 வீடுகள் பரிசோதிக்கப்பட்டன. அதில் 283 இடங்களில் நுளம்பு பெருகக்கூடிய இடங்கள் கண்டறியப்பட்டன. அத்துடன் 42 இடங்களில்நுளம்புக்குடம்பிகள் காணப்பட்டன. குறித்த 42 இடங்களின் உரிமையாளர்கள் மீது வழக்குத்தாக்கல்செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்துள்ளன என சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்தனர்.

இதேவேளை-சுன்னாகப் பிரதேசத்தில் மேற்கொண்ட பரிசோதனைகளின்போது 159 இடங்கள் பரிசோதிக்கப்பட்டன. அவற்றில் நுளம்பு பெருகக் கூடிய 85 இடங்கள் இனங் காணப்பட்டன.

அத்துடன் 15 இடங்களில் நுளம்பு குடம்பிகள் காணப்படும் இடங்களாகவும் இனங் காணப் பட்டுள்ளன. சுன்னாகத்தில் உள்ள முகாமிலேயே நுளம்புகள் பெருகும் அபாயங்கள் காணப்படுவதாக இனங்காணப் பட்டன. (ஐ-8)

அகவை அறுபதில் வாழ்த்துக்கள்
எமது நண்பன் திரு.வி. விஜயதாஸ்
அவர்களின் அன்பு அப்பா
திரு க. விஜயவாசன்
அவர்கள் இன்று (30.01.2017)திங்கட்கிழமை தனது 60 ஆவது அகவையில் காலடி எடுத்து வைப்பதையிட்டு எமது இதயங்கனிந்த வாழ்த்துக்கள்.
கீ. அச்சுதன், சாவகச்சேரி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்


29.01.2017 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற யாழ்.பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில்
கலைமாணி B.A பட்டம் பெற்ற
செல்வன் இராசேந்திரன் இராசகுலன் (B.A)
அவர்களை நாம் உளமாறப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேலும் பல பட்டங்கள் பெற்று உயர்வடைய இறை ஆசி வேண்டி வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துபவர்கள்:- (மகன்குடும்பம்)
அம்மா - இ.தங்கமணி
சகோதரிகள் - R.இராசமலர்
S. தவமலர்,R.இராணிமலர்
மருமக்கள் -R. நிருஜனன், R.நிருஜா
கொயிலாமனை, கொடிகாமம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் கல்வி பயின்று 2016 ஆம் உயர்தரப் பரீட்சையில்
கலைப்பிரிவில்
2A,B சித்தியடைந்த எமது அன்புச் செல்வம்
செல்வன் விநாயகமூர்த்தி ஜெனார்த்தன்
அவர்களை மனதார பாராட்டி வாழ்த்துவதுடன் எதிர்காலத்தில் கல்வியில் மேம்பட்டு இன்னும் பல பட்டங்கள் பதவிகளைப் பெறவேண்டுமென கைதடி வீரகத்திப் பிள்ளை யாரை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.
வாழ்த்துவோர்:
அப்பா,அம்மா,அண்ணாமார், அக்காமார், அத்தான்மார்,மருமகன்,பிரகதி

# 500 மாணவர்களுக்கு நிதியுதவி



கிளிநொச்சி, ஜன.30
கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 500 மாணவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் 3 வருடங்களுக்கு நிதி உதவி வழங்கும் ஆரம்ப நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

பிரதமர் அலுவலகம், சிறுவர் பெண்கள் விவகார அமைச்சு, சிறுவர் நன்னடத்தைத் திணைக்களம், கிளிநொச்சி மாவட்டச் செயலகம் ஆகியவற்றின் அனுசரணையில்கொழும்பு மயூரபதி அம்மன் நலன்புரி சங்கத்தினால் மேற்படி உதவித்திட்டம் முன்னெடுக்கப்பட் டுள்ளது.

கிளிநொச்சி-முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு 3 வருடங்களுக்கு தலா ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளது. இதற்காக வங்கிகணக்கு ஆரம்பிக்கப்பட்டுமாண வர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், சிறுவர் பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், வடக்கு மாகாண சபை உறுப்பினர் ப.அரியரத்தினம், பெண்கள் சிறுவர் விவகார அமைச்சின் செயலாளர் சந்திரராணி சேனாரட்ன, கிளிநொச்சி மாவட்டச் செயலர் சுந்தரம் அருமைநாயகம், மேலதிக அரச செயலர் சத்தியசீலன், கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் க.முருகவேல் மற்றும் மயூரபதி அம்மன் ஆலயநிர்வாகத்தினர் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஐ-35)

# தொடர்ச்சியான கிரவல் அகழ்வால் மண்ணரிப்பு ஏற்படும் அபாயம்

வன்னிவிளாங்குளம் மக்கள் அச்சத்தில்

முல்லைத்தீவு,ஜன.30
முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட வன்னி விளாங்குளம் பகுதியில் இடம்பெற்றுவரும் கிரவல் அகழ்வினால், அப்பிரதேசத்தில் மண்ணரிப்பு ஏற்படும் அபாயம் காணப்படுவதோடு சுற்றியுள்ள குடியிருப்புகளும் பாதிக்கப்படுவதாக மக்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

குறித்த பகுதியில் நிலங்களை விலைக்கு கொள்வனவு செய்யும் கிரவல் வியாபாரிகள், அருகில் இருக்கும் குடியிருப்புக்களைக் கருத்திற் கொள்ளாது கிரவல் அகழ்வில் ஈடுபடுகின்றனர். இதனால் வன்னிவிளாங்குளம் பகுதியைச் சேர்ந்த சுமார் 15 குடியிருப்பாளர்கள் மற்றும் விவசாயிகளும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர். கிரவல் அகழ்வுக்காகக் கடந்த காலத்தில் தோண்டப்பட்ட குழிகள் இன்னும் மூடப்படவில்லை. கடந்த காலத்தில் பிரதேச செயலாளர் மற்றும் பொலிஸாரும், பொதுமக்களும் இணைந்து கிரவல் அகழ்வைத் தடுத்து நிறுத்தியிருந்தனர். எனினும் தற்போது அகழ்வுகள் பெரியளவில் மேற்கொள்ளப்படுகின்றன. எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ஐ-21)

# சிறாட்டிகுளம் கிராமத்தில் காட்டுயானைகள் தொல்லை

முல்லைத்தீவு, ஜன.30
முல்லைத்தீவு மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம் கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகாரித்துக் காணப்படுவதாகவும், இதனால் தாங்கள் பல்வேறு சிரமங்களையும் உயிர் அச்சுறுத் தல்களையும் எதிர்கொள்வதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

முல்லைத்தீவு மாந்தை கிழக் குப்பிரதேச செயலாளர் பிரிவுக்கு கீழுள்ள சிறாட்டிகுளம் கிராமத் தில், தற்போது 67 வரையான குடும்பங்களும் இதனை அண் டிய உழவனூர் பகுதியில், 15 வரையான குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றனர். இவ் வாறு குறித்த கிராமங்களில் வாழும் மக்களின் பிரதான தொழிலாக விவசாயமே காணப் படுகின்றது. இந்த பகுதியில் காட்டுயானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது. மாலை 6 மணியானதும் பயிர் செய்கை நிலங்களிலும், குடிமனைக்குள்ளும் புகும் காட்டு யானைகள், பெருமளவான பயிர் செய்கைகளையும் பயன் தருமரங்களையும் அழித்து வருகின்றன. இவற்றைக் கட்டுப் படுத்தும் பொருட்டு, இரவு வேளைகளில் விழித்திருந்து காவல் காக்கவேண்டிய நிலை காணப்படுவதுடன், உயிர் அச் சுறுத்தல்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

எங்களது கிராமத்துக்கான பிரதான வீதியாக உள்ள நட்டாங் கண்டல், சிறாட்டிகுளம் வீதி, நீண்டதூரம் காட்டுப்பகுதியாகக் காணப்படுவதனால், மாலை வேளைகளிலும், அதிகாலையிலும் பயணிக்க முடியாத நிலை காணப்படுகின்றது.

எனவே மக்களை மீள்குடியேற்றிய அதிகாரிகள் இதனை கருத்திற்கொண்டு யானை களுடைய பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுதர வேண்டும்- என்றனர். (ஐ-21,7)




இயன் மருத்துவ சிகிச்சைக்கான கட்டில் ஒன்று, வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் உயிரிழை அமைப்பிடம் வழங்கி வைக்கப்பட்டது. (ஐ)

பணிப்பெண் தேவை
சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கியிருந்து பணி புரிவதற்கு பணிப்பெண் ஒருவர் தேவை.
076 636 7091, 077 262 6944

விற்பனைக்கு
40 நாள் நிரம்பிய டோமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
076 630 6686

மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பம் 1984, அவிட்டம் -2ஆம் பாதம், 7இல் செவ்வாய், கிரகபலம் 50. அரசதொழில் புரியும் மணமகனுக்கு அரச தொழில் புரியும் மணமகள் தேவை.
தொடர்பு: 021 223 0521

கொள்வனவு
நம்பினால் நம்புங்கள் 1 kg காட்போட் மட்டை 15/= இற்கு கொள்வனவு செய்யப்படும்.
தொடர்புகளுக்கு:-
071 524 0705

# கைதடி பிள்ளையார் ஆலயத்தில் உண்டியல் உடைத்துத் திருட்டு

யாழ்ப்பாணம், ஜன. 30

கைதடி வீரகத்திப் பிள்ளையார் ஆலய உண்டியல் நேற்று மதியம் உடைக்கப்பட்டு அதிலிருந்த பெருமளவான பணம் திருடப்பட்டுள்ளது. சாவகச்சேரி பொலிஸாருக்கு தெரியப்படுத்தப் பட்டும் அவர்கள் சம்பவ இடத்துக்கு வரவில்லை என்று ஆலய நிர்வாகத்தினர் குற்றம் சுமத்தினர்.

ஆலய வழிபாட்டுக்காக மாலை 6.30 மணிக்குச் சென்ற பூசகரே, உண்டியல் உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்துள்ளார். ஆலயத்தில் இதற்கு முன்னரும் உண்டியல் உடைக்கப்பட்டு திருட்டு இடம் பெற்றிருந்தமையினால், ஆலயத்தில் சி.சி.ரி.வி கமரா பொருத்தப்பட்டிருந்தது. அதில் ஒரு கமராவும் நேற்றைய தினம் திருடப்பட்டுள்ளது.

இதனையடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முறைப்பாடு பதிவு செய்ய ஆலய நிர்வாகத்தினர் சென்றனர். முறைப்பாட்டை பொலிஸார் ஏற்கவில்லை. சி.சி.ரி.வி கமரா காணொலிப் பதிவை பொலிஸ் நிலையம் கொண்டு வருமாறு அறிவுறுத்தினர். ஆலயத்துக்கு மீண்டும் திரும்பிய நிர்வாகத்தினர் 119 இற்கு அழைப்பை ஏற்படுத்தி முறைப்பாடு செய்தனர். 119 சேவைப் பொலிஸார் இரவு 9 மணியளவில் ஆலயத்துக்கு வந்து சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தினர்.

'ஆலயத்தின் உள்ளே ஏணி வைக்கப்பட்டிருந்த இடத்தைச் சரியாகத் தெரிந்து கொண்ட ஒருவர், ஆலயத்தின் வெளிப்புறச் சுவரின் ஊடாக ஏறி, ஏணி ஊடாக உள்ளே இறங்கி உண்டியலை உடைத்து திருடியுள்ளார்' என்று ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (வ-5-288)

## போராட்டங்கள் நடத்த வேண்டாம்

### *சிவாஜிலிங்கம் வலியுறுத்தல்*

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ்ப்பாணம், நாவற்குழிப் பகுதியில் சிங்கள மக்களுக்கான வீட்டுத்திட்ட அடிக்கல் நாட்டு விழாவை எதிர்த்து யாரும் போராட்டங்களில் ஈடுபட வேண்டாம் என்று வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் கேட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது

நாவற்குழியில் குடியேறியுள்ள மக்களை அழைத்து யாழ்ப்பாண மாவட்டச் செய லாளருடன் கடந்த வாரம் சந்திப்பை மேற்கொண்டி ருந்தோம். நாவற்குழியில் மேற்கொள்ளப்படவுள்ள வீட்டுத் திட்டம் தொடர்பில் கலந்துரையாடினோம். தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட இணைப்பாளர் ரவீந்திரனுடனும் சந்தித்துக் கலந்துரையாடினோம்.

கலந்துரையாடல்களின் போது யாழ்ப்பாண மாவட்டச் செயலாளர் என்னிடம் சில உறுதிமொழிகளை வழங்கினார்.வீட்டுத் திட்டங்கள் வழங்கப்படும் பயனாளிகளின் பட்டியல்கள் தயாரிக்கப்படும் போது இறுக்கமான நடைமுறைகள் பின் பற்றப்படும் என்று அவர் தெரிவித்தார்.

வீட்டுத்திட்டப் பயனாளிகளின் பட்டியலை நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோரிடம் காண்பித்து அனுமதியைப் பெற்ற பின்னரே பட்டி யலை கொழும்புக்கு அனுப்பவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளேன்.எனது கோரிக்கைகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலரும் ஏற்றுக் கொண்டார்- என்றார். (வ-8)

## கலாசாரத்துக்கு முரண்பாடான சட்டங்களை சு.க. கொண்டு வராது

### *அமைச்சர் சுசந்த புஞ்சிநிலமே தெரிவிப்பு*

கொழும்பு, ஜன.30

சுதந்திரக் கட்சியானது நாட்டின் கலாசாரத்துக்கு முரண்பாடான சட்டங்களை எப்போதும் கொண்டுவராது. தன்னினச்சேர்க்கையாளர் சட்ட வரைவை ஐக்கிய தேசியக் கட்சியே கொண்டு வந்தது. அப்படியான சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இடமளிக்க முடியாது என பொது நிர்வாக அமைச்சர் சுசந்த புஞ்சி நிலமே தெரிவித்தார்.



திருகோணமலை பேருந்துச் சங்கத்தின் 30ஆவது ஆண்டு நிறைவு விழாவில்; கலந்து கொண்ட பின்னர் செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும்போதே அமைச்சர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்துக்கு இந்தச் சட்டம் கொண்டு வரப்படவில்லை. எனக்குத் தெரிந்த வகையில் அமைச்சரவைக்குக் கொண்டு வரப்பட்டதாகவும், இந்தச் சட்ட வரைவு கொண்டு வரப்படும் போது நான் அங்கு இருக்கவில்லை. அமைச்சரவையில் வைத்தே அரச தலைவர் அதனை நிராகரித்து விட்டதாகவும் எனக்குத் தெரிய வந்தது. எனக்குத் தெரிந்த ஐக்கிய தேசிய கட்சி அமைச்சர் ஒருவரே இதனைக் கொண்டு வந்தார் -என்றார். (ஐ)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

**பொன்னம்பலம் நடராசா (நடா)**

தோற்றம் 18.08.1947 மறைவு 30.01.2015



*அன்போடும் பாசத்தோடும்*
*அரவணைத்த அப்பாவே !*
*ஆண்டுகள் நீளலாம்*
*உங்கள் நினைவு நீங்காது*
*எம் உயிராக உணர்வோடு*
*கலந்த அப்பாவே !*

*உம் நினைவுகளுடன் ஆன்மா சாந்திபெற வேண்டுகின்றோம்.*

73/3, றக்கா வீதி,
யாழ்ப்பாணம்.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் விசயரத்தினம்

**(ஓய்வு பெற்ற தலைமை புகையிரத பாதுகாவலர்)**

தும்பளையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் விசயரத்தினம் 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - அன்னம்மா தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற கமலாஜினியின் அன்புக்கணவரும் சுரேஷ்குமார் (ஜேர்மனி), வானதி, ஜெயக்குமார் (ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி வலயம்), சாந்தகுமார் (கனடா), கோமதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சிறிகாந்தன், கலாவதி, ஜெயராணி (கனடா), நகுலேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் நிருபா, திபாகர், மிலக்ஷா, ஜெறுஜா, நிதுஷா, ஜாதுஷன், அகத்தியன், அதிஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் றொன்ஜோசியா வின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட் கிழமை பி.ப. 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெளிச்சவீட்டு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

தும்பளை, பருத்தித்துறை.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### குமாரரெத்தினம் ஸ்ரீதரன் (ரவி)



வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குமாரரெத்தினம் ஸ்ரீதரன் 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான குமாரரெத்தினம் - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கந்தையா- பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் லலிதாதேவியின் (மணி) அன்புக்கணவரும் கருணாந்தசிவம் (கனடா), மணிமேகலா தேவி (ஆஸ்திரேலியா),சற்குணதேவி (கனடா), வரதலட்சுமி (கொக்குவில்),ராகுலன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான இ.க. நாகராசா,இ.க .தியாகராசா, இ.க. தங்கராசா,இ.க.யோகராசா மற்றும் இ.க .செல்வராசா (இந்தியா),தவமணிதேவி (அமெரிக்கா) காலஞ் சென்ற லீலாவதி மற்றும் சுகந்தாதேவி(கனடா).சுந்தர மூர்த்தி (ஆஸ்திரேலியா)காலஞ்சென்ற பத்மநாதன் (கனடா) மற்றும் அருள்தாஸ் (கொக்குவில்)பிரியாழினி(லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட் கிழமை பி.ப 3.00 மணியளவில் வேலணை கிழக்கு. முதலாம் வட்டாரத்தில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் .இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**மனைவி (லலிதாதேவி)**

## மரண அறிவித்தல்கள்

### திருமதி திரேசம்மா பிலீப் செல்லத்துரை



25,பூங்காவீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திரேசம்மா பிலிப் செல்லத்துரை 28.01.2017 சனிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லர் - முத்தம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஜேக்கப் தம்பதியரின் அன்பு மருமக ளும் காலஞ்சென்ற பிலிப் செல்லத்துரையின் அன்பு மனைவியும் பற்றிக், லற்றிசியா, பவா, தேவராஜா (மாப்பிள்ளை), காலஞ்சென்ற மார்சலின் அன்ரன் மற்றும் பேபி அவர்களின் பாசமிகு அன்புத் தாயாரும் காலஞ் சென்றவர்களான வின்சன், செசலியாப்பிள்ளை சவிரியம்மா, யேசுராஸ் மற்றும் அன்னம் ஆகியோரின் சகோதரியும் பத்திமா, ஊவாம்சலின், அல்பிறட், பட்டு, அமிர்தநாயகம், முத்துப்பிள்ளை ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 46/1 கடற்கரை வீதியில் உள்ள அன்னாரின் இல்லத்திலிருந்து இன்று (30.01.2017) திங்கட் கிழமை பி.ப 3.00 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக் காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



தோற்றம் 30.03.1930 மறைவு 29.01.2017

### சின்னத்தம்பி கந்தையா

உடுவில் தெற்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் இல. 222, விவேகானந்தநகர், கிளிநொச்சியைத் தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா நேற்று (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - மாணிக்கம் தம்பதியரின் மூத்தபுதல்வனும் காலஞ் சென்றவர்களான செல்லத்துரை - சின்னத்தங்கைச்சி தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சின்னக்கிளியின் அன்பு கணவரும் ரவீந்திரன், பத்மநாதன், ஜெயராணி, ஜெகதீஸ்வரி, ஜெகதீஸ்வரன், ஜெயக்குமார் (ஆசிரியர் - யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் லீலாவதி, இந்திராணி , சுந்தரப்பிள்ளை, சக்திவேல், சித்திரா, லலிதாஜினி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் இல. 222, விவேகானந்தநகர் மேற்கில் உள்ள அன்னாரின் மருமகனின் இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் இரணைமடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல. 222,
விவேகானந்த நகர் மேற்கு,
கிளிநொச்சி.

**தகவல்:**
**பா. சத்திவேல்**
**(மருமகன்)**

**077 786 9026**

## வயோதிபர் சாவு

அம்பாறை மாவட்டம் கல்முனைகிட்டங்கிபாலத்தில், வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்ட வயோதிபர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதாக சவளக்கடைப் பொலிஸார் தெரிவித்தனர். அம்பாறை உஹன பிரதேசத்தைச் சேர்ந்தபிஸ்யூபியசிறி (73) என்பவரே இவ்வாறு உயி ரிழந்துள்ளார்.

நேற்றுப்பகல் இவர் கல்முனையிலிருந்து மோட்டார்சைக்கிளில்உஹனை நோக்கிச் சென்றுகொண்டிருக்கும் போது கிட்டங்கிப் பாலத்தின் மேலால் வெள்ள நீர் பரவிப் பாய்ந்தோடியுள்ளது. அப்பொழுது மோட் டார் சைக்கிளை விட்டிறங்கி அதனைத் தள்ளிக்கொண்டுசெல்லும் போது கால்தடக்கி வழுக்கி விழுந்து வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-ய-46)

# இலங்கையில் வருடமொன்றுக்கு இரண்டாயிரம் தொழுநோயாளர்கள்

*உலக சுகாதார-நிறுவனம் தகவல்*

கொழும்பு,ஜன.30

இலங்கையில் வருடமொன்றுக்கு 2 ஆயிரம் புதிய தொழுநோயாளர்கள் இனங்காணப்படுகின்றனர் என உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உலக சுகாதார நிறுவனத்தின் உலகத் தொழுநோயாளர் நிகழ்ச்சித்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ள 22 முன்னுரிமை நாடுகளில் இலங்கை, இந்தியா, இந்தோனேஷியா, மியன்மார், நேபாளம் என்பன அடங்குவதாகவும், தொழுநோயாளர்களில் 10 சதவீதமானோர் சிறுவர்களாக உள்ளனரெனவும் இலங்கைக்கான உலக சுகாதார நிறுவனத்தின் தொடர்பாடல் உத்தியோகத்தர் கரென் றெய்டி தெரிவித்தார்.

'பன்னாட்டுரீதியாக 2 இலட்சத்து 12 ஆயிரம் தொழுநோயாளர்கள் உள்ளனர். இதில், 8.9 சதவீதமானோர் சிறுவர்கள். மொத்த நோயாளர்களில் 6.7 சதவீதமானோர் பார்வை குறைதல், சதை கரைதல் மற்றும் நகங்கள் நீளுதல் எனும் கடும் நோய்க் குறிகளைக் காட்டுபவர்களாக உள்ளனர்' என உலக சுகாதார ஸ்தாபனத்தின் பிராந்தியப் பணிப்பாளர் மருத்துவர் பூனம்சிங் தெரிவித்தார்.

'தொழுநோயாளர்களுக்கு எதிரான பாகுபாடுகளை அனுமதிக்கும் சட்டங்கள் இரத்துச் செய்யப்படவேண்டும். பேருந்துகளிலும், ரயில்களிலும் பயணிக்கும் உரிமையைத் தடை செய்தல், மருத்துவ அல்லது உரிமை அடிப்படையில், இவ்வாறான பாகுபாட்டை அனுமதிக்க முடியாது' எனவும், மருத்துவர் பூனம்சிங் மேலும் தெரிவித்தார். (ஐ)

## மைத்திரி தலைமையில்

# போதை ஒழிப்புப் பேரணி கிழக்கில்

மட்டக்களப்பு, ஜன.30

கிழக்கிலிருந்து போதையை ஒழிக்கும் விசேட வேலைத் திட்டத்தின் முதல்நாளான பெப்ரவரி முதலாம்திகதி முற்பகல் 10 மணிக்கு ஏறாவூரிலிருந்து ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்படும் போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணியில் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது விடயமாக முதலமைச்சரால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டம் மதுபானம் மற்றும் போதைப் பொருள் பாவனையில் மூன்றாவது இடத்தைப் பிடித்துள்ளது.

வடபகுதி யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையில் முதலாவது இடத்திலும், மத்திய மலைநாட்டின் நுவரெலியா மாவட்டம் இரண்டாவது இடத்திலுமுள்ளது.

எவ்வாறாயினும் கிழக்கு மாகாணத்திலிருந்து போதையை ஒழிப்பதன் ஊடாகவே இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்து மாகாணத்தில் வாழும் மக்களுக்கு நிறைவான வாழ்வை ஏற்பாடு செய்துதர முடியும்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் ஏறாவூரில் இருந்து நாட்டின் அதியுயர் பிரசையும் நாட்டின் தலைவருமான ஜனாதிபதியைக் கொண்டு அவர் தலைமையில் போதை ஒழிப்பு விழிப்புணர்வுப் பேரணி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

அண்மைக்கால புள்ளிவிவரங்களின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்டத்தில் போதைப் பொருளின் ஊடுருவல் அதிகரித்து வருவதையே காணமுடிகின்றது.

இதனைத்தடுப்பதற்கு முறையான பொறிமுறை அவசியம். போதைப் பொருள் பாவனை, விற்பனை தொடர்பான தகவல்களை வழங்குவதற்கு அச்சப்படும் சூழ்நிலை உள்ளதால் தகவல் வழங்குநரின் இரகசியத் தன்மை பாதுகாக்கப்படும் விதத்தில் பாதுகாப்புத் தரப்பு மற்றும் சிவில் சமூகத்தை உள்ளடக்கிய பொறிமுறையொன்றை உருவாக்குவது அவசியமாகவுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். (ஐ-ய-46,47)

# மட்டக்களப்புக் கடற்கரையில் ஆற்றுவாழை தாவரங்கள்

*மீனவர்கள் பாதிப்பு*



மட்டக்களப்பு, ஜன.30

கடந்த சில நாள்களாக பெய்துவந்த அடைமழை மற்றும் வெள்ள நீரோட்டத்தின் காரணமாக மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும்பாலான கடற்கரையோரமெங்கும் ஆற்றுவாழை எனும் வாவித் தாவரங்கள் திரண்டு காணப்படுவதால் தொழில் புரிவதில் சிரமம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர்.

காட்டாற்றுவெள்ளம் கடலுக்குள் ஓடிக் கலந்ததால் கூடவே வாவித் தாவரங்களும் நீரோட்டத்தில் அள்ளுண்டு சென்று கடலில் கலந்து அலைகளால் மீண்டும் கடற்கரையில் ஒதுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு, கல்லடி, டச்பார், காத்தான்குடி, ஏறாவூர், களுவன்கேணி, களுவாஞ்சிக்குடி போன்ற கடற்கரைகள் வாவித் தாவரங்களால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன.

காத்தான்குடி கடற்கரையோரம் முழுமையாக வாவித் தாவரங்களால் சூழப்பட்டுள்ளது.

இது ஒரு இயற்கையான நிகழ்வு என்று கூறும் மீனவர்கள். ஆயினும் இம்முறை பருவமழை பொய்த்துப் போனதால் அளவுக் கதிகமான வாவித் தாவரங்களும், ஜெலி மீன்கள் மற்றும் உவர்நீர் உயிரிகள் வாவியில் உற்பத்தியாகி வெள்ளத்தோடு பெருமளவில் கடலில் கலந்துள்ளன என்று தெரிவித்தனர்.

பல தொன் கணக் கான இந்த வாவித் தாவரங்கள் கடற்கரையை ஆக்கிரமித்துக்கொண்டுள்ளதால் தமது படகு மற்றும் தோணிகளை கடற்கரையில் நிறுத்தமுடியாத சிரமம் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவிக்கின்றனர். அதேவேளை, வலைகளிலும் இந்தத்தாவரங்கள் சிக்கிக் கொள்வதால் மீன்பிடியிலும் தடங்கல் ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (ஐ-ய-46)

## விற்பனை நிலையத்தில் கொள்ளை

கொழும்பு,ஜன.30

அம்பலந்தொட, லுனம பிரதேசத்தில் நேற்று விற்பனை நிலையத்தை உடைத்து பணம், பொருள்கள் பெரியளவில் கொள்ளையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுமார் 2 இலட்சத்து 20 ஆயிரத்து 40 ரூபா பெறுமதியான பொருள்களும், 5 இலட்சத்து 85 ஆயிரம் ரூபா பணமும் இவ்வாறு கொள்ளையிடப்பட்டுள்ளது. உரிமையாளர் நேற்றுக் காலை விற்பனை நிலையத்தை திறக்கச் சென்றுள்ள நிலையில நுழைவாயில் கதவு உடைக்கப்பட்டிருப்பதைக் கண்டதைத் தொடர்ந்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இந்தக் கொள்ளைச் சம்பவம் தொடர்பான சந்தேகநபர்களை கைது செய்வதற்காக கைவிரல் அடையாளம் பெறப்பட்டுள்ள நிலையில், மோப்ப நாய்களைப் பயன்படுத்தி விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர். (ஐ)

# படுகொலையின் பின்னணி புலிகளை அழிப்பதல்ல; தமிழனை அழிப்பதேயாகும்

*சார்ள்ஸ் எம்.பி. சாட்டை*

செங்கலடி, ஜன.30

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிங்கள பேரினவாதத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஒவ்வொரு படுகொலைகளும் திட்டமிட்ட முறையில் தமிழர்களை முற்றுமுழுதாக அழிக்க வேண்டும் என்ற நோக்கத்துடனேயே நடைபெற்றுள்ளன. அவர்களது நோக்கம் விடுதலைப் புலிகளை அழிப்பது அல்ல, தமிழனை அழிப்பதேயாகும்.

இவ்வாறு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவத்தின் 30வது ஆண்டு நினைவேந்தல் கடந்த சனிக்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது. இதில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர்மேலும்தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு மாவட்டத்திலே கொக்கொட்டிச்சோலை, புதுக்குடியிருப்பு, சத்துருக்கொண்டான் போன்ற பல இடங்களில் படுகொலைகள் நடைபெற்றுள்ளன. சத்துருக்கொண்டான் படுகொலை விசாரணைகள் 11 ஆண்டுகளாக முன்னாள் நீதியரசரின் தலைமையில்நடைபெற்றன. அதிலே குற்றவாளிகள் பாதுகாப்புத்தரப்பினர் அல்ல என தீர்ப்பு வந்தது.

கிழக்குப் பல்கலைக்கழக காணாமற்போனவர்கள் தொடர்பாக எந்தவித முடிவும் இல்லாமல் காணப்படுகிறது. இவ்வாறு எமது தாயகப் பகுதிகளில் பல சம்பவங்கள் நடைபெற்றுள்ளன.

தமிழினம் அழியவேண்டும் என்ற எண்ணத்தில் மாத்திரமே ஒவ்வொரு சிப்பாயும் எமது மக்கள் மீது துப்பாக்கியால் சுடுகின்றான். இந்தத் தீவில் சிங்கள பௌத்தம் மட்டும் இருக்க வேண்டும் என்ற நோக்கத்துக்காவே படுகொலைகள் நடைபெற்றுள்ளன.



ஒவ்வொரு படுகொலையின் பின்னும் அவர்களது பிள்ளைகள் ஆயுதம் ஏந்திய வரலாறுகள் பல உள்ளன. அவர்களுடைய மனங்களில் தோன்றிய வீரம்தான் ஆயுதப் போராட்டம். இங்கு நடைபெற்ற படுகொலைகள் எல்லாம் எமது இனத்தின் வரலாறு. நாங்கள் என்றோ ஒருநாள் வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தில் எங்களுக்குரிய தீர்வைப் பெற்றெடுப்போம். ஒவ்வொரு தமிழனும் உயிருள்ளவரை பேராடுவார்கள்.

படுகொலை செய்யப்பட்ட போது எமது இளைஞர்கள் எதிர்த்துப் போராடவில்லை என்றால் இன்று எமது இனம் இருந்திருக்காது. இந்தத் தீவு முற்றுமுழுதான சிங்களத் தீவாக இருந்திருக்கும். அந்தப் போராட்டங்கள் துன்பியல் சம்பவமாக மௌனித்துப் போனாலும் எங்களுடைய அடுத்த தலைமுறையாவது வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தில் வாழ வேண்டும்.

எமது இனத்துக்கு எதிராக நடந்த சகல படுகொலைகளுக்கும் பன்னாட்டு விசாரணை வேண்டும் என்பது தமிழினத்தின் கோரிக்கையாக உள்ளது. இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்ததிலிருந்து பல இளைஞர்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். இது தொடர்பில் பலர் ஆணைக்குழுக்கள் முன்னிலையில் சாட்சியமளித்தனர்.

ஆனால் சிறுபான்மை மக்களின் ஆதரவில் உருவாக்கப்பட்ட இந்த அரசு எங்களைக் கேவலமாக நடத்தும் விதமாக பதிலளிக்கிறது. காணாமற்போனவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றிருக்கலாம் அல்லது இறந்திருக்கலாம் என தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் உரையாற்றியுள்ளார். தமது உறவுகளை படையினரிடம் நேரடியாக கையளித்தவர்களுக்கு என்ன பதில் சொல்லப்போகிறீர்கள் என நாங்கள் கேட்கிறோம். அவர்களை யார் வெளிநாடு அனுப்பிவைத்தது. தலைமை அமைச்சர் நாட்டு மக்களின் மனங்களை மதித்து நடக்க வேண்டும் - என்றார். (ஐ-ய-47)

# வெளிச்சவீடு இன்மையால் முல்லை. மீனவர் திண்டாட்டம்

## அமைப்பதற்கு நிதி இல்லை என மாவட்டச் செயலாளர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.30

முல்லைத்தீவு கடற்கரையில் வெளிச்சவீடு கட்டப்படாமையால் மீனவர் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர். அங்கு வெளிச்சவீடு ஒன்றை அமைத்துத் தருமாறு அவர்கள் கடந்த 7 வருடங்களாகக் கோரி வருகின்றனர்.



"முல்லைத்தீவுக் கடற் கரையில் வெளிச்சவீடு அமைக்க வேண்டிய தேவை உள்ளது. அதற் கான நிதி கிடைக்கவில்லை. வெளிச்சவீடு அமைப்பது தொடர்பாக முன்னேற்றகரமான நடவடிக்கை எதும் நடைபெறவில்லை" இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவுக் கடற்கரை யில் அமைக்கப்பட்டிருந்த வெளிச்சவீடு 1990ஆம் ஆண்டு போரால் அழிவடைந்தது. 2009ஆம் ஆண்டு மக்கள் மீள் குடியமர்த் தப்பட்ட பின்னர் வெளிச்சவீடு அமைத்துத் தர வேண்டும் என்று கடற்றொழிலாளர்கள் கோரிக்கை விடுத்தனர். கடந்த ஆண்டு ஜூன் மாதம் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. வெளிச்சவீடு அமைக்க வேண்டியதன் அவசியத்தை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களப் பணிப்பாளர் சுதாகர், இணைத்தலைவர்களிடம் தெரிவித்தார். இணைத் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் ரிசாத் பதியூதீன் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்படும் என்று கூறினார். இதுவரை வெளிச்சவீடு அமைப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவில்லை. அது தொடர்பில் கருத்துத் தெரிவித்த போதே மாவட்ட செயலாளர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

"முல்லைத்தீவு மாவட்டத்தில் 3 ஆயி ரத்து 400 குடும்பங்கள் மீன்பிடியில் ஈடுபடுகின்றன. வெளிச்ச வீடு இன்மையால் மீனவர்கள் திசைமாறிச்செல்கின்றனர். வெளிச்ச வீடு அமைக்கப்படுவ தன் அவசியம் சுட்டிக்காட்டப்பட்டு கடந்த வருட ஆரம்பத்தில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலா ளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் ஊடாக முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களத்தினருக்கு மீனவர்களால் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இது தொடர்பாக பலரிடம் தெரியப்படுத்தியுள்ளோம். நிதி கிடைக்கவில்லை. வெளிச்ச வீடு அமைப்பதில் எந்த விதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை"- என்று மாவட்ட செயலாளர் கூறினார். (ந-21,7)



கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனைக்கு பல்லூடக எறியி கருவி, மடிக்கணினி என்பன வழங்கப்பட்டன. யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சித் தார்த்தனின் நிதி ஒதுக்கீட்டில் அவை வழங்கப்பட் டன. வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் அவற்றைக் கையளித்தார். (ந-10)

## பதுங்குகுழிகளை நிரவுமாறு முல்லை. மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி, ஜன.30

இறுதிப் போர் நடைபெற்ற பிரதேசங்களில் காணப்படும் பதுங்கு குழிகளை மூட வேண்டும் என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

அவர்கள் தெரிவித்ததாவது:

இறுதிப் போர் நடைபெற்ற மாத்தளன், அம்பலவன் பொக்கணை, வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால் போன்ற பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான பதுங்குழிகள் அமைக்கப்பட்டன. அவற்றில் பல இப்போதும் மூடப்படாதுள்ளன. அவற்றில் மழைவெள்ளம்தேங்கியுள்ளது. நுளம்புகளின் பெருக்கமும் அதிகரித்துள்ளது.

நீண்ட மண் அணைகளால் வெள்ளம் தேங்கி நிற்கின்றது. விவசாயம் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

கிராம மட்டத்திலும், பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம் என்பவற்றில் நடைபெற்ற கூட்டங்களில் இந்தப்பிரச்சினைகள் தொடர்பாக சுட்டிக்காட்டியிருந்தோம். பதுங்குழிகளை மூடி உக்காத பொருள்களை அகற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தோம்.

மாவட்டச் செயலாளர் எமது கோரிக்கையை கவனத்தில் எடுத்து ஆவன செய்ய வேண்டும்- என்றனர். (ந-35)

## பரு.இறங்குதுறை அபிவிருத்திக்கு காணிகள் சுவீகரிக்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.30

பருத்தித்துறை மீன்பிடி இறங்குதுறை அபிவிருத்திக்காக காணிகள் அடையாளப்படுத்தப் பட்டுள்ளன. இறங்குதுறை அபிவிருத்தி கொழும்பு அரசால் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கடற்றொழில் திணைக்களம் தெரிவித்தது.

இந்த அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 7 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி உதவியுடன் மேற்கொள்ளப்படவுள்ளன. கடற்கரையை அண்டிய 30 பேர்ச் காணி அபிவிருத்திக்காக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அடையாளப் படுத்தப்பட்ட காணிக்குள் வீடுகள் உள்ள ஐந்து காணிகள், உரிமைகோரப்படாத வெற்றுக் காணிகள், வீட்டுடனான உரிமை கோரப்படாத காணி என்பன அடங்குகின்றன.

அடையாளப்படுத்தப்பட்ட காணிகள் அபிவிருத்தியின்போது துறைமுகத்துக்காக கையகப்படுத் தப்படவுள்ளன. காணி மற்றும் வீட்டு உரிமையாளர்கள் அனைவருக்கும் உரிய இழப்பீடுகள் வழங்குவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.(ந-8)

## முல்லைத்தீவு அபிவிருத்திக்கு முக்கியத்துவம் தருகின்றோம்

### இந்தியத் துணைத் தூதுவர் நடராஜன் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஜன.30

முல்லைத்தீவுக்கு வந்து இங்குள்ளவர்களுடன் உரையாடும்போதே அவர்கள் எவ்வளவு இக்கட்டான சூழ்நிலையில் இருந்துள்ளனர் என்று தெரிகின்றது.

இவ்வாறு யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதுவர் ஆர். நடராஜன் தெரிவித்தார்.

யோ.வனிதா எழுதிய அன்னம் என்னும் கவிதைத் தொகுப்பு வெளியீடு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம், இனிய வாழ்வு இல்லத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது. அதில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே துணைத் தூதுவர் இவ்வாறு தெரிவித்தார்.

"வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்கள் புலம்பெயர்ந்து பல நாடுகளில் வாழ்ந்தாலும் தங்களுடைய கலாசாரங்களை மறக்கவில்லை. போர் முடிவடைந்து ஏழு வருடங்கள் கடந்துள்ள நிலையில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறுகின்றீர்கள். இந்திய அரசும் உதவிகள் செய்வதை எல்லோரும் அறிவோம்.

போரால் பல வகைகளிலும் பாதிக்கப்பட்ட முலலைத்தீவு மாவட்டத்துக்கு கடந்த காலத்தில் பல வீடுகள் இந்திய அரசால் வழங்கப்பட்டன. இந்திய வீட்டுத்திட்டத்தில் கூடுதலான வீடுகள் முல்லைத்தீவிலேயே கட்டப்பட்டன தற்போது முல்லைத்தீவு மாவட்டதில் உள்ள மீனவக் குடும்பங்களுக்கு 150 படகுகள் வழங்கவுள்ளோம்" என்று இந்திய துணைத்தூதுவர் கூறினார். (ந-7)

## மழையால் வீதி சேதம்

யாழ்ப்பாணம், ஜன.30

சில தினங்களுக்கு முன்னர் பெய்த மழையால் யாழ். நகரில் உள்ள முனீஸ்வரன் வீதி போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு சேதமடைந்துள்ளது. வீதியில் பெரிய அளவிலான குழிகள் ஏற்பட்டுள்ளன. வெள்ளம் தேங்கியுள்ளது.

இந்த வீதி விரைவில் சீரமைக்கப்படும். ஏற்கனவே இந்த வீதிக்கு குறுக்காகச் செல்லும் கந்தப்பர் சேகரம் வீதி தார் ஊற்றி சீரமைக்கப்பட்டுள்ளது என்று யாழ். மாநகர சபை ஆணையாளர் குறிப்பிட்டார். (ந-17)

# பன்னாட்டு விசாரணை மூலமே நீதி கிடைக்கும்

## நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் அரியநேத்திரன் தெரிவிப்பு

செங்கலடி, ஜன.30

இலங்கையில் தமிழினத்துக்கு எதிராகநடைபெற்றபடுகொலைகள் தொடர்பான உள்ளூர் விசாரணைகள் மீது நம்பிக்கை கொள்ள முடியாது என்பதற்கு கொக்கட்டிச்சோலைப் படுகொலைச் சம்பவத்தின் தீர்ப்பு ஒரு எடுத்துக்காட்டு. எனவே போர்க்குற்றங்களுக்கு பன்னாட்டு விசாரணையே வேண்டும்.

இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை படுகொலைச் சம்பவத்தின் 30 ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மகிழடித்தீவு சந்தியிலுள்ள நினைவுத்தூபிக்கு முன்பாக நடைபெற்றது.

அதில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கொக்கொட்டிச்சோலையில் சிறப்பு அதிரடிப்படையால் படுகொலைகள் செய்யப்பட்டபோது வணக்கத்துக்குரிய பிதாவான சந்திரா, வண்சிங்க ஆசிரியர் உட்பட பலர் இணைந்து படுகொலைக்காக குரல் கொடுத்தார்கள். இந்தச் சம்பவம் பன்னாட்டு அரங்கிலே பேசப்பட்டாலும் எந்தவொரு விசாரணைகளும் செய்யப்படவில்லை. 30 வருடங்கள் கடந்த போதிலும் இதுவரை நீதியில்லை.

இந்தப் படுகொலைகளை விசாரிப்பதற்காக 1991 ஜூன் 12ஆம் திகதி நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் பன்னாட்டு ரீதியாக ஒரு ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்தார். பலர் விசாரிக்கப்பட்டார்கள். சாட்சிக்காக சென்றவர்களுக்கு உதவுவதற்குஎந்தவொரு சட்டத்தரணியும் முன்வரவில்லை. அந்த நேரத்தில் மாமனிதர் குமார் பொன்னம்பலம் யாழ்ப்பாணத்திலிருந்து மட்டக்களப்புக்கு வந்து சாட்சிகளுக்காக குரல் கொடுத்தார்.

1991ஆம் ஆண்டுபடுகொலை தொடர்பான விசாரணையின் போது 6 இராணுவத்தளபதிகள் குற்றவாளிகளாக நீதி மன்றத்தில் இனங்காணப்பட்டு தூக்குத்தண்டனை வழங்கப்பட்டது. அவர்கள் மேன்முறையீடு செய்து விடுதலையானார்கள். இதுதான் இலங்கை அரசின் உள்ளூர் விசாரணையில் இருக்கக்கூடிய ஒருதாக்கம். உள்ளூர் விசாரணை என்பது எங்களுக்கு பரிகாரம் அல்ல பன்னாட்டு விசாரணை மூலமாகவே நாங்கள் எங்களுக்கான நீதியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பது வரலாற்று சான்றுகள்.

எமது உரிமைப் போராட்டத்தில் மூன்று இலட்சம் உறவுகளை இழந்துள்ளோம். 50 ஆயிரம் மாவீரர்களை ஆகுதியாக்கியுள்ளோம்.

எங்கள் சமூகம் எவ்வாறு இந்த மண்ணிலே வாழ்ந்தது என்ற வரலாற்றை எதிர்கால சமூகத்துக்கு கொண்டு செல்வதற்காகவே படுகொலை நினைவேந்தல் நிகழ்வுகளை செய்கிறோம்-என்றார். (ந-ய-47)

# மக்களை விலை கொடுத்து வாங்குவது போன்றது கொழும்பு அரசின் உதவிகள்

## வடக்கு முதலமைச்சர் விக்கி தெரிவிப்பு

கிளிநொச்சி, ஜன.30

வடக்கு மாகாணத்தில் இலட்சக்கணக்கான இராணுவத்தினரை நிலைநிறுத்திக் கொண்டு கொழும்பு அரசு உதவிகளை வழங்குவது எமது மக்களை விலை கொடுத்து வாங்குவது போன்று அமைகின்றது.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார். கல்விசார் உதவிகள் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி கூட்டுறவு மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. அதில் உரையாற்றும்போதே வடக்கு முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.



அவர் தெரிவித்ததாவது:

எமது உரித்துக்களைத் தராது, முகாமிட்டிருக்கும் ஒரு இலட்சத்து 50 ஆயிரம் இராணுவத்தினரை மீளப் பெறாது மக்கள் சேவையில் ஈடுபடுத்துவது எமது மக்களை விலை கொடுத்து வாங்குவதாகவே அமையும். இது அரசியல் தொடர்பான என் கருத்து. அதைக் கூற வேண்டியது எனது கடமை என்று நினைக்கின்றேன்.

அரசியல் எப்பேர்ப்பட்டது என்பதை இப்போதுதான் தெரிந்து கொள்கின்றேன். பணம் கொடுப்பது ஒரு சாரார். பயன் எடுப்பது ஒரு சாரார். அந்தக் கைங்கரியத்தில் குளிர்காய்வது மூன்றாம் தரப்பினர். எம்மால்தான் இது கிடைத்தது, அடுத்த தேர்தலில் எமக்கு வாக்குப் போடுங்கள் என்பார்கள் சிலர். அல்லது தமிழ் மக்களுக்கு நாம் செய்யும் சேவைகளைக் கண்ணுற்றீர்களா என்று ஜெனிவாவில் கேட்பார்கள் மறு சிலர்.

வடக்கு முதமைச்சரும் அதில் பங்காற்றியதால் வடக்கும், தெற்கும் இணைந்து விட்டது பார்த்தீர்களா?. நல்லிணக்கம் ஏற்பட்டு விட்டது என்பார்கள் அவர்கள். இவையெல்லாம் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு உரிய உரிமைகளைத் தராது கூறப்படும் கருத்துக்கள். அதைத்தான் நான் இங்கு சுட்டிக் காட்டுகின்றேன்.

தென்னாபிரிக்காவில் அரசியல் ரீதியான தீர்வொன்றைப் பெற்ற பின்னரே உண்மை, நல்லிணக்கக் குழு அமைக்கப்பட்டது. கொழும்பு அரசு நல்லிணக்கக் குழுவை அமைத்துவிட்டு நியாயமான அரசியல் தீர்வைத் தராது விடுமோ என்ற ஐயம் எம்மைப் பீடித்துள்ளது.

1987ஆம் ஆண்டு இலங்கை – இந்திய உடன்பாடு ஏற்பட்டது. மாவட்டச்செயலாளர் வடக்கு மாகாண அரசின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தார். இப்படியான நடவடிக்கைகள் நடைபெறும்போது அவை எமக்கும் தெரிந்தே நடைபெற்றன. 1992ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த பிரேமதாச ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து மாவட்டச் செயலாளர், கிராம அலுவலர்கள் போன்றோரை மத்தியின் கீழ் கொண்டு வந்தார். நிர்வாகம் இரண்டாகப் பிளவுபட்டது. ஒரு நிர்வாகம் மத்திய அரசின் கீழும், ஒரு நிர்வாகம் மாகாண அரசின் கீழும் முன்னெடுக்கப்பட்டது. முன்னைய அரசில் மூடியவாறே செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

தற்போதைய அரசின் நிலைமை சற்றுச் சீரடைந்துள்ளது. வெளிப்படைத்தன்மை சற்றுப் புலப்படுகின்றது.

தெற்கில் இருந்து வரும் சகோதரர்களையோ, கொழும்பு அரசுப் பிரதிநிதிகளையோ வரவேற்பதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. கடந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தொடர்பில் சில வார்த்தைகள் கூறினேன். கடந்த அரசின் கீழ் நாம் ஒருமித்துச் செயலாற்ற முனைந்த போது சில, பல சந்தேகங்கள் எம்முள் இருந்தன. தற்போதைய அரசில் அவை படிப்படியாகக் குறைந்து ஒரு சுமுகமான உறவை மத்திய அரசின் முகவரான மாவட்டச் செயலருடன் எம்மால் பேண முடிகின்றது என்றேன். எமது மக்களுக்காகவே நாம் அனைவரும் பாடுபடுகின்றோம். அதில் அரசியலும், கட்சிகளும் சேரும்போதே சில முரண்பாடுகள் ஏற்படுகின்றன.

500 குழந்தைகளை கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் இருந்து மத்திய அமைச்சுகள் மூலம் தேர்ந்தெடுத்துள்ளனர்.

அவர்களுக்கு மாதாந்தம் ஆயிரம் ரூபா வைப்பிலிடப்படுகின்றது. 500 மாணவ, மாணவியர்களுக்கு 180 இலட்சம் ரூபா வைப்பிடலிப்பட்டுள்ளது.– என்றார். (ற-8)



# சாணகத்தால் பாதீனியத்தை அழிக்கலாம்

## விவசாய ஆராய்ச்சியாளர் ரேவதி மாரிமுத்து சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜன.30

“பாதீனியத்தின் மேல் தொடர்ந்து சில நாள்களுக்கு சாணகம் கரைத்துத் தெளியுங்கள். அவை வாடி நிற்கும் நிலத்துக்கே உரமாகிவிடும். பின்னர் பயிர்ச் செய்கையை மேற்கொள்ள முடியும்”

இவ்வாறு தெரிவித்தார் விவசாய ஆராய்ச்சியாளர் ரேவதி மாரிமுத்து. தாய்மண் எழுச்சிப் பேருரை கடந்த 25 ஆம் திகதி யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெற்றது. அதில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

யாழ். மாவட்டத்தில் பெரும் பிரச்சினையாக பாதீனியம் உள்ளது என்பதை அறிந்து கொண்டேன். அவற்றை அழிக்க தனியொரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அறிந்தேன். பாதீனியம் ஒரு பயனற்ற செடி என்ற போதும் வளமான செடியாகும். அதனைப் பயன்படுத்தும் விதத்தில் பயன்படுத்தினால் பயன்களை பெற முடியும்.

பாதீனியத்தில் ஒருவித இரசாயனப் பதார்த்தங்கள் உள்ளன. அதனால் தான் அவற்றை பூச்சிகள் உண்பதில்லை. வேப்பிலையைப் பூச்சிகள் வெட்டுவதில்லை. அதிலும் ஒருவித இரசாயன கூறுகள் காணப்படுகின்றன. இப்படி சில தாவரங்கள், செடிகளை பூச்சிகளும் இனங்கண்டு வைத்துள்ளன. எலிகளைக் கட்டுப்படுத்தப் பல வழிமுறைகளை கையாள்கின்றோம். அதற்கென பிரத்தியேகமான கருவிகள் போன்றவற்றை கொள்வனவும் செய்கின்றோம்.

சீமைக்கிளுவை இலையை அரைத்து உணவுடன் கலந்து உங்கள் வீடுகளில் வையுங்கள். அதனை எலி உண்டதும் உடனடியாகவே இறந்து விடும்.

யாழ்ப்பாணத்தைச் சுற்றிப் பார்த்த போது அதிகளவான சீமைக்கிளுவைகள் வளர்ந்துள்ளதை அவதானித்தேன். பலர் அதைப் பயன்படுத்தத் தெரியாது ஒரு சாதாரண மரமாக பார்த்து வருகின்றனர்.

அதன் மூலம் பல பயன்களைப் பெற முடியும். அந்த மரத்தின் பட்டைகளையும், இலையை யும் அரைத்து ஒரு பானைக்குள் நீருடன் கலந்து விவசாய நிலங்களில் வைத்தால் அந்த நீரை அருந்திவிட்டு பூச்சிகள் இறக்கும். பூச்சிகளின் தாக்கத்தில் இருந்து பயிர்கள் காக்கப்படும் – என்றார்.

நிகழ்வில் பேராசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ற-8)

# விபத்தால் கோமாவில் இருந்தவர் நேற்றுச் சாவு

வவுனியா, ஜன.30

வவுனியா, கனகராயன் குளத்தில் ஒரு வருடத்துக்குமுன்னர் இடம்பெற்ற விபத்தால் கோமா நிலையில் இருந்த ஒரு பிள்ளையின் தந்தை நேற்று உயிரிழந்தார்.

சாவகச்சேரியை சொந்த இடமாகவும் முறிகண்டியை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா–ஜெம்சன் (வயது – 25) என்பவரே உயிரிழந்தார்.

கடந்த ஆண்டு மருந்து விற்பனை முகவர் நிலைய வாகனம் நிறுத்தப்பட்டிருந்தபோது, பின்புறம் வந்த வாகனம் மோதி விபத்து நடந்தது. அதில் ஜெம்சன் பாதிக்கப்பட்டு கோமா நிலையை அடைந்தார். அவர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று உயிரிழந்தார். (ற-101)

# அமெரிக்க ஒத்துழைப்புடன் வறுமை ஒழிப்பு திட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜன.30

வறுமை ஒழிப்பு, பொருளாதார அபிவிருத்தி ஆகிய திட்டங்கள் 15 மாவட்டங்களில் அமெரிக்காவின் ஒத்துழைப்புடன் முன்னெடுக்கப்படவுள்ளன.

திட்டத்தை முன்னெடுக்க அமெரிக்காவின் மிலேனியம் சவால் ஒத்துழைப்பு அமைப்பின் பிராந்திய பிரதித் தலைவர் பாத்திமா சமர் கொழும்பு வந்துள்ளார். அமெரிக்காவின் மிலேனியம் சவால் ஒத்துழைப்பு அமைப்பின் ஐந்தாண்டுகால நிரந்தர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலங்கை முழுமையாக உள்வாங்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல், வறுமை ஒழிப்பு போன்ற திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவை மையப்படுத்தி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச உயர்மட்ட அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் பெரிய அளவில் இந்தத் திட்டம் முன்னகர்த்தப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ற-50)

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில்
11.01.2017 அன்று நடைபெற்ற
32ஆவது பொதுப்பட்டமளிப்பு
விழாவில் தமிழில்
முதுகலைமாணி பட்டத்தைப்
பெற்ற எமது கல்லூரி ஆசிரியர்
திருமதி தேவகௌரி
யோகராசா
B.A(Hons),PGDE, M.A (Hons)
அவர்களை உளமாரப்
பாராட்டுவதோடு, மேலும் பல
பட்டங்களைப் பெற்று சிறப்புற வாழ
வாழ்த்துகின்றோம்.



Congratulations

வாழ்த்துவோர்:-
நல்லுறவு மன்றம்- யா/செங்குந்த இந்துக்கல்லூரி

# புதிதாக அமைக்கப்பட்ட பூங்கா மூடப்பட்ட நிலையில் பாழாகிறது

## கிளிநொச்சி மக்கள் விசனம்

கிளிநொச்சி, ஜன.30

கிளிநொச்சி மாவட்டத்தில் கடந்த ஆண்டு கரைச்சிப் பிரதேச சபையால் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டது. அந்தப் பூங்கா இதுவரை மக்கள் பயன்பாட்டுக்கு வழங்கப்படவில்லை.

இவ்வாறு மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இரணைமடுச் சந்தியில் கனகாம்பிகைக்குளத்துக்கு அருகே கடந்த ஆண்டு ஆரம்பித்தில் சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டது. இந்தப் பூங்காவுக்கு 8 லட்சம் ரூபா செலவு செய்யப்பட்டது. பூங்கா இதுவரை மக்கள் பாவனைக்கு விடப்படவில்லை. கால்நடைகளின் பொழுதுபோக்கு இடமாகவே அது மாறியுள்ளது. பூங்காவில் அமைக்கப்பட்ட விளையாட்டு உபகரணங்கள் பாழாகின்றன. – என்று பொதுமக்கள் தெரிவித்தனர்.

கரைச்சிப் பிரதேச சபையாலேயே பூங்கா அமைக்கப்பட்டது. பூங்காவுக்கான பணித் தொகுதி போன்ற விடயங்களாலேயே பூங்கா திறப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. பூங்காவை ஒரு பொது அமைப்பிடம் கையளித்து அவர்களூடாக மக்கள் பாவனைக்கு விட ஏற்பாடுகள் நடக்கின்றன– என்று பிரதேச சபைச் செயலாளர் தெரிவித்தார். (ற-101)



காணாமற்போனோர் விவகாரத்துக்கு பொறுப்புக் கூறவேண்டும் கூட்டு அரசு

# உறவினர்கள் அம்பாறையில் ஆர்ப்பாட்டம்

திருக்கோயில், ஜன. 30
காணாமல் ஆக்கப்பட்டோருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் கூட்டு அரசு உடனடியாகப் பொறுப்புக் கூற வேண்டும் என்று வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அம்பாறை திருக்கோவில் மணிக்கூட்டு கோபுரத்துக்கு முன்பாக நேற்று அமைதிப் பேரணி ஒன்றை நடத்தினர்.
கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான எந்தத் தகவல்களும் தங்களுக்கு இதுவரை கூட்டு அரசினால் வழங்கப்படவில்லை. குற்றம் செய்த வர்கள் வீதியில் உல்லாசமாக திரிகின்றபோது, குற்றம் செய்யாத எமது உறவு கள் இதுவரை எங்கு இருக்கின்றார்கள் என்று கூட தெரியாத நிலையில் இருக்கின்றோம் என்று உறவுகள் தெரிவித்தனர்.
"அரசே எங்களது பிள்ளைகளை உடனே விடுதலை செய், ஐக்கிய நாடுகள் சபையின் கோரிக்கைகளுக்கு செவி சாய்த்து எமது உறவுகளை விடுதலை செய், இலங்கை அரசே எமது கோரிக்கைகளை நிறைவேற்றித்தா, அடையாள உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஏற்றுக்கொள், ஓ.எம்.பி காரியாலயம் திறப்பதற்கு இலங்கை அரசே கைச்சாத்திட வேண்டும், இன, மத, பேதமின்றி நாடு முழுவதுமே காணாமல் ஆக்கப்பட்ட சம் பவங்கள் நடந்துள்ளன ஆகிய சுலோக அட்டைகளை ஏந்திய வாறும், அரசுக்கு எதிரான கோசங்களை எழுப்பியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்".
இந்த ஆர்ப்பாட்டத்தில் கிழக்கு மாகாண சபை உறுப்பினரிடம் எதிர்க் கட்சித் தலைவர் இரா சம்பந்தனிடம் கையளிக்குமாறு மனு ஒன்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் கையளிக்கப்பட்டது. (வ-4)

# வாய்ப்பைத் தவறவிட்டனர் வாழைச்சேனை மீனவர்கள்

## மீன்பிடி அமைச்சர் தெரிவிப்பு



வாழைச்சேனை,ஜன.30
பன்னாட்டுக் கடற்பரப்பில் மீன் பிடிப்பதற்குரிய வாய்ப்பை வாழைச் சேனை மீனவர்களுக்கு வழங்கினோம். எனினும் ஒருவர்கூட அதற்கு முன் வரவில்லை. இவ்வாறு கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.
ஆழ்கடல் கடற்றொழில் அலகு திறப்பு விழாவும், மீனவர்களுக்கு உதவி வழங்கும் நிகழ்வும் வாழைச்சேனை மீன்பிடித்துறை முகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்றது.
இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கடந்த காலங்களில் கடற்றொழில் அமைச்சினால் 55 அடிக்கு மேலுள்ள படகுகளை அறிமுகம் செய்து, 50 வீதமான மானிய அடிப்படையில் வழங்கி, பன்னாட்டுக் கடலில் சென்று மீன் பிடிக்க வாய்ப்பு வழங்கினோம். அறிவித்தல் கொடுத்தோம். ஆனால், இப் பிர தசத் தில் இருந்து இதற்கு யாரும் விண்ணப்பிக்கவில்லை.
நாங்கள் நினைப்பதெல்லாம் உங்களுடைய வாழ்வாதாரங்களை உயர்த்துவதற்கும், வருமானத்தை பெருக்குவதற்கும்தான். பன்னாட்டுக் கடலில் மீன் பிடிக்க ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டும், நீங்கள் இன்னும் விண்ணப்பிக்காமல் உள்ளீர்கள். நாட்டை முன்னேற்ற வேண்டுமென்றால், மீன் பிடித் தொழிலை முன்னேற்றம் செய்ய வேண்டும்.
மட்டக்களப்பு மாவட்டத் தில் 3 பிரதேசங்களில் மீன்பிடி மற்றும் இறால் வளர்ப்புத் திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். வாகரைப் பிரதேசத்தில் மிகப் பிரமாண்டமான திட்டத்தை ஆரம்பித்தபோது மக்களினதும், நாடாளு மன்ற உறுப்பினர் யோகேஸ்வரனதும் எதிர்ப்பால் இந்தத் திட்டம் மன்னாருக்குக் கொண்டு செல்லக்கூடியதாக இருந்தது.
இந்தத் திட்டத்துக்கு மன்னாரில் மூவாயிரம் ஏக்கர் வழங்கப்பட்டுள்ளது. இதில் பத்தாயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு வழங்கக். கூடிய சந்தர்ப்பத்தை நாங்கள் ஏற்படுத்தி உள்ளோம். எதிர் வரும் மார்ச் மாதமளவில் வேலைத் திட்டம் ஆரம்பிக்கவுள்ளோம்.
நான் பிரதிநிதித்துவப்படுத்தும் அம்பாந்தோட்டையிலும் மக்களின் ஆதரவின் மூலம் இவ்வாறான வேலைத்திட்டங்களை ஆரம்பித்துள்ளோம். அந்தப் பிரதேசத்துக்குப் போதியளவு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுக்க முடியும்.
தங்களால் கோரப்பட்ட விடயங்களுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு எனது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளேன். விரைவில் இப்பிரதேசத் துக்கு வருகை தந்து பாசிக்குடா பகுதியில் அமைக்கப்படவுள்ள மீனவர் தங்குமிடக் கட்டடத்தைத் திறந்து வைப்பேன்.
இப்பிரதேசத்தில் இருக்கும் மீனவர் குடும்பங்களுக்கு வீடமைப்பு மற்றும் மலசல கூட திட்டங்களை எதிர்காலத்தில் செய்து தர உள்ளேன்- என்றார். (ஐ)

## வடக்கு-கிழக்குப் பல்கலைக்கழகங்களில்

# இன விகிதாசாரத்துக்கேற்ப அனுமதி வழங்க வேண்டும்

## அமைச்சர் துரைராஜசிங்கம் வேண்டுகோள்

மட்டக்களப்பு,ஜன.30
வடக்கு-கிழக்கு மாகாணங்களிலுள்ள பல்கலைக்கழகங்களில் அம்மாகாணங்களிலுள்ள இன விகிதாசாரத்துக்கேற்ப மாணவர்களுக்கான அனுமதி வழங்கப்பட வேண்டும். இவ்வாறு செய்யும் போதே, இங்குள்ள பல்கலைக்கழகங்களில் குழப்ப நிலைமை ஏற்படாதிருக்கும் எனக் கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கம் தெரிவித்தார்.
மண்முனைப்பற்று பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட புதுக்குடியிருப்பு கண்ணகி மகா வித்தியாலயத்தில் இரண்டு மாடிக் கட்டடத்துக்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை நடைபெற்றபோதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையானது ஓர் இலக்கை நோக்கிச் செல்கின்றது.



தற்போது பொறுமை காக்க வேண்டிய தேவை உள்ளது என்று கூறும் அந்தத் தலைமையின் அனுபவம், ஆற்றலுக்குக் கட்டுப்பட்டவர்களாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப் பினர்கள் இருக்க வேண்டியது அவசியமாகும். தலைமையானது கூறும் விடயங்களை மக்களுக்கு கூற வேண்டியது பெரிய கடமை ஆகும்- என்றார். (ஐ)

## இம்மாதம் மட்டும் 6508 பேருக்கு டெங்கு

ஜனவரி மாதத்தில் நேற்றைய தினம் வரை நாட்டில் டெங்கு நோய்த் தொற்றுக்கு உள்ளாகிய 6 ஆயிரத்து 508 பேர் இனங்காணப்பட்டுள்ளனர். தொற்று நோய் ஆய்வுப் பிரிவு தெரிவித்தது.
இவற்றுள் நூற்றுக்கு 43 வீதமான டெங்கு நோயாளர்கள் மேல் மாகாணத்திலேயே இனங்காணப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.
நுளம்பு பெருகும் இடங்களைச் சூழலில் இருந்து தொடர்ந்தும் நீக்க வேண்டிய தேவை இதன்மூலம் தெளிவாவதாக, தொற்றுநோய் ஆய்வுப்பிரிவு சுட்டிக்காட்டியது. அத்துடன், மூன்று நாள்களுக்கு மேல் காய்ச்சல் இருப்பின் தாமதிக்காது மருத்துவரிடம் செல்லுமாறும், பொது மக்களிடம் அந்தப் பிரிவு கோரியுள்ளது. (ஐ)

## வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

29.12.2016 சிவபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர்
**சேதுகாவலர் கந்தசாமி**



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 08 . 1946 | 29 . 12 . 2016 |



பாசத்தின் ஒளி விளக்கே
உங்கள் வாழ்நாள் மறைந்து விட்டதப்பா
உங்கள் பணிகள் எம்மால்
என்றும் மறக்க முடியாதப்பா
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் இறுதிக்கிரியைகளின் போது பல வழிகளில் துணை நின்றவர்களுக்கும் உள்ளூர், வெளிநாடுகளிலிருந்து தொலைபேசி மூலம் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் நன்றி நவில்கின்றோம்.

- இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

மறவன்புலவு,
(கோவிலாக்கண்டி)

**நினைவுகளுடன்**
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

# 6 உணவுப் பொருள்களுக்கு அதிகபட்ச விலை நிர்ணயம்

கொழும்பு,ஜன.30
ஆறு உணவுப்பொருள்களுக்கு அரசால் அதிகபட்ச சில்லறை விலை நிர்ணயிக்கப்பட்டுள் ளதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை சிறப்பு வர்த்தமானி அறிவித்தலொன்றை வெளியிட் டுள்ளது.

இதனடிப்படையில் டுபாயில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் நெத்தலி 405 ரூபாவாகவும், தாய்லாந்தில் இருந்து இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் நெத்தலி 490 ரூபா எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒரு கிலோகிராம் மைசூர் பருப்பின் அதிகபட்ச சில்லறை விலை 159 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் பயறு 205 ரூபாவாகவும், ஒரு கிலோகிராம் வெள்ளைச் சீனி 93 ரூபாவாகவும், இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு ஒரு கிலோகிராம் 115 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தஅறிவித்தலைத் தொடர்ந்து, எந்தவொரு வர்த்தகர்களும் குறித்த பொருள்களை அதிகபட்ச சில்லறை விலைக்கு அதிகமாக விற்பனை செய்யவோ, விற்பனைக்காகக் காட்சிப்படுத்தவோ முடியாது என வர்த்தமானி அறிவித்தலில் சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. (ஐ)

# போகல சுரங்கத்தில் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தம்

கேகாலை, ஜன.30
கேகாலையில் அமைந்துள்ள போகல சுரங்கத்தின் அகழ்வுப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சுரங்கத்தின் மீது மலையொன்று சரிந்து விழுந்த போது, அங்கு பணியாற்றிக்கொண்டிருந்த போகலப் பகுதியைச்சேர்ந்த 42 வயதுடைய ஒருவர் உயிரிழந்தார். மேலும் இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவத்தின்போது,. படுகாயமடைந்தவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பேராதனைப் பொலிஸார், இது தொடர்புடைய மேலுதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான

# புதிய கட்டுப்பாடுகள் ஏப்ரலில் நடைமுறைக்கு



கொழும்பு,ஜன.30
முச்சக்கரவண்டி சாரதிகளுக்கான புதிய சட்டம் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரவுள்ளதாக போக்கு வரத்து அமைச்சு தெரிவித்தது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் கடந்த வாரம் வெளியிடப்பட்டது.

பொதுப்போக்குவரத்தில்ஈடுபடும்மற்றும்ஏனைய முச்சக்கரவண் டிகளில் கட்டாயம் மீற்றர் கருவி பொருத்துதல், முச்சக்கரவண்டி செலுத்தும் போது புகைப் பிடிப்பதைத் தவிர்த்தல் மற்றும் முச்சக்கரவண்டிகளில் பயணிப்போருக்கு சொந்தமான பொருள்கள் தவற விடப்படுமாயின் அதனை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தல் போன்ற சட்ட ஏற்பாடுகளுக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது.

இதேவேளை முச்சக்கர வண்டிச் சாரதியின் சாரதி அனு மதிப்பத்திர இலக்கம், நிழற்படம், வாகனம் பதிவுசெய்யப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தின் தொலைபேசி இலக்கம் மற்றும் சாரதியின் பெயர் என்பவற்றை பயணிகளுக்கு தெரியும்படி காட்சிப்படுத்த லும் முக்கியமானதென தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)




வீதிகளில் கூச்சலிடுவதால்
அரசின் திட்டங்களை முடக்க முடியாது

# மகிந்த அணிக்கு அரசு எச்சரிக்கை



கொழும்பு,ஜன.30
"வீதிகளில் கூச்சலிடுவதால் தேசிய அரசின் திட்டங்களை முடக்க முடியாது. எனவே மகிந்த ஆதரவு பொது எதிரணிக்கு அரசுடன் இணைந்து செயற்படும் வாய்ப்புகள் தற்போதும் உள்ளன. அதனால்உத்தேச அரசமைப்பு விவகாரத்தை மக்களிடத்தில் திரிபுபடுத்திக் காட்டி, தவறான அர்த்தங்களை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதைக் அவர்கள் நிறுத்த வேண்டும்" இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின்பொதுச் செயலாளரும் அமைச்சருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதிகளின் சந்திகளில் கூச்சலிடுபவர்களுக்கு அஞ்சி, அரசு தேசிய நல்லிணக்கத்துக்கான திட்டங்களையோ, அபிவிருத்தி இலக்குகளையோ விட்டுப் பின் வாங்காது. அனைவருக்கும்எம்முடன் இணைந்து செயற்பட வாய்ப்புகளும் சந்தர்ப்பங்களும் எப்போதும் உண்டு.

அரசமைப்பை உருவாக்கும்செயற்பாடுஎன்பதும் இன்னமும் பேச்சு மட்டத்தில் காணப்படுகின்ற ஒரு விடயமாகும். அதற்கு எதிராக குரல் எழுப்புகின்றவர்கள் அர்த்தமற்ற வகையில் கூச்சலிடுகின்றனரே தவிர, ஆக்கபூர்வமான பங்களிப்புகள் எதனையும் அவர்கள் செய்வதில்லை.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி என்றும் தேசிய இனப் பிரச்சினைக்கு நிலையான தீர்வை எட்டுவதற்கு அனைத்து தரப்பினர்களுடனும் வெளிப்படையான பேச்சுக்களை முன்னெடுத்து வருகின்றது எனவும் அவர் தெரிவித்தார். (ஐ)

# புறாக்களைத் திருடியவர் கைது

கொழும்பு,ஜன.30
புத்தளம், காரைதீவுப் பகுதியில் 2லட்சத்து 88 ஆயிரம் ரூபா பெறுமதியான 38 புறாக்களைத் திருடிய சந்தேக நபர் ஒருவரை, வனாத்த வில்லு பொலிஸார் கைது செய்தனர்.

பாடசாலை ஆசிரியர் ஒருவரால் கூடொன்றில் அடைக்கப்பட்டு வளர்க்கப் பட்டு வந்த புறாக்களை 22 வயதுடைய மீனவர் ஒருவர் திருடியதாக ஆசிரியரினால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இதன் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம், சந்தேக நபரைக் கைது செய்துள்ள பொலிஸார், அவரிடமிருந்து சில புறாக்களை மாத்திரம் மீட்டுள்ளனர். மிகுதிப் புறாக்களை அவர் விற்பனை செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

# கொள்ளையடித்த கறுப்புப் பணத்தில் பேரணி நடத்துகிறார் மகிந்த

கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

கொழும்பு,ஜன.30
கடந்த ஆட்சியில் கொள்ளையடித்ததன் மூலம் கிடைத்த கறுப்புப் பணத்தைக் கொண்டே மகிந்த அணி ஆர்ப்பாட்டங்களை நடத்துவ தாக கல்வி அமைச்சர் அகில விராஜ் காரியவசம் குற்றம் சுமத்தினார்.

அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டுஉரையாற்றிய போதே அவர் இவ் வாறு குற்றம் சுமத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஒன்றிணைந்த எதிர்க் கட்சியினர்தற்போது "மாற்றத்துக்கான ஆரம்பம்" என்றதலைப்பில்போராட்டங்கள், பேரணிகளை நடத்துகின்றனர். கடந்த காலத்தில் கொள்ளையிடப்பட்ட அரச சொத்துக்களின் மூலம் சேர்க்கப்பட்ட கறுப்புப்பணத்தினூடாகத்தான் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தக்கறுப்புப்பணத்தை கொண்டே ஆர்ப்பாட்டத்துக்காக ஆள்கள் சேர்க்கப்பட்டு,அவர்களுக்கான உணவு உட்பட்டபலவசதிகள் செய்து கொடுக்கப் படுகின்றன. இலங்கையில் 5 ஆயி ரம் ரூபா நாணயத் தாள் செல்லுபடியற்றதாக்கப்படும் பட்சத்தில்ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரின் இந்தப் போராட்டங்கள் முடிவுக்குக் கொண்டுவரப் படும்- என்றார். (ஐ)

# 15 பாடசாலைகளுக்கு எதிராக விசாரணை

கொழும்பு,ஜன.30
தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்க்கும் போது, முறைகேடுகள் இடம்பெற்றதாக கூறப் படும் 15 தேசிய பாட சாலைகளின் ஆவணங்களைப் பெற்று ஆரம்ப விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரி விக்கின்றன.

கொழும்பிலுள்ள பிரதான பாட சாலைகளில் சில, மற்றும் கண்டியிலுள்ள பாடசாலையொன்றும் இதற்குள் அடங்குவதாக அந்தத் தகவல்கள் மேலும் குறிப்பிட்டுள்ளன. (ஐ)

# தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு அவசியம்

*விரிவுரையாளர் சிவராஜா தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.30

"தொழுநோய் தொடர்பாக விழிப்புணர்வை மக்கள் பெற்றிருக்க வேண்டும். 2 அல்லது 3 வயதில் தொழுநோய் தொற்றினால் 30 அல்லது 40 வயதில்தான் அதன் அடையாளங்கள் பெரியளவில் தெரியவரும்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பல்கலைக் கழக சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளரும், உலக சுகாதார நிறுவனத்தின் முன்னாள் ஆலோசகருமான மருத்துவர் ந.சிவராஜா.

உலகதொழிலாளர் தின நிகழ்வு நேற்று சுழி புரம் பிரதேச சபை தலைமை அலுவலக மண்டபத்தில் நடைபெற்றது. பிராந்திய சுகதார சேவைகள் பணிப்பாளர் மருத்துசர் க.நந்தகுமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது-

தொழு நோய் என்பது பெரும் பிரச்சினையே. உலக சுகாதார நிறுவனத்தால் 1956ஆம் ஆண்டு இந்தத் தினம் ஆரம்பிக்கப்பட்டது. தொழுநோய் பைபிளின் காலத்திலிருந்து உள்ள ஒரு நோய். அந்தக் காலத்தில் ஒரு மனிதன் தொழுநோயாளராக இருந்தால் அவனை ஊருக்கு வெளியே கொண்டு சென்று குழி வெட்டி அதற்குள் போட்டுவிடுவார்கள். அவர் ஊருக்குள் வரமுடியாது. அப்படி ஒரு நிலைமை இருந்தது.

இன்று அப்படி இல்லை. தொழுநோயை மாற்றக் கூடியதாக இருக்கின்றது. 1978ஆம் ஆண்டு நான் ஊர்காவற்றுறையில் சுகாதார வைத்திய அதிகாரியாகப் பணியாற்றினேன். அப்போது புங்குடுதீவில் 72 தொழுநோயாளர்கள் இருந்தார்கள். அவர்களில் மூன்று பேர் தான் சிகிச்சை எடுத்தார்கள். ஏனையோர் சிகிச்சை எடுக்கவில்லை. ஏன் நீங்கள் சிகிச்சை எடுக்கவில்லை என்று கேட்டோம். தொழுநோயர்கள் என்று நாங்கள் இனங்காணப்பட்டோம் என்றால் எங்களை வேலையால் விரட்டி விடுவார்கள்.

அதனால் சிகிச்சை எடுப்பது இல்லை என்றார்கள். அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினோம். நோயைப் பற்றிக் கூறினோம். தொழுநோய் சின்ன வயதில் தொற்றுவதைத் தடுக்க வேண்டும். விரலில் முகத்தில் அடையாளங்கள் தென்படும். நாம் ஆரம்பித்திலே கண்டுபிடிக்க வேண்டும்- என்றார்.

நிகழ்வில் மாண்புறு விருந்தினராகக் கலந்து கொண்ட காவேரி கலாமன்ற நிறைவேற்று இயக்குநர் யோசுவா அடிகளார் உரையாற்றினார். நாம் எந்த தொழுநோயாளர்களையும் நோயாளர்கள் என்று பார்ப்பதில்லை. அவர்களை நம்மில் ஒருவராகத் தான் பார்க்க வேண்டும். அவ்வாறில்லாத பட்சத்தில் அவர்கள் தம்மை இனங்காட்டத் தயங்குவார்கள். தம்மை சமூகத்தில் இணைத்துக்கொள்ளத் தயங்குவார்கள்.

அவர்களுக்கு நாம் நம்பிக்கையை உருவாக்க வேண்டும். நான் 20 வருடங்களாக தொழுநோயாளர்களுடன் பணி செய்கின்றேன். இந்த நோய் பரவுவதற்கு காரணங்களை இனங்கண்டு சரியாக்கப்பட வேண்டும். தொழுநோய் என்பது தொற்று நோய் அல்ல என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம். கடந்த இருபது வருடங்களாக நான் இவர்களுடன் பயணித்திருக்கிறேன் எனக்கு அந்த நோய் வரவில்லை. தொழுநோய் தொடர்பிலான சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்"- என்று அவர் குறிப்பிட்டார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி செல்வின் இரேனியஸ் உரையாற்றினார். "பாடசாலை மாணவர்களுக்கு இது தொடர்பான சரியான விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். தொழுநோயின் தாக்கம் பற்றியதான ஆரம்ப கால அறிகுறிகள் மற்றும் மாற்றங்களை தெரியப்படுத்தக்கூடிய அறிவுறுத்தல்களை உரியவர்கள் வழங்க வேண்டும். நோய் ஏற்பட்டதும் ஆரம்பகாலத்தில் மேற்கொள்ளக் கூடிய சிகிச்சைகள் தொடர்பான அறிவுறுத்தல்கள் வழங்கப்பட வேண்டும்" என்று அவர் கூறினார். (ற-21,ரி)

# இராணுவத்திடம் ஒப்படைத்தோரை வெளிநாட்டில் தேடுவதா?

*சிவமோகன் எம்.பி. கேள்வி*

முல்லைத்தீவு, ஜன.29

"எமது கண்களுக்கு முன்பாக இராணுத்தினரிடம் ஒப்படைத்தவர்களுக்கு என்ன நடந்தது என்பதை அரசு கூற வேண்டும். இராணுவத்தினரிடம் ஒப்படைத்துவிட்டு அவர்களை வெளிநாட்டில் தேடுவதா?

இவ்வாறு கேள்வி எழுப்பினார் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன்.

புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தில் நேற்றுமுன்தினம் கவிதைத் தொகுப்பு வெளியீடு நடைபெற்றது. அதில் விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கலாசாரம் இனத்தின் அடையாளம். கலாசாரத்தை நிலைநிறுத்துவதற்கான ஓர் ஊடகம் கவிதை. நான் முல்லைத்தீவு மாவட்ட வைத்திய சாலையில் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் தினமும் காயப்பட்வர் களையும், இறந்தவர்களையும் வரவேற்பதற்காககாத்திருப்பேன். அந்தக் காலப் பகுதியில் உயரிய லட்சியத்துக்காகப் போராடினார்கள். இன்று யாரை இழப்போம் என்பது நாளையே தெரியும். அவ்வாறான ஒரு காலம்.

காணமாற்போன உறவுகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்ட போது எமது நாட்டின்தலைமை அமைச்சர் காணாமற்போனவர்களைத் தேடுவதாக இருந்தால் வெளிநாட்டில் தான் தேடவேண்டும் என்றார். நாம் எங்கள் கண்ணின் முன்னே ஒப்படைத்தவர்களைத்தான் தேடுகின்றோம். அவர்களை தேடி நாம் வெளிநாடு செல்லமுடியாது. பாலச்சந்திரன் ஒரு சிறுவன். உங்கள் கண்முன்னே உயிருடன் கொடுக்கப்பட்டவன். ஆதாரங்கள் வெளிப்படையாக உள்ளன. உங்கள் கண்முன்னே கொடுத்தவர்கள் இல்லை என்பது எங்களுக்குத் தெரியும். அதை உங்கள் வாயால் சொல்லுங்கள். அவர்கள் கொல்லப்பட்டுவிட்டார்களா?. யாரால் கொல்லப்பட்டார்கள் என்பதைக் கூறுங்கள். எங்களுக்கு ஒரு பதில் வேண்டும். அது நீதியாக வேண்டும். வெறும் வார்த்தைகளால் வேண்டாம்.

இவற்றுக்கு யார் காரணமாக இருந்தார்களோ அவர்கள் இன்று பாதுகாப்பாக வாழ்கின்றார்கள். நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் எங்கள் மக்கள் போராடுகின்றார்கள்-என்றார். (ற-21,7)

## நிர்வாக தெரிவு

கைதடி,ஜன.30

கைதடி தெற்கு சன சமூக நிலையத்தின் 2017 ஆம் ஆண்டுக்கான புதியநிர்வாகத்தெரிவுகள் அண்மையில் நடைபெற்றது.

தலைவராக மா.நகுலேஸ் வரனும், செயலாளராக பொ.ஜெல்வராஜாவும்,பொருளாளராக வ.பத்மநாதனும் தெரிவாகினர். (ற-288)



# நடைபாதை வியாபாரிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை

நுவரெலியா, ஜன.30

நுவரெலியா, சீத்தாஎலிய பகுதியில் இருந்து நுவரெலியா கண்டி முதன்மை வீதியின் வெஸ்டடோ பகுதிவரை அமைக்கப்பட்டுள்ள தற்காலிக மரக்கறி விற்பனை நிலையங்களையும், நடைபாதை வியாபார நிலையங்களையும் அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நுவரெலியாவின் இயற்கை அழகைப் பாதுகாக்கும் வகையிலும் இங்கு வருகின்ற உல்லாசப் பயணிகள் நுவரெலியாவில் அமைக்கப்பட்டுள்ள வியாபார நிலையங்களில் பொருள்களை கொள்வனவு செய்வதற்கு வசதியாகவுமே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுவரெலியாவில் அமைந்துள்ள வர்த்தக நிலையங்களின் உரிமையாளர்கள் கடந்த காலங்களில் செய்து வந்த தொடர்ச்சியான முறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுவரெலியா நகரில் நடைபாதைகளில் வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் பொதுமக் கள் பல சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். பாடசாலை மாணவர்கள் மழை காலங்களில் பிரதான பாதையில் பயணிக்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. அதை யடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது- என்றார். (ற-ய)




"Ammanai Saran Addainthal Athika Varamperalam"
SHRI.KANAGA THURRKAI AMMAN (HINDU) TEMPLE TRUST
Founded on 10-08- 1991 Charity No: 1014409
5 CHAPEL ROAD LONDON W13 9AE. TEL: 020 8810 0835 020 8840 0485
www.ammanealing.org Email: info@ammanealing.org

எமது ஆலயத்தில் கீழ்வரும் பணிநிலைகளுக்கான தகுதியான விண்ணப்பங்கள் வேண்டப்படுகின்றன.



பணிநிலை: 1 ஆலய சிவாச்சாரியார்
Hindu religious workers with non pastoral role

தகமைகள்: விண்ணப்பதாரி சிவாச்சாரியார் பட்டம் (குருக்கள்) பெற்றிருக்க வேண்டும். தமது பணிக்காலங்களில் சிவாச்சாரியாராகப் பணியாற்றியிருக்க வேண்டும்.
இறுதி 5 வருடங்கள் ஆலயக் குருக்களாகப் பணி செய்திருக்கவேண்டும்.

கடமைகள்: ஆகம விதிமுறைப்படி ஆலயத்தில் பூசைகள் செய்தல்.

வேதனம்: பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.
விண்ணப்பதாரிகளின் சிறப்புத் தகமைகளை கவனத்தில் கொண்டு நிர்ணயம் செய்வதுடன் அடியார்கள் வழங்கும் தட்சணை பங்கிடப்பட்டு வழங்கப்படும்.

விண்ணப்ப முடிவு திகதி: 19-02-2017

பணிநிலை: 2 நாதஸ்வர, தவில் கலைஞர்கள்
Hindu Religious (Musicians) Workers

தகமைகள்: நாதஸ்வர, தவில் மேதைகளுக்கான சான்றிதழ்களைக் கொண்டிருப்பதுடன் தமது பிராய காலத்திலிருந்து இப்பணியைச் செய்து கொண்டிருப்பவராக இருக்கவேண்டும்.

கடமைகள்: ஆலய பூசைக்காலங்களில் மங்கள இசை இசைத்தல்.

வேதனம்: பிரித்தானிய வேதன முறைமைகளுக்கமைவானது.

விண்ணப்ப முடிவு திகதி: 19-02-2017

ஆலய இணையத்தளத்தில் (www.ammanealing.org) பணிநிலை வேண்டுகைக்கான விண்ணப்பப்படிவம் தரவேற்றப்பட்டுள்ளது. விருப்புடையோர் அதனைப் பதிவிறக்கி, பூர்த்தி செய்து ஆலய முகவரிக்கு அனுப்பி வைக்கும்படி வேண்டுகின்றோம்.

# அகதிகள் விடயத்தில் ட்ரம்புக்கு எதிர்ப்பலை

வொஷிங்ரன், ஜன. 30
அகதிகளுக்கு எதிராக அமெரிக்கா தனது கதவுகளை மூடியுள்ள நிலையில் ட்ரம்ப்பின் இந்த நிலைப்பாட்டுக்கு உலகத் தலைவர்கள் பிரபலங்கள் எனப் பலரும் தமது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

**மலாலாவின் கருத்து**
அமைதிக்கான நோபல் பரிசு வென்றவரும் பாகிஸ்தானின் சமூக ஆர்வலருமான மலாலா, போர் மற்றும் வன்முறையால் தங்கள் நாடுகளை விட்டு வெளியேறி வரும் குழந்கைள், தாய்மார்கள் ஆகியோருக்கான கதவை அதிபர் ட்ரம்ப் அடைக்கிறார் என்பதை அறிந்து மனமுடைந்து போனேன். புது வாழ்க்கை கிடைக்கும் என்பதற்காக கடுமையாக உழைத்து உங்கள் நாட்டை கட்டமைக்க உதவிய மக்களை வரவேற்ற நாடு என்ற பெருமைக்குரிய பெயரை அமெரிக்கா இழப்பதை எண்ணியும் நான் மனமுடைந்துள்ளேன். தாங்கள் செய்யாத தவறுக்காக கடந்த ஆறாண்டு காலமாக உள்நாட்டுப் போரால் பாதிக்கப்பட்டுள்ள சிரியா நாட்டு குழந்தைகள் இந்த உத்தரவால் வஞ்சிக்கப்படுவதை எண்ணியும் நான் வேதனை அடைகிறேன்.
உலகில் பாதுகாப்பற்ற அகதிகளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கைவிட்டு விடக்கூடாது என அவர் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளார்.

**சுந்தர்பிச்சை வேதனை**
கூகுள் நிறுவனத்தில் தலைமை செயல் அதிகாரி சுந்தர் பிச்சை, இந்த தீர்மானம் எங்களை வேதனையில் ஆழ்த்தியுள்ளது. இது கூகுள் பணியாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தாருக்கும் கட்டுப்பாடுகளை விதிக்கிறது. மேலும் அமெரிக்காவுக்குத் திறமைகளைக் கொண்டு வருவதிலும் இது கட்டுப்பாடுகளை ஏற்படுத்துகிறது எனத் தெரிவித்தார்.

**மார்க் கொதிப்பு**
பேஸ்புக் நிறுவுநரான மார்க், உங்களில் பலருக்கும் ஏற்பட்டிருக்கும் கவலை என்னையும் ஆட்கொண்டிருக்கிறது. அதிபர் ட்ரம்ப் கையெழுத்திட்டுள்ள அகதிகள் தொடர்பான புதிய குடியுரிமைக் கொள்கை செயலாக்க உத்தரவு வேதனை தருகிறது. இந்த நாட்டை பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ஆனால், அதற்கு பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பவர்களையே குறிவைக்க வேண்டும் எனத் தெரிவித்தார்.
அமெரிக்காவின் இந்த முடிவு கவலையளிக்கின்றது. போர் நடைபெறும் பகுதிகளில் இருந்து வெளியேறும் மக்களை நாம்தான் வரவேற்கவேண்டும். எல்லைகளை மூடுதல் தீர்வாகாது என பிரான்ஸ் அயலுறவுத் துறை அமைச்சர் ஜீன் தெரிவித்தார். (ம-எ)





# அகதிகள் விடயங்களில் முடிவை மாற்றவேண்டும்

## ட்ரம்புக்கு ஐ.நா. அழுத்தம்

வொஷிங்ரன், ஜன. 30
அகதிகளை ஏற்க முடியாது என்று தெரிவித்து அதற்குரிய உத்தரவுகளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பிறப்பித்துள்ள நிலையில் அவர் தனது முடிவை மாற்றவேண்டும். அதுவே அந்த நாட்டின் பாரம்பரியம் என்று ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்தியது.
அமெரிக்காவின் அதிபராகப் பொறுப்பேற்றுள்ள ட்ரம்ப், தான் தேர்தல் பரப்புரைகளில் வலியுறுத்தி வந்ததைப் போல அகதிகள் விடயத்தில் மிகவும் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்றுகிறார். ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள ஈராக், சிரிய நாடுகள் உட்பட 7 நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்குள் நுழைய முடியாது என்று அவர் தடை விதித்துள்ளார். உலகை உலுக்கிக் கொண்டிருக்கும் முடிவாக இது அமைந்தது. இந்த நிலையிலேயே ட்ரம்ப் தனது முடிவை மாற்ற வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் சபை கேட்டுள்ளது.
ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகளுக்கான அமைப்பு மற்றும் பன்னாட்டு குறியேற்ற அமைப்பு ஆகியன இணைந்து கூட்டறிக்கை ஒன்றை நேற்று முன்தினம் வெளியிட்டன.
அதில், அகதிகளை ஆதரிக்க வேண்டும் என்று அமெரிக்கா கொண்டுள்ள நீண்டகால கொள்கையானது இரட்டை வெற்றியை வழங்கியது. முதலாவது, உலகில் மிகவும் பாதிக்கப்படும் மக்களில் சிலரை மீட்பது, இரண்டாவது, புதிய சமூகங்களில் அவர்களை வளப்படுத்துவது என்பனவே அவை. உலகளவில் அகதிகள் மற்றும் குடியேறுவோர் அந்தந்த நாடுகளுக்கு வழங்கும் பங்களிப்பும் சிறப்பாக உள்ளது. எனவே, மோதல் மற்றும் அடக்குமுறையில் இருந்து தப்பி வரும் அகதிகளை பாதுகாக்கும் அமெரிக்காவின் நீண்ட கால பாரம்பரியம், புதிய தலைமையிலும் தொடர வேண்டும். மதம், தேசியம் மற்றும் இனத்தை பொருட்படுத்தாமல் பாதுகாப்பு, உதவி மற்றும் மீள்குடியேற்ற வாய்ப்புகளில் அகதிகள் சமமாக நடத்தப்பட அமெரிக்கா வழி வகை செய்யும் என்று நம்புகின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டது. (ம-எ)

# மத்திய கிழக்குத் தலைவர்களுடன் ட்ரம்ப் ஆலோசனை

அமெரிக்க அதிபர் ட்ரம்ப் சவூதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு இராச்சியத் தலைவர்களு டனும் மத்திய கிழக்கு நாடுகளின் அதிபர்கள் சிலருடனும் நேற்று தொலைபேசியில் உரையாடினார் என பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. எந்தெந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது என்று அறிவிக்கப்படவில்லை. ஆனால், அகதிகள் விவகாரம் தொடர்பில் ஆலோசித்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. (ம-எ)

# 40 துருக்கிச் சிப் ஜேர்மனிடம் அ

பெர்லின், ஜன. 30
துருக்கியில் கடந்த ஜூலை மாதம் அதிப
ராணுவப் புரட்சி நடந்தது. ஆனால் அ
உதவியுடன் முறியடிக்கப் பட்டது.
புரட்சியில் ஈடுபட்ட ராணுவச் சிப்பா
மற்றும் பல துறைகளைச் சேர்ந்த
செய்யப்பட்டனர். பதவி நீக்கமும் செய்ய
பதவி நீக்கம் செய்யப்பட்ட 40 இரா
ஜேர்மனியிடம் தஞ்சம் கேட்டுள்ளனர்.
தொடர்பில் ஜேர்மன் அரசு எந்
வெளியிடவில்லை.



# மெரீனாவில் தடையுத்தரவு

சென்னை, ஜன. 30
சென்னை மெரினாவில் நேற்றுமுதல் பெப்ரவரி 12 ஆம் திகதி வரை 144 ஆவது தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதன்படி ஆர்ப்பாட்டங்கள், கண்டனக் கூட்டங்கள், ஊர்வலங்கள் ஆகிய நடத்தப்படுவதும் தடைக்குள்ளானது.
"மெரினாவில் தேவையற்ற விதத்தில் மீண்டும் ஒரு போராட்டம் நடத்தப்பட வாய்ப்புள்ளதாகத் தெரியவருகிறது. இதனால் குறித்த அசம்பவிதங்களைத் தடுக்கவே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப் பட்டது. பொதுமக்கள், சிறுவர்கள் மற்றும் நடைப் பயிற்சி மேற்கொள்பவர்களுக்கு இந்தத் தடையுத்தரவு பொருந்தாது" என்று தமிழ்நாட்டு பொலிஸ்பிரிவு கூடுதல் ஆணையாளர் சங்கர் தெரிவித்தார். (ம-எ)



நேற்றுமுன்தினம் சீனப் புத்தாண்டு நடைபெற்ற நிலையில், அதைமுன்ன
பெரிய ஒளி விளக்குத் திருவிழா ஏற்பாடு செய்யப்பட்டது. பல்வேறுப
அலங்கரிக்கப்பட்டன. பல்லாயிரக்கணக்கான மக்கள் அவற்றைச் செ

# ஆங்கிலேயக் கால்வாயில் பதற்றம்; ரஷ்யப் போர்க் கப்பல் சென்றதால்



லண்டன், ஜன. 30
சிரியாவில் இருந்து நாடு திரும்பிய ரஷ்யப் போர்க்கப்பல் ஆங்கிலங் கால்வாயினூடாக சென்றதை அடுத்து அந்தப் பகுதியில் சிறு பதற்றம் ஏற்பட்டது.

சிரிய ஜனாதிபதி அல் அசாத்துக்கு எதிராகவும் அவர் தலைமையிலான அரசுக்கு எதிராகவும் சிரியாவில் கடந்த ஐந்து வருடங்களாகப் போர் நடைபெற்று வந்தது. சிரியாவின் இரண்டாவது பெரிய நகரான அலெப்போ அரசுக்கு எதிராக கிளர்ச்சிக் குழுக்களின் பிடியில் இருந்தது. சிரிய அரசுக்கு ஆதரவாக ரஷ்யா களமிறங்கியது. ரஷ்யாவின் ஆதரவுடன் ஆயுதக் குழுவின் பிடியிருந்த பகுதிகளை மீட்டது சிரிய அரசு.

சிரியாவில் முகாமிட்டிருந்த படைகளைக் குறைக்கும் பணியில் தற்போது ரஷ்யா ஈடுபட்டுள்ளது. ரஷ்யாவின் விமானம் தாங்கி போர்க்கப்பலான அட்மிரல் குஸ்தாவ் உட்பட ஐந்து போர்க்கப்பல்கள் சிரியாவில் இருந்து நேற்றுமுன்தினம் நாடுதிரும்பின. ஆங்கிலக் கால்வாயினூடாக அவை சென்றபோது சிறு பதற்றம் ஏற்பட்டது. ரஷ்யக் கப்பல்கள் பிரிட்டனின் கடற்பரப்பை நெருங்கியபோது, அவற்றை எதிர்கொள்ளும் வகையில் பிரிட்டனும் போர்க்கப்பல்களை தயார் நிலையில் வைத்திருந்தது.

மூன்று போர் விமானங்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டன. இந்தத் தகவலை பிரிட்டன் உறுதிப்படுத்தியது. (ம-எ)

## ...சிப்பாய்கள் ...டைக்கலம்

...திபர் எர்டகனுக்கு எதிராக ...அது பொது மக்களின்

...பாய்கள், பொலிஸார் ...த அதிகாரிகள் கைது ...ய்யப்பட்டனர். அவ்வாறு ...இராணுவச் சிப்பாய்கள் ...னர். ஆனால் அவர்கள் ...எந்தத் தகவலையும் (ம-எ)





# கம்பளா போராட்டம் மிகத் தீவிரம்

மங்களூர், ஜன. 30
ஜல்லிக்கட்டுக்கு எதிரான தடையை தமிழ்நாட்டு அரசு விலக்கியது போல் கம்பளாவுக்கான தடையை (சேற்றில் எருமையைவிரட்டிச்செல்லும்விளையாட்டு) கர்நாடக அரசு விலக்க வேண்டும் என்று வலியுறுத்தி அங்கு பரவலான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

மிருகவதை என்று தெரித்து ஜல்லிக்கட்டு நடத்த தடை விதிக்கப்பட்டிருந்தது. மெரீனாவில் லட்சக் கணக்கான இளைஞர்கள் மற்றும் சிறுவர்கள் இணைந்து நடத்திய போராட்டத்தின் எதிரொலியாக அவசர சட்டம் இயற் றப்பட்டு ஜல்லிக்கட்டின் மீதான தடை இல்லாமல் செய்யப்பட்டது.

தமிழ்நாட்டில் ஜல்லிக்கட்டைப் போல் கர்நாடகாவில் கம்பளா விளையாட்டு மிகவும் பிரபலம். இதனால் கம்பாளாவுக்கான தடையை நீக்க கர்நாடக அரசு நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தி பல்லா யிரக் கணக்கான இளைஞர்கள் மற்றும் பொதுமக்கள் இணைந்து போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். முதல்வர் சித்திராமைய அவசரச் சட்டம் கொண்டு வந்து தடையை நீக்க நடவடிக்கை எடுக்கவுள்ளார் என்று சில ஊடகங்கள் குறிப்பிட்டன. (ம-எ)

## சார்க்கை நடத்தும் நம்பிக்கை பாகிஸ்தானிடம்

இஸ்லாமபாத், ஜன. 30
கடந்த வருடம் நவம்பர் மா... பாகிஸ்தானில் நடக்கவிரு... சார்க் மாநாடு, கைவிடப்ப... அடுத்து அந்த மாநாட்டை ந... தும் நம்பிக்கையை பாகிஸ்தா... வெளியிட்டது.

பாகிஸ்தான் – இந்தியா இடை... லான எல்லைப் பிரச்சினையை... அடுத்து இந்தியா மாநாட்டி... இருந்து விலகுவதாக முதல... அறிவித்தது. இந்தியாவைத் தொடர்ந்து பங்களாதேஷ், நேபாளம் போன்ற நாடுகளும் மாநாட்டைப் புறக்கணித்தமையால் கடைசியில் அது நடைபெறாமல் போனது. இந்த நிலையில் மாநாட்டை நடத்தும் நம்பிக்கையை பாகிஸ்தான் மீண்டும் வெளிப்படுத்தியது. (ம-எ)

## மலேசியப் படகு மாயம்

கோலாலம்பூர், ஜன. 30
மலேசியாவில் சுற்றுலாப் பயணிகளுடன் சென்ற படகு மாயமானதால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது. 31 பேருடன் சென்ற படகில், 20 பேர் சீனர்கள் என அதிகாரிகள் தெரிவித்தனர். கொட்டா கின்னாபலு என்ற இடத்தில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்ட படகே அவ்வாறு தொடர்பை இழந்தது. படகைத் தேடும் பணியில், மலேசிய கப்பல்கள் மற்றும் உலங்குவானூர்திகள் ஈடுபட் டுள்ளன. ஆனால் மாலை வரை எந்தத் தடயமும் கிடைக்க வில்லை இதனால் படகில் பயணித்தவர்கள் நிலை குறித்து அச்சம் வெளியிடப்பட்டது. (ம-எ)



...னிட்டு லண்டனின் சிக்விஸ் ஹவுஸ் பகுதியில் மிகப் ...பட்ட வடிவங்களில் ஒளிவிளக்குகள் செய்யப்பட்டு ...ன்று பார்வையிட்டு வருகின்றனர். (ம-எ)


# மரண அறிவித்தல்

பிறப்பு
28 . 02 . 1930



இறப்பு
27 . 01 . 2017

## சிவகுரு சரவணமுத்து

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுரு சரவணமுத்து 27.01.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு - பார்வதி தம்பதியரின் கடைசி மகனும் காலஞ்சென்ற இரத்தினபூபதியின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களான சிவகாமசுந்தரி, கணபதிப்பிள்ளை, பொன்னம்பலம், கந்தவனம், சின்னம்மா, தங்கம்மா, செல்லத்துரை, பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் தயாளினி (கொழும்பு), ஜெயாளினி (டென்மார்க்), ஜீவா (கனடா), புவனேந்திரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற நிர்மலகுமாரன் மற்றும் யோகேந்திரன் (டென்மார்க்), ஜீவசறோ (கனடா), தனல்ட்சுமி (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷிகா, றுகுக்குலன் (கனடா), லசித்தா, ஜனகன், முகுந்தன் (கனடா), டிஷோகாந் (கொழும்பு), நிறுத்திகா ( டென்மார்க்), நிறேக்கா (டென்மார்க்), நிவேக்கா (டென்மார்க்), லக்ஷன் (டென்மார்க்), சஜீவன் (கனடா), விதுஷன் (கனடா), அஷோக் (கனடா), ...க்ஷனா (கனடா), அக்ஷன் (கனடா), அர்ச்சனா (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனு..., நவீன் (கனடா), நித்தின் (கனடா) ஆகியோரின் அன்புப்பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட்கிழ... பிற்பகல் ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியை...க்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அ... உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

197, ஜீ பி எஸ் றோட்,
கல்வியங்காடு.

தகவல்:
பிள்ளைகள்.
077 377 9465




# நவீன 1000 சிசி தர டொயோட்டா 'விகோ' வாகனம் சந்தைக்கு

## டொயோட்டா லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனம் அறிமுகப்படுத்தியது

இலங்கையில் டொயோட்டா வாகனங்களுக்கான ஏக விநியோகஸ்தர்களாக திகமும் டொயோட்டா லங்கா (பிரைவேட்) லிமிடெட் நிறுவனமானது தமது நவீன 1000 சிசி தர டொயோட்டா 'விகோ' வாகனத்தை சந்தைக்கு அறிமுகம் செய்துள்ளதான தகவலை வெளிப்படுத்தியள்ளது.
இதன்படி 'விகோ' வாகனமானது இலங்கையில் டொயோட்டா லங்கா நிறுவனத்தின் முதலாவது சந்தை அறிமுக மென தெரிவிக்கப்பட் டுள்ளது.
அத்துடன் இவை உயர்தரத்தினை கொண் டமைந்த வகையிலே வடிவமைக்கப்பட்டுள்ளதுடன் கட்டுப்படியான, சௌகரியமான மற்றும் பாதுகாப்பான சந்தைத் தேவைக்குரித்தான வகையிலே நவீன குடும்பம் மற்றும் இளைய நிர்வாக சமுதாயத்தினரை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
இது குறித்து கருத்துரைத்துள்ள டொயோட்டா லங்கா நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சுங்கோ யோக்கோ,
"இலங்கையில் தங்களது முதலாவது காரைக் கொள்வனவு செய்யும் நபர் ஒருவருக்கு விகோ வாகனமானது பாதுகாப்பு, சௌகரியம் மற்றும் கொள்வனவு செய்யக் கூடியதான விலை நிர்ணயத்தை வழங்கவுள்ளது.
அதேவேளை டொயோட்டாவின் உலகளாவிய வாடிக்கையாளர் சேவை தரத்தினுடனான அதி உயர் விற்பனையின் பின்பான சேவைகளை பெற்றுக் கொள்ள முடியும்" என்றார்.
மேலும் விகோ வாகனமானது நேர்த்தியான வெளிப்புற வடிவமைப்புடன் ஒருங்கிணைந்த உயர் ஏற்ற நிறுத்த விளக்குடனான ஸ்பாய்லா மற்றும் காருக்கான கவர்ச்சியை வழங்கும் குருமத் தொகுப்பையும் தன்னகத்தே கொண்டுள்ளது. இவ் வாகனமானது சிறியதான போதிலும் புதிய அல்லது அனுபவமிக்க சாரதிகளுக்குரித்தான இலகு சாரத்திய வாகனமாக அமையப் பெற்றுள்ளது.
இவை பின் இருக்கை பயணிகளுக்கு போதுமான அளவு கால்களை நீட்டும் வசதியை வழங்குவதுடன் அதிக பயணப் பொதிகளை உள்ளடக்கக்கூடிய பின்புறக் களஞ்சியப் பிரிவையும் கொண்டுள்ளது. அதிக எரிபொருள் இயங்குதிறன் உத்தரவாதம் கொண்ட ஒரு லீற்றர் லைன் 3 சிலிண்டர் இன்லைன் டி.ஓ.எச்.சி இயந்திர சக்தியில் இயங்குவதுடன் 4 வேக தானியங்கு டிரான்ஸ் மிசனையும் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இலங்கையில் பிரத்தியேகமாக டொயோட்டா 'விகோ' வாகனமானது 3 வருட காலத்திற்கு ஒரு இலட்சம் கிலோமீற்றர்கள் பயணப்படல் உத்தரவாதத்துடன் விற்பனை செய்யப்படுகிறது. இவ் வாகனத்தின் கொள்வனவுச் செயற்பாட்டில் ஈடுபடும் வாடிக்கையாளர்கள் உலகளாவிய தர நிர்ணயமுடையதான விற்பனைக்கு பிந்திய சேவைகளை பெற்றுக்கொள்ள முடியும்.**

# கொமர்ஷல் வங்கியின் 'அருணலு சித்திரம்' போட்டி

கொமர்ஷல் வங்கி தனது பிரத்தியேக சிறுவர் கணக்குத் திட்டமான அருணலு திட்டத்தின் கீழாக 'அருணலு சித்திரம்' ஓவியப் போட்டியை நாடு முழுமையுமாக நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதான தகவலை வெளிப்படுத்தியுள்ளது.
இந்தப் போட்டி நடத்தப்பட்டு பணப் பரிசுகளும் வழங்கப்பட வுள்ளன.
சிறுவர்கள் தமக்கு ஆர்வமுள்ள விடயங்களைக் காட்சி ரீதியாக வெளிப்படுத்த ஓவியம் ஒரு சிறந்த ஊடகமாகும். நாட்டின் இளைய தலைமுறையினர் இந்த ஆற்றலை மேம்படுத்திக் கொள்ள கொமர்ஷல் வங்கி ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது.
இதன் பிரகாரம் பாடசாலை செல்லும் மாணவர்களிடையே மூன்று பிரிவுகளில் இந்தப் போட்டி நிகழ்வானது இடம்பெறவுள்ளது. ஆண்டு ஒன்று முதல் ஆண்டு மூன்று வரையாக ஒரு பிரிவும், ஆண்டு நான்கு முதல் ஆண்டு ஆறு வரையான இன்னோர் பிரிவும், ஆண்டு ஏழு முதல் ஆண்டு ஒன்பது வரையான பிறிதோர் பிரிவும் ஆக மாணவர்கள் இந்தப் போட்டியில் பங்குபற்றிக் கொள்ளமுடியுமென வங்கி அறிவித்துள்ளது.

COMMERCIAL BANK

> "சிறுவர்கள் தமக்கு ஆர்வமுள்ள விடயங்களைக் காட்சி ரீதியாக வெளிப்படுத்த ஓவியம் ஒரு சிறந்த ஊடகமாகும். நாட்டின் இளைய தலைமுறையினர் இந்த ஆற்றலை மேம்படுத்திக் கொள்ள கொமர்ஷல் வங்கி ஒரு வாய்ப்பை வழங்கியுள்ளது.

போட்டியாளர்கள் தமக்கு விருப்பமான கருப் பொருளின் கீழாக தமது விருப்புக்குரித்தான வர்ண வகைகளைப் பயன்படுத்தி 18 இற்கு 16 அங்குல அளவு கொண்டதான வரைதல் கடதாசியில் ஓவியங்களை வரைந்து அனுப்ப முடியு மென தெரிவிக்கப்பட்டுள்ளது.
வரையப்பட்ட ஓவியங்களில் அதற்கான தொனிப் பொருள், மாணவனின் முழு பெயர், கல்வி கற்கும் ஆண்டு, பாடசாலை, வதிவிட முகவரி, தொலைபேசி இலக்கம், வரையப்பட்ட திகதி என்பன குறிப்பிடப் படுவதுடன் ஒவ்வொரு ஓவியமும் குறிப்பிட்ட மாணவரால் வரையப்பட்டது என்பதை பாடசாலை அதிபர், வகுப்பாசிரியர், கிராம சேவகர் அல்லது சமாதான நீதிவான் உறுதி செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.
போட்டி நிகழ்விற்கான தெரிவுகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் மார்ச் மாதம் 14 என சுட்டிக்காட்டப்பட் டுள்ளது.
ஒவ்வொரு வயதுப் பிரிவிலும் முதன்மைப் பரிசை வெல்லும் ஓவியத்துக்கு 50 ஆயிரம் ரூபா பணப்பரிசு வழங்கப்படும். இரண்டாம் மூன்றாம் இடங் களுக்கு முறையே 35 ஆயிரம் ரூபாவும் 25 ஆயிரம் ரூபாவும் பரிசாக வழங்கப்படும். அதே போல் நான்காம் இடத்துக்கு 15 ஆயிரம் ரூபாவும் ஐந்தாம் இடத்துக்கு 10 ஆயிரம் ரூபாவும் வழங்கப்படும் என கொமர்ஷல்வங்கி அறிவித்துள்ளது.




# முகப்புத்தகத்தில் தேடுதல் தளம் அறிமுகம்

## ஆய்வுப் பணிகள் இடம்பெறுகின்றன

இணைய வழிச் சேவைகளில் கூகுள் செயலியின் பலமாகக் கருதப்படுகின்ற தேடுதல் தள (சேர்ச் இன் ஜின்) வியூகங்களோடு போட்டியிடும் வகையிலே உலகின் முன்னணி சமூக வலைத்தள செயலருவாகக் காணப்படுகின்ற முகப்புத்தகங்களும் தேடுதல் தளங்களை அறிமுகம் செய்யவுள்ளதான தகவல் தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.
இதன்படி 'மெட்டா' எனும் தேடுதல் தளத்தை ஆராய்ச்சிப் பணிகளுக்காக மார்க் சுக்கர்பெர்க், சான்-சுக்கர்பெர்க் கொள்வனவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.
இவை ஆராய்ச்சியாளர்களுக்கு உதவுவதுடன் இணைய வழியாராலும் கண்டு கொள்ளப்படாத, அதேசமயம் தேடல் தொடர்பான தரவுகளை உரிய சந்தர்ப்பங்களில் தருவதான தேடுதல் தளம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதேவேளை தற்போதைய இந்த தேடுதல் தளக் கொள்வனவு செயற்பாடானது ஆராய்ச்சி பணிகளுக்கானதாக அமைந்துள்ளது.எதிர்காலத்தில் கனெக்ட் என்ற பெயரின் வழியே முகப்புத்தகத்தில் இந்த தேடுதல் தளமானது மக்கள் சேவைக்கு அறிமுகம் பெறவுள்ளது. முகப்புத்தகத்தில் மேற்படி தேடுதல் தளத்தின் அறிமுகமானது இடம்பெறும் பட்சத்தில் கூகுள் தேடுதல் செயலிக்கு போட்டியானதாக இவை அமைந்து கொள்ளுமென எதிர்வுகூறப்பட்டுள்ளது.

# மனிதப் பிறவியின் மகத்துவம்



கலாபூசணம்
அராலியூர் இ.சரவணபவன்

அரிது அரிது மானிடராய்ப்பிறத்தல் அரிது என்றார் ஔவையார். மனிதப்பிறவி மிக மகத்தான பிறவி. மாண்புமிக்க இந்தப் பிறவி கிடைத்தற்கரிய ஒன்று. எனவே இந்தப் பிறவியில் நாம் நல்லவற்றைச் செய்து நற்கதி அடைய முயற்சிக்க வேண்டும். உலகில் செய்யத் தக்கது நல்வினை. செய்யத்தகாதது தீவினை. நல்ல மனதோடு நல்லவற்றைச் செய்து நானிலத்தில் நல்ல புகழோடு வாழலாம். நன்மைகளும் பல வந்து சேரும். தீயவற்றை செய்யாது விடுவதால் அதுவும் ஒரு நன்மையாகும். நாட்டில் நல்லது செய்தால் நாடு சிறக்கும். மக்கள் சிறப்புடன் வாழ்வர்.

சைவமக்களாகிய நாம் மனிதப் பிறவி எடுத்ததன் பயனை அடைந்தே தீர வேண்டும். எல்லாப்பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான் என்றபடி இந்தப் பிறவி தப்பினால் எந்தப் பிறவி வாய்க்குமோ? என்று அங்கலாய்க்கும் நாம்,

“குனித்தபுருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம் போல் மேனியிற் பால்வெண்ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப்பெற்றால்
மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே”

என்ற தேவாரத் திருப்பதிகத்துக்கு இணங்க ஆண்டவனின் அருள் திருக் கோலத்தைக் கண்டு தரிசிப்பதற்கு இந்த மானிடப் பிறவி நிச்சயம் வேண்டிய ஒன்றாகும். “செங்கோடனைச் சென்று கண்டு தொழ நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நான்முகனே” என்று அருணகிரிநாதர் அருளியிருப்பதும் இங்கே நோக்கத்தக்கது.

ஆண்டவனின் அழகுத் திருவுருவைக் காண்பதற்கு இரண்டு கண்கள் போதாது. இதில் இருந்து நாம் என்ன அறிகின்றோம்? மனிதப் பிறவியின் மகத்துவத்தை அறிகின்றோம். மனிதனுக்கு மாத்திரமே ஆறாம் அறிவாகிய பகுத்தறிவு உண்டு.

இந்தப் பகுத்தறிவின் மூலமே அவனது உயர்ச்சி வெளிப்படுத்தப்படுகின்றது. மனிதன் முதலில் மனிதனாக வாழப் பழக வேண்டும். மனித உருவில் இருந்து கொண்டு மிருகமாக வாழக் கூடாது. மனித வாழ்வில் மனிதப் பண்பு மிகவும் அவசியம். கடவுள் வழிபாடு மூலம் முத்தி இன்பத்தை அடையலாம். இறைதொண்டின் மூலமும் முத்தியடையலாம். இவற்றை நாம் செய்வதற்கும் இறையருள் வேண்டும். “அவனருளாலே அவன்தாள் வணங்கி” என்ற மணிவாசகர் வாக்குப்படி, இறைவனை நாம் வணங்கி வழிபாடியற்றுவதற்கும் அவனுடைய அருள் வேண்டும். இல்லையேல் முடியாது.

“ஆசையறாய் பாசம் விடாய் ஆன சிவபூசை பண்ணாய் நேசமுடன்
ஐந்தெழுத்தை நீ நினையாய்”

என்றபடி நாம் உலகில் ஆசையோடும் பாசத்தோடும் வாழ்கின்றோம். சிவபூசையும் செய்யாமல் ஐந்தெழுத்தையும் ஓதாமல் வெறும் ஆசாபாசங்களுக்குள் கட்டுண்டு கிடக்கின்றோம். இந்த உடம்பு அழியும் தன்மை வாய்ந்தது. நிலையில்லாத உடலை நிலை என்று நம்பி ஏமாறக் கூடாது. எமது தேகம் வெந்தேகம்; நாளைக்கிருப்பது சந்தேகம். உயிரானது உடலைவிட்டுப் பிரிந்து விட்டால் பிறகு மதிப்பே இல்லை. சிவம் சிவம் என்று உரைத்த நாக்கு சவம் சவம் என்று அழைக்கும். பணம் பணம் என்று அழைப்பவர்கள் பிணம் பிணம் என்று பேசுவார்கள். ஆகவே நாங்கள் உயிருடன் இருக்கும் போதே நல்லவற்றைச் செய்துவிட வேண்டும். நாளைக்குச் செய்வோம் என்று ஒத்திப் போடாமல் இன்றைக்கே செய்து விட வேண்டும். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்ததலைவனை ஏத்தி ஏத்தித் துதிக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

“நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி
யயன்றும்
அலை புனல் சேர்
செஞ்சடையெம் மாதீ
யென்றும்
ஆரூரா என்றென்றே
அலறா நில்லே ”



என்று குறிப்பிடுகிறார் அப்பரடிகள். தொண்டு செய்தே திருவடி அடைந்தவர் அப்பர் பெருமான். அவர் உழவாரத் தொண்டு செய்த போது அவரது பக்குவ நிலையை அறிவதற்காகப் புற்களுக்கிடையே பொன்னையும் நவரத்தினங்களையும் ஜொலிக்கச் செய்தார் சிவபெருமான். ஓடும் செம்பொன்னும் ஒப்ப நோக்கும் தன்மை கொண்ட நாவுக்கரசர் பெருமான் கற்களையும் புற் களையும் ஒன்றாகவே அள்ளி வீசி விட்டார். அப்பர் பெருமானின் பக்குவம் அப்போது வெளிப்பட்டது. அது போலவே சைவ மக்களாகிய நாமும் உண்மையான பக்தியுடன் தொண்டுகள் செய்ய வேண்டும். சிவத்தொண்டு செய்வதன் மூலம் சிவபெருமானை அடையலாம்.

ஆலயத் திருத்தொண்டுகள் அனைத்துமே ஆன்ம ஈடேற்றத்துக்குத் துணைபுரிவன. ஆலயத்தைக் கூட்டித் துப்புரவாக்குதல், மெழுகுதல், பூமாலை கட்டுதல், திருவிளக்கிடுதல், குடை, கொடி, ஆலவட்டம் பிடித்தல் என இன்னோரன்ன திருத்தொண்டுகள் பலவும் செய்யத்தக்கன. புண்ணியத்தைச் செய்து நல்வினைப் பயனை அனுபவிக்கலாம். எப்போதும் நல்லதையே சிந்தித்து நல்லவற்றைச் செய்வதனால் எமக்கு நன்மை பலவும் தானாகவே வந்து சேரும். எல்லாவற்றுக்கும் சிவபெருமானின் பேரருட் கருணைத் திறம் வேண்டும். நாம் நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏது? நடந்ததையே நினைத்துக் கொண்டிருப்பதும் மடமையே.

இந்தப் பரந்த நிலவுலகின் கண்ணே இறைவனின் திவ்விய பேரருட் கருணையால்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆகவே அவனுடைய திருவருள் நலத்தால் நலமாக வாழ்ந்து நன்மைகளை அடைய அவனருளையே நாடி நிற்போமாக.



மனிதன் முதலில் மனிதனாக வாழப் பழக வேண்டும். மனித உருவில் இருந்து கொண்டு மிருகமாக வாழக் கூடாது. மனித வாழ்வில் மனிதப் பண்பு மிகவும் அவசியம். கடவுள் வழிபாடு மூலம் முத்தி இன்பத்தை அடையலாம். இறைதொண்டின் மூலமும் முத்தியடையலாம். இவற்றை நாம் செய்வதற்கும் இறையருள் வேண்டும்.

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# சரியான பாதைக்கு அரசின் நகர்வு திரும்பவேண்டும்

சிறிசேன – விக்கிரமசிங்க கூட்டு அரசை இந்த ஆண்டுக்குள் தலைகீழாகக் கவிழ்த்துவிட்டு மீண்டும் அரசுக் கட்டிலில் அமர்ந்து ஆட்சி நடத்துவதற்கு துடியாய்த் துடித்துக் கொண்டிருக்கிறார் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச. ஆட்சியைக் கவிழ்ப்பேன், அரசுக் கட்டிலில் அமர்வேன் என்பதாக சமீபகாலமாக அவர் சூளுரைத்து வருவது அபாயச் சங்குபோல் ஒலிக்க ஆரம்பித்துள்ளது. அந்த வகையிலேயே நுகேகொடையில் கடந்த வெள்ளிக்கிழமை கூட்டு எதிர்க்கட்சியினர் பிரம்மாண்டமானதொரு கூட்டத்தை நடத்தித் தென்னிலங்கை மக்கள் மத்தியில் தங்களுக்கிருக்கும் செல்வாக்கையும் ஆதரவையும் அவர்கள் பகிரங்கப்படுத்தியிருந்தார்கள்.

நுகேகொட பொதுக் கூட்டத்துக்கு வருகை தந்திருந்த மக்கள் கூட்டமானது, இப்போது நிச்சயம் ஆட்சியில் இருப்பவர்களுக்கு மகிழ்ச்சியை அளித்திருக்கமாட்டா. ஓரளவு அச்சத்தை ஏற்படுத்தியிருந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. எதிர்க்கூட்டணியில் இணைந்துள்ள தினேஷ் குணவர்த்தனவின் மகாஜன எக்சத் பெரமுன, வாசுதேவ நாணயக்காரவினது நவசமாஜக் கட்சி, உதய கம்மன் பிலவின் பிவித்துரு ஹெல உறுமய, விமல் வீரவன்சவின் தேசிய சுதந்திர முன்னணி மற்றும் பல உதிரிக்கட்சிகளின் ஆதரவாளர்கள் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர்களோடு இணைந்து கொண்டமையே இவ்வளவு மக்கள் கூட்டம் வந்து சேர்ந்தமைக்குக் காரணம் என்று அரசு தரப்பில் கூறிக் கொள்ளப்படலாம், சிங்கள அடிமட்ட மக்கள் மத்தியில் ராஜபக்சவுக்கு இருந்துவரும் ஆதரவைக் குறைத்தும் மதிப்பிட முடியாது. மதிப்பிடவும் கூடாது. அந்த ஆதரவு முன்பை விட அதிகரித்து வருகிறது என்பதே பொதுவான கருத்து. இந்த ஆதரவுக்கான காரணங்கள் பலவிதமாகக் கூறப்படுகின்றன்.

தமிழீழ விடுதலைப் புலிகளிடமிருந்து நாட்டையும் சிங்கள மக்களையும் பௌத்த மதத்தையும் காப்பாற்றியவர் மகிந்த ராஜபக்ச. வடக்கு–கிழக்கில் தமிழ்பேசும் மக்களின் கை ஓங்காமல் இருப்பதற்கு அந்தப் பிரதேசங்களில் இராணுவத்தைப் பலப்படுத்தி வைத்திருந்தவர் அவர். அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொண்டதுடன் ஆளுநர்களே இந்தப் பிரதேசங்களின் உண்மையான ஆட்சியாளர்களாய் இருப்பதையும் உறுதிப்படுத்தியிருந்தவர். இவை போக மகிந்த ராஜபக்சவை அரச தலைவர் தேர்தலிலும் பொதுத் தேர்தலில் தலைமை அமைச்சர் பதவிக்கான முயற்சியிலும் தோற்கடித்து ஆட்சிக்கு வந்தவர்கள் இன்னமும் பல வாக்குறுதிகளை நிறைவேற்றாமல் இருந்து வருகிறார்கள். ஊழல் மோசடிகளில் ஈடுபட்டவர்கள் மீதான நடவடிக்கைகள் மந்த கதியிலேயே நடைபெறுகின்றன. பெரும் புள்ளிகள் பலர் இன்னமும் விசாரிக்கப்படாமலே இருந்து வருகிறார்கள். விசாரணைக்கு உட்படுபவர்களும் ஒன்றில் பிணையில் வந்து விடுவிக்கப்படுகிறார்கள் அல்லது ஏனைய கைதிகளைப் போலன்றி வசதி வாய்ப்புக்களுடன் விளக்கமறியலில் இருக்கிறார்கள். சிலருக்கு சொந்த வீடுகளில் இருந்து உணவு செல்கிறது. படுக்கை, போர்வைகள் கூட அவ்வாறே கிடைப்பதாகத் தகவல்கள் உள்ளன. பெரும்பாலும் ஊழல் மோசடிகளில் கைதாகிறவர்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்ட அடுத்த கட்டத்திலேயே சுகவீனம் என்று மருத்துவமனைகளில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்களை சுகவீனர்கள் என்று அறிவிக்க சில அரச மருத்துவர்களும் தயாராய் இருக்கிறார்கள். ஊழல் விசாரணைகளின் பின், விளக்கமறியலுக்குச் செல்பவர்கள் ஏதோ மாமியார் வீட்டுக்குப்போவது போல் கைவிலங்குகளைத் தூக்கிக் காட்டிக் கொண்டு முகமெல்லாம் பல்லாகச் சிரித்தபடி போகிறார்கள். சிறிது நாள்களில் திரும்பி வந்து விடலாம் என்பது போல் அவர்கள் நினைப்பதாகத் தெரிகிறது. இவையெல்லாம் நல்லாட்சி என்று கூறும் கூட்டுஅரசு வழங்கிய வாக்குறுதிகளைக் கேலிக்கூத்தாக்குவதாய் தெரிகின்றது. இதைவிட மகிந்த பதவியில் இருந்தால் பரவாயில்லை என்பதாக சிங்கள மக்களில் பலரும் சிந்திக்கத் தலைப்பட்டு விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது. அதனால்தான் ராஜபக்ச மீண்டும் வரலாம் என்று நினைக்கிறார். அதற்கேற்றாற் போலவே கூட்டு அரசுக்குள்ளும் குத்துவெட்டுக்களுக்குக் குறைவில்லை.

ஐ.தே.கவினர் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் மீதும் சுதந்திரக்கட்சியினர் ஐ.தே.க. மீதும் மாறிமாறிக் குற்றஞ்சுமத்திக் கொள்கிறார்கள். போதாக்குறைக்கு தேர்தல்காலத்தில் அளிக்கப்பட்ட முக்கியமான வாக்குறுதிகள் குறிப்பாக புதிய அரசமைப்பு– நிறைவேற்று அதிகார ஒழிப்பு என்பனவற்றில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி அமைச்சர்கள் நேர்மாறான தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறார்கள். அவைகளுக்கு உடனடியாக எதிர்ப்புத் தெரிவிக்காமல் கட்சித்தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் இருந்துவருகின்றார்.

இவைகளுக்கிடையில் தமிழ் மக்கள் நம்பிவாக்களித்த விடயங்களும் கூட்டு அரசினால் அம்போவென ஆகிவிடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

எல்லாவற்றையும் கூட்டிக்கழித்துப் பார்க்கையில், சிறிசேன – ரணில் அரசு தன்னை சுதாகரித்துக் கொண்டு மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை இதயசுத்தியாக நிறைவேற்ற இப்போதாகிலும் ஆயத்தமாக வேண்டும். இல்லையெனில், பழைய குருடி கதவைத் திறவடி, என்ற நிலையே தலைதூக்கும் என்பதைச் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

# பலமுனைச் சவால்களுக்குள் சிக்கித் திணறும் நல்லாட்சி அரசு

சேரலாதன்



நல்லாட்சி அரசுக்குப் பல முனைகளிலிருந்தும் நெருக்குதல்கள் அதிகரித்துள்ளன. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, தாம் இந்த அரசை வீட்டுக்கு அனுப்பி வைப்பது உறுதியெனக் கூறி வரும் நிலையில், பல்வேறு தரப்புக்களிலிருந்தும் அரசுக்கு எதிர்ப்புக்கள் கிளம்பியுள்ளன.

இதேவேளை, சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஏழு மாகாண முதலமைச்சர்களில் ஆறுபேர், கடந்த 22ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து உரையாடியுள்ளனர். இவர்கள், சிறிலங்கா சுதந்திரக் கட்சியைப் பிளவுபடுத்தாது அனைவரும் ஓரணியில் நின்று செயற்பட வேண்டுமென மகிந்தவிடம் கோரிக்கை விடுத்தனர். ஆனால் மகிந்த தரப்பிலிருந்து இதற்குச் சாதகமான பதில் கிடைக்கவில்லை. ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து ஜனாதிபதியின் தலைமையிலான சுதந்திரக் கட்சித் தரப்பு செயற்படும்வரை, இது சாத்தியமாகாதெனவும் அங்கு மகிந்த தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

மைத்திரி தரப்பினரும் மகிந்த தரப்பினரும், சிறிலங்கா சுதந்திரக்கட்சியைப் பலப்படுத்துவதிலேயே குறியாக இருக்கின்றமை தெளிவாகத் தெரிகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியை ஒதுக்கி வைத்துவிட்டு, தாம் தனியானதொரு அரசை அமைப்பதற்கே இவர்கள் விருப்புக் கொண்டுள்ளனர். இன்னமும் நான்கு ஆண்டுகளுக்கு மைத்திரிபால சிறிசேனதான் ஜனாதிபதியாக இருக்கப் போகின்றார். சிலவேளை அவர் உயிர்துறக்க நேரிட்டால் அல்லது தாமாகவே அந்தப் பதவியிலிருந்து விலகினால், அரசமைப்பின் பிரகாரம் பிரதமர் பதவியை வகிக்கும் ரணில் விக்கிரமசிங்கவே ஜனாதிபதிப் பதவியில் அமர்ந்து விடுவார். இதை முறியடிப்பதற்கு வியூகம் வகுப்பது ஒன்றும் எளிதான காரியமல்ல. மகிந்த தரப்புக்கும் இது நன்றாகவே புரியும். தற்போது ஐக்கியதேசியக் கட்சிக்கே நாடாளுமன்றத்தில் அதிகளவான ஆசனங்கள் உள்ளன. எதிர்க்கட்சியாக உள்ள கூட்டமைப்பு உட்பட வேறு சில கட்சிகளின் ஆதரவும் அந்தக் கட்சிக்கு உள்ளது.

### மகிந்த மீதான வெறுப்பை வெளிப்படுத்திய தமிழ் மக்கள்

தற்போது அரசுக்கு ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கின்ற சில உதிரிக்கட்சிகள், சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு தம்மை மாற்றிக் கொள்ளலாம். ஆனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரையில், அந்தக் கட்சி சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கு ஆதரவு வழங்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் மைத்திரிபால சிறிசேன என்ற தனிமனிதருக்கே வாக்களித்தனர். சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கென வாக்களிக்கவில்லை. மகிந்த மீதான வெறுப்பைக் காட்டுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாகவே தமிழ்மக்கள் அந்தத் தேர்தலைப் பயன்படுத்திக் கொண்டனர்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் ஏதோவொரு சந்தர்ப்பவசத்தால் ஆட்சியை அமைப்பதற்கு ஒன்றிணைந்த போதிலும், இரு தரப்புக்கள் மத்தியிலும் உள்ளூர இருந்த வேறுபாடுகள் நீங்கவில்லை.

தற்போது தாம் சார்ந்த கட்சி தொடர்பாக அதிகமாகச் சிந்திக்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவு இல்லாமல் தம்மால் இந்தப் பதவியை எட்டிக்கூடப் பார்த்திருக்க முடியாது என்பதையும் ஒருகணம் சிந்தித்துப்பார்க்க வேண்டும். இதையெல்லாம் மைத்திரிபால சிறிசேன மறந்திருக்க மாட்டார். ஆகவே தற்போதைய அரசை மட்டுமல்ல, ரணில் விக்கிரமசிங்கவையும் காப்பாற்ற வேண்டியது அவர் முன்னுள்ள முக்கிய பொறுப்பாகும்.

மகிந்தவைப் பொறுத்தவரையில் எவ்வாறேனும் ஆட்சியைப் பிடிப்பதையே நோக்கமாகக் கொண்டு அவர் செயற்பட்டு வருகின்றார். மைத்திரிக்கு உதவிய ரணிலை வஞ்சம் தீர்ப்பதும் அவரது திட்டமாகும். மைத்திரியும் ரணிலும் ஒற்றுமையாகச் செயற்பட்டால், மகிந்தவின் நோக்கத்தைத் தடுத்து விட முடியும். ஆனால் இவ் இருவருக்குமிடையில் கசப்புணர்வு நிலவுவதைக் காணமுடிகின்றது. மத்திய வங்கியின் பிணை முறி விவகாரம், புதிய மத்திய வங்கி ஆளுநரை நியமித்தல், அமைச்சர்களின் அமைச்சரவைப் பத்திரங்களைத் தம்முடன் கலந்தாலோசிக்காது பிரதமரே சமர்ப்பிக்கின்றமை ஆகிய விடயங்கள் ஜனாதிபதிக்கு உவப்பானவையாகக் காணப்படவில்லை. இதன் காரணமாகவே தமக்குத் தெரியாமல் அமைச்சரவைப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கக் கூடாது என அவர் உத்தரவு பிறப்பிக்கவேண்டி ஏற்பட்டது. இத்தகையதொரு நிலை தொடருமேயானால், அரசைக் கவிழ்ப்பதற்கு வேறு எவரும் முயற்சிக்கத் தேவையில்லை. அது தனாகவே கவிழ்ந்துவிடும்.

### இலங்கை அரசியல் குறித்துக் கரிசனை காட்டும் இந்திய ‘றோ’ அமைப்பு

இதேவேளை, இந்திய உளவு அமைப்பான றோவின் பிரதிநிதியொருவர் மகிந்த ராஜபக்சவைச் சந்தித்து நீங்கள் எப்போது அரசியலிலிருந்து ஓய்வு பெறப் போகிறீர்களெனக் கேட்டதாகத் தகவல்கள் கசிந்துள்ளன. இது, இந்திய அரசின் இலங்கை மீதான கரிசனையை எடுத்துக் காட்டியுள்ளது. தமது குடும்பத்தினர் கைது செய்யப்படுவதையும், விசாரிக்கப்படுவதையும் தடுப்பதற்காகவே தாம் அரசியலில் தொடர்ந்து செயற்படுவதாக மகிந்த அந்த அதிகாரியிடம் கூறியுள்ளார்.

மகிந்த ராஜபக்ச தமது ஆட்சிக் காலத்தில் சீனாவுடன் நெருங்கிய உறவுகளைப் பேணிவந்தார். மோடி இந்தியப் பிரதமரானதும், இலங்கை மீது ஒரு கண் வைக்க ஆரம்பித்தார்.

மைத்திரி ஜனாதிபதிப் பதவியைப் பெற்றமை இந்தியாவுக்கு வாய்ப்பாக அமைந்து விட்டது. ஆனால், ஆட்சியைக் கவிழ்ப்பேன் என மகிந்த கூறிக் கொண்டு திரிகின்றமை இந்தியாவை எரிச்சலடையச் செய்து விட்டது. இந்த நிலையில் மகிந்தவின் சலசலப்புக்கள் சிறிது நாள்களில் ஓய்ந்து, அவை காணாமல் போய்விடும் என்பதை உறுதியாகக் கூறிவிட முடியும்.

சிங்கள மூலம் - பண்டார
தமிழில் - வீ.எஸ்.ரீ

# மக்களைக் குழப்பும் மகிந்த தரப்பும், உண்மையை உணர்த்தத் தவறும் அரச தரப்பும்

ஆஜென்ரினா நாட்டின் முன்னாள் ஜனாதிபதி கிறிஸ்ரினா பெர்னாண்டர்ஸ்க்கு எதிரான லஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக் குறித்த விசாரணையின் முடிவில், 663 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான அவரது சொத்துக்களை அரசுடமை ஆக்குமாறு ஆஜென்ரீனா நீதிமன்றம் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதத்தில் தீர்ப்பு வழங்கியிருந்தது.

அதேபோன்றதொரு சம்பவம் அண்மையில் ஆஸ்திரேலியாவில் இடம்பெற்றுள்ளது. ஆஸ்திரேலிய நாட்டின் சுகாதார அமைச்சர் சூசன் லே, 2014 ஆம் ஆண்டில் 7 இலட்சத்து 95 ஆயிரம் டொலர் அரச நிதியை முறையற்ற விதத்தில் தமது சொந்தத் தேவைக்காகப் பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. குற்றம் நிரூபிக்கப்பட்டதையடுத்து இந்த மாதம் 9 ஆம் திகதி அவர் தமது சுகாதார அமைச்சர் பதவியிலிருந்து தாமாக விலகிக் கொண்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட இரு சம்பவங்களையும் எமது நாட்டுடன் ஒப்பிடுகையில், எமது நாட்டு அரசியல்வாதிகளது சுயரூபம் தெளிவாகப் புலப்படுகிறது. அரசியல்வாதிகளது ஊழல் செயற்பாடுகள் குறித்த விசாரணைகள் எமது நாட்டில் மட்டும் தான் மேற்கொள்ளப்படுகின்றன என்றில்லை. உலகின் அநேக நாடுகளில் இத்தகைய குற்றச்சாட்டுக்களும், அவற்றுக்கான விசாரணைகளும் இடம்பெற்றே வருகின்றன. ஆயினும் இலங்கை அரசியல்வாதிகளைப் போன்று, எந்தவொரு பிறநாட்டு அரசியல்வாதியும் தமக்கு எதிரான குற்றச்சாட்டுக்களை மறுத்து "நான் சுற்றவாளி; இதுவெல்லாம் எனக்கெதிரான அரசியல் பழிவாங்கல்" என்று கூப்பாடு போட முயல்வதில்லை.

### பதவிக்கால முடிவில் ஜனாதிபதிப் பதவியை அடுத்தவர்களிடம் கையளித்த கனவான்தனம்

இலங்கையில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை அறிமுகம் செய்த ஜே.ஆர், தமது பதவிக்கால முடிவில் தமக்கு அடுத்த நிலையில் பிரதமராக இருந்த ரணசிங்க பிரேமதாசவுக்கு ஜனாதிபதி வேட்பாளர் நியமனத்தை வழங்கி அரசியலரங்கிலிருந்து ஒதுங்கிக் கொண்டு தமது மீதிக் காலத்தை ஓய்வாகக் கழித்தார்.

தமக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவியை வகித்த பிரேமதாசவிடமிருந்து அந்தப் பதவியைப் பறிக்க ஜே.ஆர்.முயலவில்லை. விகாரைகளில் அரசியல் கூட்டங்களை நடத்தவில்லை. பொதுமக்களை உசுப்பேத்தி அரசுக்கு எதிராக வீதியில் இறக்கி சிக்கல்களை ஏற்படுத்தவில்லை, இல்லாத பிரச்சினைகளை உருவாக்கவில்லை. ஜனாதிபதி பிரேமதாச ஏற்படுத்திய அபிவிருத்தித் திட்டங்களைக் குழப்பியடிக்க முயலவில்லை. மொத்தத்தில் முன்னாள் ஜனாதிபதி என்ற லேபிளைப் பயன்படுத்தி அரசியலில் மூக்கை நுழைக்கவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, ஜனாதிபதிப் பதவியை நியாயமற்ற விதத்தில் பயன்படுத்தி ஊழல் மோசடி புரிந்ததான எந்தவொரு குற்றச்சாட்டுக்கும் ஜே.ஆர். உட்பட்டதில்லை.

பிரேமதாசவுக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவியை வகித்த டி.பி.விஜேதுங்க எத்தகைய குற்றச்சாட்டுக்களுக்கும் உட்படாது தமது பதவியை வகித்து ஓய்வு பெற்றார். தமக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவியை வகித்த சந்திரிகாவுக்கு எதிரான எத்தகையதொரு நடவடிக்கைகளிலும் அவர் சம்பந்தப்படவில்லை. அது மட்டுமன்றி தீவிர பௌத்தரான அவர் பெரும்பாலும் விகாரைகளுக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட போதிலும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விகாரைகளில் வைத்து அரசியல் பேசியதில்லை. எந்தவொரு அரசியல் மேடைகளிலும் ஏறியதில்லை.

அதேபோன்று சந்திரிகாவும் தமக்குப் பின்னர் மகிந்த ராஜபக்சவிடம் ஜனாதிபதி வேட்பாளர் வாய்ப்பை வழங்கி பதவியை விட்டு ஒதுங்கிக் கொண்டார். அரசமைப்புக்கான திருத்தங்களை மேற்கொண்டபோதிலும், மூன்றாவது தடவையும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் அரசமைப்புத் திருத்தமொன்றைச் சந்திரிகா முன்வைத்ததில்லை. தமக்குப் பின்னர் ஜனாதிபதிப் பதவியை வகித்த மகிந்தவின் ஆட்சியைக் கவிழ்க்கப்போவதாக ஒரு போதிலும் சந்திரிகா அச்சுறுத்தியதில்லை. தமக்குச் சொந்தமான காணியை விற்றுத் தமது பிள்ளைகளது கல்வி முன்னேற்றத்துக்குச் செலவிட்டாரேயன்றி, சந்திரிகா ஒருபோதும் மக்களது பணத்தைக் கொள்ளையிட்டு உலகின் பல நாடுகளில் வைப்புச் செய்து வைத்ததில்லை. நாட்டு மக்களை மகிந்ததலைமையிலான அரசுக்கு எதிராகக் கிளர்ந்தெழவைக்க சந்திரிகா ஒருபோதும் சதிசெய்ததில்லை. மகிந்தவின் ஆட்சியில் தமக்கு ஏற்படுத்தப்பட்ட இடையூறுகளைத் தவிர்ப்பதற்காக வெளிநாட்டில் சென்று வாழ்ந்த சந்திரிகா, பதவியில் தொடர்ந்தும் இருப்பதற்கு மகிந்த மேற்கொண்ட முயற்சிகளுக்கு எதிராகச் செயற்பட்ட சிவில் அமைப்புக்களுடன் இணைந்து செயற்படுவதற்காகவே மீண்டும் நாட்டுக்குத் திரும்பி வந்தார்.

### முன்னைய ஜனாதிபதிகள் மகிந்தவைப் போன்று தேர்தலில் தோற்கடிக்கப்பட்டதில்லை

இதில் கவனத்தில் கொள்ள வேண்டிய மற்றொரு அம்சம், ஜே.ஆர், விஜேதுங்க, சந்திரிகா ஆகிய முன்னாள் ஜனாதிபதிகள் அரசமைப்பு விதிகளுக்கமையத் தமது பதவிக்கால முடிவில் அடுத்த பொறுப்பானவரிடம் பதவியை ஒப்படைத்து ஓய்வு பெற்றார்களேயொழிய, அவர்களில் எவரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்டுத் தோற்கடிக்கப்படவில்லை. ஜனாதிபதி பிரேமதாசகூட தாம் பதவியை வகித்தவேளையில் படுகொலையுற நேர்ந்தது. அதுமட்டுமன்றி தமது பதவிகளிலிருந்து ஓய்வுபெற்றதும், மீண்டும் பதவியைக் கைப்பற்றும் நோக்கில் புதிய கட்சியொன்றை உருவாக்கும் முயற்சியில் அவர்களில் எவரும் ஈடுபட்டதில்லை.

இவற்றுக்கெல்லாம் மேலதிகமாக, மேற்குறிப்பிட்ட முன்னாள் ஜனாதிபதிமார் எவரதும் பிள்ளைகளோ, நெருங்கிய உறவினர்களோ, அரச நிதியை, காணிபூமிகளை தவறான விதத்தில் கைப்பற்றிக் கொண்டதாகக் குற்றம் சாட்டப்பட்டதில்லை. ஆனால் அத்தகைய பல குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளான மகிந்தவின் குடும்பத்தினர், உறவினர்கள் தமக்கெதிரான குற்றச்சாட்டுக்களை மறுத்து தம்மைப் புனிதர்களாகக் காட்ட முயன்று வருவது குறித்து நாட்டு மக்கள் நன்கறிவர்.

இவ்விதம் அதிகாரத்தை இழந்த நிலையில், பதவிமேல் கொண்ட மோகம் காரணமாக இனவாதம் மற்றும் மதவாதத்தை முன்னிறுத்தி நாட்டின் சிங்கள மக்களை உசுப்பேத்தி வரும் மகிந்த தரப்பினர் குறித்து நாட்டுமக்கள் நன்கு புரிந்து கொண்டுள்ளனர். வட பகுதியில் மீண்டும் விடுதலைப் புலிகளது அச்சுறுத்தல் உள்ளதாகவும், தென்பகுதியில் முஸ்லிம்களால் அச்சுறுத்தல் உள்ளதாகவும் சிங்கள மக்களுக்கு அச்சமூட்டி, அதன் மூலம் அரசியல் இலாபமீட்டும் முன்னைய நடைமுறையை மீண்டும் பிரயோகிக்க மகிந்த தரப்பினர் முயல்வது பதவிமேலுள்ள மோகம் காரணமாகவே.

### மகிந்த தரப்பின் தற்போதைய துருப்புச்சீட்டு புதிய அரசமைப்பு உருவாக்கமே

அந்த வகையில் மகிந்த தரப்பினர் கடைசியாகக் கையில் எடுத்திருக்கும் துருப்புச்சீட்டு, இதுவரை நாடாளுமன்றத்துக்கு வராத யோசனை என்ற மட்டத்திலேயே தற்போதும் உள்ள புதிய அரசமைப்புக் குறித்த பூச்சாண்டி காட்டலாகும். அது நாட்டைக் கூறுபோடும் வகையிலான ஆபத்தான முயற்சி என வர்ணித்து சிங்கள மக்களைக் குழப்பும் நடவடிக்கைகளை மகிந்த தரப்பினர் திட்டமிட்டுமேற்கொண்டு வருகின்றனர். மகிந்த தரப்பினரது இத்தகைய சகல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள் கூட்டங்கள் என்பவற்றுக்கு முக்கிய காரணம், எந்த விதத்திலாவது நாட்டு மக்கள், மனங்களைக் குழப்பி, நாட்டைச் சிக்கல்களுக்குள் உள்ளாக்கி, எப்படியாவது தாம் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொள்வதன் மூலம் தமது முன்னைய ஆட்சியின் போது தாம் மேற்கொண்ட லஞ்ச ஊழல் செயற்பாடுகளுக்கான விசாரணைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதே ஆகும்.

இதற்காக, மகிந்த தரப்பினர் சூட்சுமமான விதத்தில் முன்னெடுத்து வரும் பரப்புரை உத்திகள், பொது மக்களது மனங்களை குழப்பமுற வைத்து அவர்களை இன்றைய ஆட்சியாளர்கள் குறித்து தவறான கண்ணோட்டத்துக்கு இட்டுச் செல்லத்தக்க வலுக்கொண்டவையாகும். ஆயினும் உண்மை என்னவென வெளிப்படுத்த, யதார்த்தத்தை நாட்டு மக்களுக்கு உணர்த்த இயலாத நிலையில் இன்றைய ஆட்சியாளர் தரப்புக்கள் பின்னடைவு கண்டிருப்பது எவரது கர்மவினையோ யாரறிவார்.?



## வாசகர் திருமுகம்

### பொருத்தமே - இல்லாத பொருத்து வீட்டுத்திட்டம்

தற்போது வடக்கு - கிழக்கில் சூடு பிடித்திருக்கும் முக்கியமான விடயம் எமக்குப் பொருத்தமே இல்லாத பொருத்து வீட்டுத் திட்டமாகும். உதயன் வாசகர் திருமுகம் ஊடாக பல வாசகர்கள் இந்தத் திட்டத்தைக் கண்டித்து விமர்சித்து எழுதியிருந்தார்கள். வேறு பல அரசியற் கட்சிப் பிரமுகர்களும், புத்திஜீவிகளும் இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டாம் என்று எதிர்ப்புப் போராட்டங்களை நடத்தி அழுத்தம் கொடுத்தும் இருந்தார்கள். சம் பந்தப்பட்ட மீள்குடியேற்ற அமைச்சரோ இந்த விடயத்தில் சிறிதேனும் அசைந்து கொடுக்க முன்வரவில்லை. இற்றைவரைக்கும் இது குறித்து தீர்க்கமான முடிவுகள் ஏதும் எட்டப்படவுமில்லை. உதயன் நாளிதழில் இந்தவிடயம் தொடர்பாக கடந்த 22ஆம், 23ஆம் திகதிகளில் வெளிவந்த பத்திரிகைகளில் மிகவும் விளக்கமான, தெளிவான பல உண்மைகளை தெளிவுபட எடுத்து விளக்கப்பட்டிருந்தது. இந்த இடத்தில் ஒரு ஞாபகம் வருகிறது. யார் போய்ச் சொல்லுவார், இந்த ஏழை வருந்தும் வேளை, அவனிடம் யார் போய்ச் சொல்லுவார். என்ற பாடல் வரியொன்று வருகிறது. இன்று எமது நிலைமையும் அதுதான். ஆகவே இந்த பொருத்து வீட்டுத் திட்டத்தை பேசி தீர்வு காண முடியாத எமது தலைமைகள் எவ்வாறு நீண்ட காலம் இழுபட்டுவரும் இனப்பிரச்சினைக குறித்து பேசித் தீர்வு காணப் போகின்றார்கள். ஆக எங்களை கடவுள்தான் காப்பாற்ற வேண்டும் ஐயா?

*கே.ராஜா, மல்லாவி*

### எவரென்பதை நீயும்தான் அறியாயோ நல்லூரா?

நல்லூர்க்கந்தன் ஆலயச் சுற்றாடலில், திடீரென முளைத்திருந்த அறிவிப்புப் பலகையொன்று, ஆலய வளாகத்துள் போராட்டங்கள், கூட்டங்கள் நடத்தத் தடை விதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிப்பதைக் கண்ணுற்றேன். காந்தி தேசத்தின் அகிம்சாவாத முகத்திரையைக் கிழித்தெறிய தியாகி திலீபனுக்கு வாய்ப்பமைத்துக் கொடுத்த நல்லூர்க் கந்தனது ஆலயச் சூழல், ஈழ[illegible] தமிழர்கள் தமது எதிர்ப்புணர்வுகளை அகிம்சை வழியில் வெளிப்படுத்தப் பற்பல சந்தர்ப்பங்களில் [illegible]ாகி அமைந்து உதவியமை வரலாறு [illegible] வெளிவரும் [illegible] அறிவிப்[illegible] வேண்டுகோளோ, அதை வி[illegible]போரை வெளிக்காட்டி அமைவது [illegible] அதுவே, அதன் உண்மைத்தன்மை [illegible]த்த நம்பிக்கையை ஏற்படுத்த[illegible] அந்த வகையில் குறித்த அ[illegible]ாதேய அறிவிப்பு, சமய இணங்[illegible] விரும்பாத முதுகெ[illegible]பற்றவர்க[illegible] முயற்சியாகக்கொ[illegible]தக்கதொ[illegible].

*[illegible]சிவபாலன், [illegible]ராங்குவில்*

# சுடோக்கு
## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 7 | 6 | 4 | | |
| | | | 3 | | | | 1 | |
| | 8 | | | | | 7 | | 5 |
| 7 | | | | | | | | |
| | 1 | 9 | | 2 | | 5 | 8 | |
| | | | | | | | | 3 |
| 6 | | 3 | | | | | 2 | |
| | 9 | | | 3 | 7 | | | 4 |
| | | 8 | 6 | 1 | 2 | 3 | | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 6 | 8 | 7 | 2 | 3 | 4 | 5 | 1 |
| 1 | 7 | 2 | 9 | 4 | 5 | 6 | 3 | 8 |
| 4 | 3 | 5 | 6 | 8 | 1 | 7 | 2 | 9 |
| 3 | 5 | 9 | 2 | 7 | 6 | 1 | 8 | 4 |
| 7 | 8 | 4 | 3 | 1 | 9 | 2 | 6 | 5 |
| 6 | 2 | 1 | 8 | 5 | 4 | 9 | 7 | 3 |
| 5 | 9 | 3 | 1 | 6 | 2 | 8 | 4 | 7 |
| 8 | 4 | 6 | 5 | 9 | 7 | 3 | 1 | 2 |
| 2 | 1 | 7 | 4 | 3 | 8 | 5 | 9 | 6 |

சுடோக்கு
ஒரு எண் விளை யாட்டு.
தர்க் கரீதியான ஒழுங்கு படுத் தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண் டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட் டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண் கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப் பானிய நிறு வனமான நிகோலி இதனை அறி முகப் படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005 இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.

# ஐ.நா. தூதராக கோலிவூட் தயாரிப்பாளர் அசோக் அமிர்தராஜ் நியமனம்



பிரபல கொலிவூட் தயாரிப்பாளரும், பன்னாட்டு ரென்னிஸ் வீரருமான அசோக் அமிர்தராஜ் ஐக்கிய நாடுகள் சபையில், இந்தியாவில் நீடித்த வளர்ச்சி திட்டங்களுக்கான நல்லெண்ணத் தூதராக நியமிக்கப்பட்டார். பன்னாட்டு அளவில் புகழ்பெற்ற தயாரிப்பாளரான அசோக் அமிர்தராஜ், சூப்பர் ஸ்டார் ரஜினி நடித்த கொலிவூட் படமான பிளட்ஸ்டோன் உட்பட 100க்கும் மேற்பட்ட படங்களை தயாரித்துள்ளார்.
தூதராக நியமிக்கப்பட்டிருப்பது குறித்து அசோக் அமிர்தராஜ் தெரிவித்ததாவது:
நீடித்த வளர்ச்சி திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை அதிகரிக்க, இந்தியாவில் ஐக்கிய நாடுகள் சபையில் பணியாற்றுவதை ஆர்வமுடன் எதிர்நோக்குகிறேன். நான் பிறந்த தேசத்துக்காக சேவை செய்யவும், ஊடகத்தின் சக்தியைக் கொண்டு சமூகத்துக்குத் தேவையான பலவகையான விடயங்களை உருவாக்கவும் எனக்குக் கிடைத்த அற்புதமான வாய்ப்பு இது - என்றார்.

ஒரு தாய், பிள்ளைக்காக
பட்டினி கிடக்கலாம்...



ஆனால் பிள்ளையால் மட்டும்
பட்டினி கிடக்கக் கூடாது...!

ஒரு குழந்தைக்கு மருத்துவர் உயிர்
கொடுக்கலாம்...



ஆனால் பொம்மைக்கு ஒரு குழந்தையால்
மட்டுமே உயிர் கொடுக்க முடியும்...!

இன்ஸ்பெக்டர் சார்...
சாராயம் காய்ச்சின சல்பேட்டா சங்கரை
கையும் களவுமாக பிடிச்சிட்டோம்...
வெரிகுட்... சாராயத்தை?



குடிச்சிட்டோம்!

காற்றின் நண்பன் @rajsenthil5
எம்மை விரும்பிய வரை நாம் ஒதுக்கி வைத்தாலும், விதி ஒரு போதும் நம்மிடத்திலிருந்து ஒதுங்கியதேயில்லை. ஏதோ ஒரு உருவத்தில் எம்முடன் தான் இருக்கிறார்கள்.
2 50 25



**மேடம்:** செயலில் விடாமுயற்சியும், அக்கறையும் தேவைப்படும். தொழில், வியாபாரத்தில் மிதமான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாவர். பெண்கள் சிக்கனமாக இருப்பது நல்லது.

**இடபம்:** மற்றவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்டபடி வளர்ச்சிப்பணி நிறைவேறும். வருமானம் திருப்தியளிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவுவீர்கள்.

**மிதுனம்:** திகைப்பு தந்த பணியை எளிதில் நிறைவேற்றுவீர்கள். தொழிலில் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர். பெண்கள், உறவினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர்.

**கடகம்:** மனதில் தன்னம்பிக்கை மேலோங்கும். உடல்நிலை சீராக இருக்கும். தொழில், வியாபாரத்தில் நிர்ணயித்த இலக்கை எட்டுவீர்கள். லாபம் உயரும். மாணவர்கள் படிப்பில் முன்னணி வகிப்பர்.

**சிங்கம்:** முக்கிய செயல் நிறைவேற தாமதம் உண்டாகலாம். தொழில், வியாபாரத்தில் உருவாகிற குறையை தாமதமின்றி சரிசெய்வது நல்லது. லாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமைக்கு ஆளாகலாம்.

**கன்னி:** இனிய பேச்சால் அனைவரையும் கவர்வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் பன்மடங்கு அதிகரிக்கும். பணியாளர்கள் பணிவிடயமாக வெளியூர் செல்வர். இஷ்ட தெய்வ வழிபாடு நிறைவேறும்.

**துலாம்:** உங்களின் நற்செயலை சிலர் பரிகாசம் செய்யலாம். அவர்களிடமிருந்து விலகுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்களுக்கு கடனுதவி கிடைப்பதில் தாமதம் உண்டாகும்.

**விருச்சிகம்:** கடின உழைப்பால் லட்சியத்தை நோக்கி முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட வருமானம் உயரும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் பாராட்டைப் பெறுவர்.

**தனுசு:** பெருந்தன்மை மிக்கவராகச் செயற்படுவீர்கள். தொழிலில் இருந்த மந்தநிலை விலகும். லாபம் படிப்படியாக உயரும். பெண்கள் சிக்கனம் மூலம் வீட்டுச் செலவைக் கட்டுப்படுத்துவர்.

**மகரம்:** நல்லவர்கள் வலிய வந்து நட்பு பாராட்டுவர். தொழில் வளர்ச்சியால் வருமானம் அதிகரிக்கும். சேமிப்பும் கணிசமாக உயரும். பெண்களின் செயற்பாட்டில் குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும்.

**கும்பம்:** உங்கள் செயலில் நேர்த்தி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு வளர்ச்சி உண்டாகும். வருமானம் உயரும். உறவினர் இல்ல சுப நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள்.

**மீனம்:** நண்பருக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் சீரான லாபம் கிடைக்கும். பணியாளர்கள் சுதந்திர மனப்பான்மையுடன் பணியாற்றுவர். உடல்நலனில் அக்கறை தேவை.



# ஏமனில் அமெ. தாக்குதலில் 57 பேர் பரிதாப உயிரிழப்பு

சனா, ஜன. 30

ஏமனில் அமெரிக்கப் படைகள் நடத்திய தாக்குதலில் பொதுமக்கள் 16 பேர் உட்பட 57 பேர் கொல்லப்பட்டனர் என்று பன்னாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டன.

ஹௌதி ஆயுதக் குழுவுக்கு எதிராகவே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. பய்டா மாவட்டத்திலேயே தாக்குதல் நடத்தப்பட்டது. 8 பெண்கள், 8 குழந்தைகள் உள்பட 57 பேர் சாவடைந்தனர். ஏனையவர்களில் 30 பேர் ஹௌதி ஆயுததாரிகள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ம)

## வாடகைக்கு

அலுவலகப் பயன்பாடு அல்லது களஞ்சிய பாவனைக்கான 1000 சதுர அடி விஸ்திரணம் உள்ள கட்டடம் திருநெல்வேலிக்கு அண்மையில் வாடகைக்குண்டு. தொடர்பு நகள் :- 076 685 2529

## சிங்கள வகுப்புக்கள்

காலை முதல் மாலை வரை
**தரம் 6 -11 வரை புதிய வகுப்புக்கள்**
ஆரம்பிக்கப்படுகின்றன.
அரச ஊழியர்களுக்கான புதிய வகுப்புக்களும் ஆரம்பமாகின்றன.
**தொடர்பு - 0776660400**

## மரண அறிவித்தல்



### தம்பிராசா ஜெயன்சன்

குடத்தனையைப் பிறப்பிடமாகவும் விசுமடுவை வசிப்பிடமாகவும் முருகண்டியை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா ஜெயன்சன் 29.01.2017 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முருகண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
077 551 7775

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



27.01.2017 ஆம் திகதி உயர் நீதி மன்றத்தில் சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட

செல்வி
**ஷர்மிளா ஜெகதீஸ்வரன்**

அவர்களை மேன்மேலும் சிறப்புற்று வாழ வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர்.
மாசுவன் சந்தி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

Galaxy Star
வெற்றி வாரம் 131 | திகதி 29.01.2017
நட்சத்திர மற்றும் வெற்றி இலக்கங்கள்
08 01,05,33,54
அடுத்த புதன்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,702,135 /-

கோடீபதி ஷனிதா
சீட்டிழுப்பு வாரம்: 93
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி 29.01.2017
அடுத்த செவ்வாய்க்கிழமைக்கான ஜக்பொட்
ரூ. 77,062,310/-
C 29 54 60 75

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 29.01.2017 | வெற்றி வாரம் 2089 | ஊதா
இடபம்
வெற்றி இலக்கங்கள்
10 33 39 61
வெவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 7, 416, 315/=
2017.01.31 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும். வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி ஆசிரியர்
**திரு.க. ஜெயக்குமார்**
அவர்களின் பாசமிகு தந்தையார்

### சின்னத்தம்பி கந்தையா

அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து துயருறுகின்றோம். அவரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தாருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மத்திய கல்லூரி.

## விசேட அறிவித்தல்

**தேசிய சுதேச மருத்துவ மாநாடும் கண்காட்சியும் 2017 (NRCEIM-2017)**

**தேசிய சுதேச மருத்துவ மாநாடும் சித்தமருத்துவ கண்காட்சியும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சித்தமருத்துவ அலகில் 27.01.2017 (வெள்ளிக்கிழமை) முதல் இடம்பெற்று வருகின்றது.**

**மேற்படி சித்தமருத்துவ கண்காட்சியானது பாடசாலைகளினதும் பொதுமக்களினதும் கோரிக்கைகளுக்கு அமைவாக எதிர்வரும் இரண்டு நாள்கள் 30.01.2017 (திங்கட்கிழமை) மற்றும் 31.01.2017 (செவ்வாய்க்கிழமை) வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.**

பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும்



அன்னை மடியில்
08.05.1992

ஆண்டவன் அடியில்
27.12.2016

### செல்வி ஹம்சுஜா கணேசலிங்கம்

27.12.2016 அன்று எமது குடும்ப விளக்கு சிவபதம் அடைந்த செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் புரிந்த அஞ்சலி ஆறுதல் தெரிவித்த, அஞ்சலிகள் வெளியிட்ட மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்வதுடன் இன்று (30.01.2017) திங்கட்கிழமை காலை 9 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையில் நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், நாளை மறுதினம் (01.02.2017 ) புதன்கிழமை புத்தூர் கிழக்கில் உள்ள இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியம் மற்றும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், முற்பகல் 11 மணியளவில் நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

புத்தூர் கிழக்கு, புத்தூர். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

திருமதி **கௌரிமனோகரி** (கௌரி) **பவளநாதன்**
( ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி)



பிறப்பு 23.01.1958 இறப்பு 29.01.2017

யாழ்ப்பாணம், திருநெல்வேலி காளிகோயிலடியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட திருமதி கௌரி மனோகரி பவளநாதன் (ஆங்கில ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி) நேற்று (29.01.2017) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் மற்றும் பராசக்தி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - தங்கம்மா. தம்பதியரின் அன்புமருமகளும் பவளநாதனின் அன்புமனைவியும் லவகாந்த் (நல்லூர் பிரதேச செயலகம்), கோபிநாத் (லண்டன்), செந்தூர்காந்த் (யாழ். பல்கலைக்கழக வணிகபீடம்) ஆகியோரின் அன்புத்தாயும் அதீபா (லண்டன்) இன் அன்பு மாமியும் தணிகாசலம், தவராசா, திலகவதி, சத்தியலிங்கம் (இந்தியா), நந்தகுமார் (பிரான்ஸ்), பத்மநிதி, கலாநிதி ஆகியோரின் அன்புச்சகோதரியும் பாலகௌரி, சாரதாதேவி, செல்வராசா, இந்திராணி, தபோநிதி (பிரான்ஸ்), தேவகுலசிங்கம் காலஞ்சென்ற மங்களேஸ்வரி மற்றும் கனகேஸ்வரி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் காலஞ் சென்றவர்களான விஸ்வலிங்கம், கனகரத்தினம், பொன்னுத்துரை (பொறியியலாளர்) மற்றும் கணேசலிங்கம் ஆகியோரின் அன்புமருமகளும் காலஞ்சென்ற சரஸ்வதி (ஆசிரியை, வேம்படி மகளிர் கல்லூரி) மற்றும் பொற்கொடி (கனடா), இராசபாக்கியம் ஆகியோரின் பெறாமகளும் பத்மநாதன், பாவநாசிவம் (கனடா) ஆகியோரின் சகலியும் றிஸ்விகனின் (லண்டன்) பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அம்மன் வீதி,
பத்திரகாளி கோயிலடி,
திருநெல்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்
021 222 6900, 077 790 3612

## மரண அறிவித்தல்கள்

திருமதி

### ஜெயலட்சுமி (ஜெயம்) இராசதுரை



மலர்வு
28.02.1953

உதிர்வு
29.01.2017

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் பங்களா லேன், மல்லாகத்தையும் வண்டவற்பிளேஸ், தெஹிவளையையும் வசிப்பிடமாகக் கொண்ட திருமதி ஜெயலட்சுமி இராசதுரை 29.01.2017 ஞாயிற்றுக் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம்-தெய்வ நாயகி தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் இராமலிங்கம்-சின்னாச்சிப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற இராசதுரையின் (கங்கா) அன்பு மனைவியும் நவதீபன் (பாபு- W.M.Mendis Co). அபிராமி (ரத்மலானை இந்துக்கல்லூரி) ரதீபன் (Commercial Bank - Thirunelvely) ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவரஞ்சனி (K.P,M.G). நிர்மல்குமார் (R.D.A. - Kandy) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற உமாமகேஸ்வரன். வாகீஸ்வரி (மலேசியா). யோகேஸ்வரி, பஞ்சாட்சரம், அம்பிகைபாகன் மற்றும் ஜெகதீஸ்வரி, தனநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னத்தங்கம் (கைதடி), சுப்பிர மணியம் (மலேசியா), நகுலேஸ்வரி, சிவசுப்பிரமணியம், Dr. சிவபாதம் (மல்லாகம்), செல்வலக்சுமி (People's Bank), தம்பித்துரை, செல்லத்துரை (மல்லாகம்) ஆகியோரின் மைத்துனியும் சாய்ஹரிசின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (30.01.2017) திங்கட் கிழமை மஹிந்த மலர்ச்சாலையில் இறுதி அஞ்சலிக்காக காலை 8.00 மணிமுதல் வைக்கப்பட்டு பி.ப ஒரு மணிக்கு இறுதிக் கிரியைகள் நடைபெற்று 3.00 மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை மயானத் திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : குடும்பத்தினர்.**
**011 273 8983, 077 222 7601, 077 577 8043**



திருமதி

### இந்திராணி சச்சிதானந்தம்

நந்தாவில் ஒழுங்கை, கொக்குவிலை பிறப்பிட மாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி இந்திராணி சச்சிதானந்தம் 29.01.2017 ஞாயிற்றுக் கிழமை சிவபதம் அடைந்தார்.

அன்னார் நடராசா சச்சிதானந்தம் அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை தம்பதியினரின் மூத்த புதல்வியும் காலஞ் சென்றவர்களான நடராசா (காட்டர்) தம்பதிகளின் பாசமிகு மருமகளும் அரவிந்தன்,மஞ்சுளா ஆகியோரின் அன்புத் தாயாரும் விஜேனி,பாஸ்கரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும், மகிழ்யா, கனிஸ்ரா ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் சண்முகரட்ணம் காலஞ்சென்ற தெய்வேந்திரம், புவனராணி, குமரேந்திரன், சர்வேந்திரன்,கலாநிதி,ராஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவமலர்,கலைவாணி காலஞ் சென்ற பரமேஸ்வரன், கமலினி,பவானி, ராஜகருணா, சுபா, கமலாதேவி, சறோஜினிதேவி, காலஞ்சென்ற சுலோஜனா தேவி,விவேகானந்தன் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், தெய்வேந்திரம்,தம்பாப்பிள்ளை,பூபதி ஆகியோரின் உடன் பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 02.02.2017 வியாழக்கிழமை மு.ப 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நந்தாவில் ஒழுங்கை, கொக்குவில்.**

**தகவல்: குடும்பத்தினர்**

"கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது"
சங்கீதம் 116:15

## மரண அறிவித்தல்கள்

### பத்மநாதன் சங்கரலிங்கம் (எரேமியா)



அன்னை மடியில் 13.10.1948
கர்த்தரின் மடியில் 29.01.2017

திருகோணமலையைப் பிறப்பிடமாகவும், கந்த ரோடை, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் சங்கரலிங்கம் (எரேமியா) நேற்று (29.01.2017) ஞாயிற்றுக் கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பத்மநாதன் - நாகரத்தினம் தம்பதியரின் மூத்தமகனும் காலஞ் சென்ற நாகலிங்கம் செட்டியார் - மீனாட்சியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் ஜெயராணியின் அன்புக் கணவரும் சாயிநந்தினி ( கெச்சியாள் ஜீவஒளிமிஷன், சுன்னாகம்), சந்திரமோகன் (போதகர் கிதியோன் ஜீவஒளிமிஷன், நீர்வேலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் Rev.N.யோசுவா சிவகுமார் (தலைமைப் போதகர் ஜீவ ஒளிமிஷன், சுன்னாகம்), தேவமனோகரி (தெபோறாள்) ஆகியோரின் பாசமிகு மாமனும் யூட்சைமன், யுதானி (தரம் 11 ஸ்கந்தவரோதய கல்லூரி), யூலிய யோய் ( தரம் 7 சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), யூலிய யோய்சி (தரம் 2 ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலை), யூலிய யொயானா (தரம் 02 ஸ்கந்தவரோதய ஆரம்ப பாடசாலை), சாம்அபிஷாக் (தரம் 7 யா/அத்தியார் இந்துக்கல்லூரி), சாம்சொலமன் (Rainbow kids college) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார். அன்னாரின் இறுதி நல்லடக்க ஆராதனை இன்று (30.01.2017) திங்கட் கிழமை பி.ப. 2 மணியளவில் ஜீவஒளிமிஷன் நீர்வேலி திருச்சபையில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக நீர்வேலி சீயாக்காடு ஜீவஒளிமிஷன் சேமக்காலையில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர். 077 146 9516**

திருமதி

### தவமணி சிவசம்பு



யாழ். வேலணை கொத்தாவத்தையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணம் 43/3, மின்சார நிலைய வீதி .2 ஆம், ஒழுங்கையை வசிப்பிடமாகவும் தற்போது ஆறுகால் மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தவமணி சிவசம்பு 27.01.2017 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ் சென்றவர்களான நாகராசா - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான வேலுப் பிள்ளை - இலட்சுமி தம்பதி யரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவசம்பு வின் அன்புமனைவியும் பாமினி (இலங்கை), கிருபா (சவுதி அரேபியா), ரூபினி (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்றவர்களான சண்முகதாஸ், சின்னமணி, சற்குணம், நவரட்ணம், வசந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவநேசன் (கொழும்பு), அபாயகரன் (கனடா), யாழினி, அனுசியா (கனடா), நிரஞ்சனா (கனடா), பாலகுமார் (கனடா), சோபி (கனடா), ஆகியோரின் பாசமிகு மாமியும் சிந்துஜா, கிரிசாந் ஆகியோரின் பேர்த்தியும் கயலக்சன், சிநேகா, ரமேஸ் (பிரான்ஸ் ), உமேஸ் (லண்டன்), சதீஸ் (லண்டன்), சுரேஸ் (லண்டன்), சுதாகர் (லண்டன்) ஆகியோரின் பெரியதாயும் ரதிராணியின் (கனடா) மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக யாழ்ப்பாணம் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்

**077 545 88 14**
**(சிவசம்பு கிருபா )**

**தகவல்: குடும்பத்தினர்.**

### திருமதி சிவபாக்கியம் சந்திரசேகரம்

இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவபாக்கியம் சந்திரசேகரம் நேற்று (29.01.2017) ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரத்தின் (ஓய்வுபெற்ற R.M.C (R.D.A) ஓவசியர்) அன்புமனைவியும், காலஞ் சென்ற குமாரு - பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், பாலகிருஷ்ணன், சந்திர கௌளி, சந்திரமோகன் (அம்பிகா பாமசி - இணுவில்), சந்திரகுமார் (முன்னாள் வலி.தெற்கு பிரதேசசபை உறுப்பினர், செயலாளர் - இலங்கைத் தமிழரசுக்கட்சி - இணுவில் கிளை) ஆகியோரின் அன்புத் தாயாரும், சந்திரவதனி, சிற்சபேசன்,சிவகௌளி, பாமினி ஆகியோரின் அன்புமாமியாரும், சேகரன் (பொறியியலாளர் - Gleenwell (Pvt) Ltd), வைஷ்ணவி, கௌரீஷன் (அலுவலகப் பணியாளர் - பேரவைச் செயலகம்), பைரவி (திறந்த பல்கலைக்கழக B.A. 2ஆம் வருட மாணவி - யாழ்ப்பாணம்), அருண் (மொறட்டுவ பல்கலைக்கழக 2ஆம் வருட மாணவன்), மாறன்.சிவசேகர், குணசேகர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று நண்பகல் 12 மணியளவில் தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**'அன்பகம்', இணுவில் மேற்கு, இணுவில்.**

(ஜே/9412)
(11,17,18)

**தகவல்: குடும்பத்தினர்.**

+
J.M.J

## கண்ணீர்க்காணிக்கை



### கதிரித்தம்பி வேலாயுதபிள்ளை

**(Retd.F.A. Jaffna Edu.dPt)**

எமது சகோதரர்கள் சீமாம்பிள்ளை, மரியாம்பிள்ளை, பிரான்சிஸ் பிள்ளை ஆகியோருடன் ஒன்றாகவே படித்து சமய வேறுபாடின்றி அன்னி யோன்யமாக அயல் வீட்டில் இரண்டறக் கலந்து வாழ்ந்த அந்த நாள்கள் பசு மரத்தாணியாகப் பதிந்துள்ளது. அன்னாரின் இழப்பு பளை, வீமன்காமம் (மைலப்பை), சமூகத்துக்கும் கல்வித் துறைக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். எமது ஆழ்ந்த அனுதாபங்களை குடும்பத்தினருக்கு காணிக்கையாக்குகின்றோம்.

**மகப்பேற்று வைத்தியர்
அருளப்பு குடும்பமும், மகன்
அ.ம.இராசேந்திரம் (இளைப். அதிபர்)
குடும்பமும்.
"ஞானஸ்தான்"
சிற்றம்பலபுரம், அச்சுவேலி.**

## மரண அறிவித்தல்கள்

### நவரத்தினம் தயானந்தன்



மாப்பாணவூரி,காரைநகரைப் பிறப்பிட மாகவும் உக்குளாம் குளம் வவுனியாவை வசிப்பிட மாகவும் கொண்ட நவரத்தினம் தயானந்தன் 27.01.2017 வெள்ளிக்கிழமை லண்டனில் கால மானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:
ந.சர்வானந்தன்
(சகோதரன் -கிராம உத்தியோகத்தர்),
சித்தன் கேணி,077 670 8486**

### திருமதி தையலம்மை சிற்றம்பலம்



பிறப்பு 14.09.1924
இறப்பு 27.01.2017

நயினாதீவு திருமதி தையலம்மை சிற்றம்பலம் (27.01.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் இல. 12, புதுச் செட்டித் தெரு, கொழும்பு-13 ஐ வசிப்பிடமாக கொண்ட காலஞ் சென்ற சிறாப்பர் ஐ. சிற்றம்பலம் அவர்களின் அன்பு மனைவியும் நயினாதீவு காலஞ் சென்ற வீரகத்தி- தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் ஊர்காவற்றுறை, கரம்பன் கிழக்கு காலஞ் சென்ற ஐயம்பிள்ளை சின்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற வைத்திலிங்கம், கண்மணி ஆகியோரின் சகோதரியும் கனகம்மா காலஞ் சென்ற நாகராஜா (ஆசிரியர், வட்டுக் கோட்டை) அவர்களின் மைத்துனியும் யோகேஸ்வரி, நந்த குமாரன், கேதீஸ்வரி, திலகேஸ்வரி, மங்க ளேஸ்வரி ஆகியோரின் தாயாரும் யோகலிங்கம், தெய்வேந்திரராஜா, லிங்கேஸ்வரன், பத்மநாதன் ஆகியோரின் மாமியாரும் திருமதி அபிராமி ஸ்ரீஸ்கந்தராஜன், அரவிந்தன், பூரணி, திருமதி ரோகிணி பிரகாஷ், தேனுகா, துர்க்கா, லித்திகா, சதானன், நிலக்சன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட் கிழமை மு.ப. 11.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல் :
வீ. வை. யோகலிங்கம்
(ஓய்வுநிலை தபாலதிபர்)
இல. 880/4,K.K.S. Road, யாழ்ப்பாணம்.**

**தொடர்பு :
021 221 5374**

# மகாத்மா காந்தி



## இந்திய நாட்டின் விடுதலை கண்ட மாவீரர்

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி

> உரிமை வேட்கையிலே உருவெடுத்த விடுதலைப்போரின் வேட்கையைக் கட்டுப்படுத்தி மாந்தரின் உள்ளத்தைக் காந்தம் போல்கவர்ந்து அவர்களைப் பற்றிக் கொண்டு முன் னேறி இறுதியில் இந்திய நாட்டின் விடுதலை கண்ட மாவீரராக மகாத்மா காந்தி விளங்கு கின்றார்.

1948 ஆம் ஆண்டு ஜனவரி 30ஆம் நாள் மாலை டில்லி பிர்லா மாளிகையில் பிரார்த்தனைக் கூட்டம் நடைபெறும் திறந்த வெளிக்குத் தன் பேர்த்திகளின் தோள்களில் கைகளை ஊன்றியபடி நடக்கலானார் காந்தி. அப்போது நேரம் மாலை 5மணி 12 நிமிடங்கள். கூட்டத்திலிருந்து நாதுராம் விநாயக் கோட்சே என்ற மகாராஷ்டிர இளைஞன் காந்தியை வணங்குவது போல் முன்னால் வந்தான். எந்த அசமந்தமும் ஆசுவாசமும் இன்றி உடனேயே தன் கைத்துப்பாக்கியை எடுத்துக் காந்தியின் மார்பில் மூன்று முறை சுட்டான்.

“தொழுதகை உள்ளும் படை ஒடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து”

என்று வள்ளுவர் குறள் மொழிதல் மூலம் எச்ச ரிக்கை விடுத்தது போல் கோட்சே தொழுது கொண்டே காந்தியைச் சுட்டுக் கொன் றான். 'ஹேராமா' என்ற கடைசிச் சொல்லை உச்சரித்துக் கொண்டே காந்தி கீழே சாய்ந் தார். மனத குலமே துக்கத்தில் ஆழ்ந்தது.

உலகப் புகழ்பெற்ற அறிவியல் மேதை ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் காந்தியைப் பற்றிப் பெருமையுடன் குறிப்பிடும் போது, “வருங்காலத் தலைமுறைகள் இப்படியொரு மனிதர் இந்தப் பூவுலகில் வாழ்ந்தாரா என்று வியப்போடு எண்ணுவார்கள் என்று கூறியுள்ளார்.

இப்படி உலகம் போற்றும் பெரியாரைத் தன்னுயிர்போல் மன்னுயிரை நினைத்ததற்காகப் பழி சுமந்து கொண்டது இந்தியா. உலக மெல்லாம் இந்தியாவைத் திசை நோக்கிமதித்து வாழ்த்த வைத்த தன் தவ மகனையே விழுங்கிவிட்டது. அடிமைத் தளையிலிருந்து விடுவிக்கத் தம் வாழ்வை வழங்கிய ஒப்பற்ற தந்தையின் குருதியைக் குடித்து விட்டது. இவ்வாறு தியாகத்தின் திருவுருவமாக வாழ்ந்த காந்தி அடிகள் உலகமக்கள் தொகையில் ஆறில்ஒருபகுதியான இந்திய மக்களுக்கு அறவழி அறிவூட்டி அறப்போர் மூலம் ஆங்கில ஏகாதிபத்தியத்திலிருந்து விடுதலையைப் பெற்றுத் தந்தார்.







### வாழ்வியல்

மோகனதாஸ் என்ற பெயரைக் கொண்ட காந்தி குஜராத் மாநிலம் சௌராஷ்டிராவில் உள்ள போர்பந்தர் என்ற ஊரில் 1869 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2ஆம் நாள் கரம் சந்த் காந்திக்கும் புட்லிபாய்க்கும் மக னாகப் பிறந்தார். காந்தி சிறுவனாக இருந்தபோதே ஒரு சில சிறுவர்களுடன் விளையாடக் கூடாதென்று பெற்றோர் கண்டித்தனர். காரணம் என்னவென்று காந்தி கேட்ட போது அவர்கள் தீண்டத்தகாதோர் என்று கூறினர் பெற்றோர். மனிதனுக்கு மனிதன் வேற்றுமை பாராட்டுவது மடமை என்று காந்தி உணர்ந்தார். அவர்கள் ஏன் தீண் டத்தகாதவர்களாகவே இருக்க வேண்டும்? என்ற கேள்வி அவர் உள்ளத்தைக் குடைந் தது. எனவே அவர்களை முன்னேற்றும் பணியில் ஈடுபாடு உண்டானது. கடவு ளின் மக்கள் (ஹரிஜன்) என்னும் பெயரை அவர்களுக்குச் சூட்டினார் காந்தி. தம் இறுதிநாள் வரை அவர்களது முன்னேற் றத்துக்காகவே பணி செய்தார்.

காந்தி பள்ளியில் படிக்கும்போதே பதின் மூன்றாவது வயதில் அதே வயதுள்ள கஸ்தூரிபாயைத் திருமணம் செய்து கொண்டார். அந்தக் காலத்தில் இளவயதுத் திருமணம் சாதாரண நிகழ்வாக இருந்தது. மெட்ரிக்குலேசன் தேர்வில் வெற்றி பெற்ற காந்தி இலண்டன் சென்று பாரிஸ்டர் படிப்பு படிக்க வேண்டும் என்று தீர்மானிக்கப் பட்டது. ஆனால் காந்தியின் தாயார் மூன்று நிபந்தனைகளை விதித்தார். காந்தி வெளிநாட்டில் மது, மங்கையர் தொடர்பு, மாமிசம் இவற்றை விலக்குவேன் என்று உறுதிதர வற்புறுத்தினார். காந்தியும் தாய் சொல்லைத் தட்டாது அங்ஙனமேஉறுதி அளித்துச் சென்றார்.

### உரிமை முழக்கம்

இலண்டனில் பாரிஸ்டர் பட்டம் பெற்று 1891ஆம் ஆண்டில் இந்தியா திரும்பிய காந்தி, மீண் டும் 1893ஆம் ஆண்டில் போர்பந்தரில் இருந்த தாதா அப்துல்லா கம்பனியின் வழக்கொன் றுக்காக தென்னாபிரிக்காவுக்குப் புறப்பட்டார். அங்கு டர்பன் வழக்கு மன் றத்தில் நீதிபதியின் நேர்மையற்ற கட்ட ளைக்கு இணங்காமல் தலைப்பாகையைக் கழற்ற மறுத்து வெளியேறினார். தம் உரிமையை விளக்கி தென்னாபிரிக்கப் பத்திரிகைகளில் உணர்ச்சிக் கட்டுரைகள் எழுதினார். அப்போதிலிருந்து அவருடைய பெயர் தென்னாபிரிக்காவில் மதிப்பளிப்புக்குரியதானது.

அங்கு நிற வெறியர்களின் பல்வேறு கொடுமைகளை அனுபவித்த காந்தி தென்னாபிரிக்க இந்தியரின் கீழ்நிலைப்பட்ட அவல நிலைமை தெளிவாயிற்று. தம் உள்ளக் குமுறல்களையெல்லாம் பிரிட் டோரியாவில் பல பொதுக் கூட்டங்களில் விளக்கி இந்தியர்களின் உணர்ச்சியைத் தூண்டினார். தென்னாபிரிக்க இந்தியர்களின் உரிமைக்காக அரசினரை எதிர்த்துப் பல ஆண்டுகள் பெருங்கிளர்ச்சி நடத்தினார் காந்தி. 'இந்தியன் ஒப்பீனியன்' எனும் பத்திரிகை ஒன்றையும் தொடக்கி நடத்தினார். சத்தியாக்கிரகம் எனும் அறப்போரில் அவர் வெள்ளையரின் நிற வெறியை ஒடுக்க முயன்றார். இதனால் ஏழு தடவைகள் சிறை வாசம் அனுபவிக்க வும் நேர்ந்தது. இறுதியில் வெற்றியும் கண்டார்.

காந்தியடிகள் தென்னா பிரிக்காவில் நடத்திய அறப்போரில் முன் னின்று உயிர் துறந்தவரில் பெரும்பாலா னோர் தமிழ்மக் களாவர். அடிகளின் ஆணைப்படி அறப் போர்க் களத்தில் முன் னேறி உயிர்த்தியாகம் செய்த நாகப்பனும் வள்ளியம்மையும் அவரது பேரன்புக் குரிய தமிழ் மக்களேயாவர். போரில் தமிழ் மக்கள் ஆற்றிய பேருதவி யைப் பற்றி அடிகளே தம் தென்னாபிரிக்கச் சிறையனுபவத்தில் சிறப்பாகக் குறிப்பிட் டுள்ளார்.

### விடுதலைக்கான ஆன்மத்தின் சிறகசைப்பு

1919ஆம் ஆண்டில் 'நவஜீவன்' யங் இந்தியா போன்ற பத்திரிகைகளைத் தொடக்கி பாரத தேசத் தில் உரிமை முழக்கம் செய்த காந்தி 1921 இல் ஒத்துழையாமை இயக்கம் உருவெ டுக்க வழி அமைத்துக் கொடுத்தார். பட்டம் பதவிகளை உதறித்தள்ளுதல், சட்டசபைகளை வெறுத் தொதுக்குதல், அயல் நாட்டுத் துணியை விலக்குதல், வரிகொடுக்க மறுத்தல் முதலிய வகைகளிலெல்லாம் ஒத்துழை யாமை இயக்கத்தின் ஆதரவை ஓங்கச் செய்தார். ஒத்து ழையாமைப் போராட்டமே அவரை உலக றியச் செய்தது. பொறுமைப் புரட்சியை உண்டாக்கி ஆங்கிலேய அரசை திணறச் செய்தார் காந்தி. 1930 ஆம் ஆண்டிலும் 1933ஆம் ஆண்டிலும் நடந்த உப்புச் சத்தியாக்கிரகமும் சட்டமறுப்புப் போராட்டமும் மிகுந்த கிளர்ச்சியை மக்களிடையே உண்டாக்கின.

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம் - அது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்”

இவ்வாறு நிலைபெற்ற உரிமை வேட்கையிலே உருவெடுத்த விடுதலைப்போரின் வேட்கையைக் கட்டுப்படுத்தி மாந்தரின் உள்ளத்தைக் காந்தம் போல் கவர்ந்து அவர்களைப் பற்றிக் கொண்டு முன்னேறி இறுதியில் இந்திய நாட்டின் விடுதலை கண்ட மாவீரராக மகாத்மா காந்தி விளங்குகின்றார். மகாத்மாவின் வாழ்க்கை வரலாறு உரிமைப் போருடன் ஒன்றித்துப் போன ஒன்றா கக் காணப்படுகிறது. உரிமை பெற்ற நாட்டுக்கு உயிரையே பரிசாக ஈந்த உத்தம ராக அவர் விளங்குகின்றார்.

கட்டுரையாளர்: பொதுச் செயலாளர்
அகில இலங்கை காந்திசேவா சங்கம்

## குல்லா...

சென்றிருந்தனர். அவர்கள் இருவரும் சடலங்களாக நேற்றுக்காலை கரையொதுங்கினர்.

மன்னார் சௌத்பார் கிராமத்தைச் சேர்ந்த குடும்பத்தலைவர் ஜெஸ்மன் (வயது-49), அவரது இளைய மகனான ஜெ.ஜெக்ஸ்சன் (வயது-9) ஆகியோரே சடலங்களாகக் கரையொதுங்கினர்.

இருவரும் வீடு திரும்பியிருக்காத நிலையில் உறவினர்கள் நேற்றுக்காலை கடற்கரைப் பகுதிக்குச் சென்று பார்த்தபோது, இருவரும் சென்றிருந்த படகு கடலில் மூழ்கிய நிலையில் கிடப்பதைக் கண்டு அவர்கள் அதிர்ச்சியடைந்தனர். அயலவர்களிடம் அது குறித்துத் தெரிவிக்கப்பட்டது. உறவினர்களால் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. பொலிஸார் கடற்படையினர் மற்றும் கிராம மீனவர்கள் இணைந்து கடலில் தேடுதல் நடத்தியபோது, ஜெக்ஸ்சன் சடலமாக மீட்கப்பட்டார். தந்தையான ஜெஸ்மன் என்பவர் பின்னர் சடலமாக மீட்கப்பட்டார்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். சடலங்கள் மன்னார் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன. ஜெக்ஸ்சன் என்ற சிறுவன் மன்னார் சாந்திபுரம் மகா வித்தியாலயத்தில் தரம் 4 இல் கல்வி கற்கிறார். (வ-4,56)

## வடக்கு...

தார்.புதிய அரசமைப்பை உருவாக்கும் விடயத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிலைப்பாடு தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேசியப் பிரச்சினைக்கு உடனடியாக அரசியல் தீர்வு முன்வைக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் இருக்கின்றோம். அதற்கான ஏற்பாடுகளையும் நாம் முன்னெடுத்துள்ளோம். அதற்காக புதிய அரசமைப்பை உருவாக்கும் நடவடிக்கைகள் மும்முரமாக இடம்பெறுகின்றன.

இந்த முயற்சியைக் குழப்புவதற்கான நடவடிக்கைகள் ஒருபுறம் விரைவாக இடம்பெற்றுக்கொண்டு இருக்கின்றன. நாட்டை இரண்டாகப் பிரிக்கப்போகின்றோம் என்றும் கூட்டாட்சித் தீர்வை வழங்கப் போகின்றோம் என்றும் போலிப் பரிப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அவற்றில் ஒன்றுகூட உண்மை இல்லை.

ஒற்றை ஆட்சிக்கு அப்பால் ஒருபோதும் செல்லமாட்டோம். பௌத்த மதத்துக்கு இருக்கின்ற முன்னுரிமை நீக்கப்படாது. தீர்வு என்பது இந்த நாட்டின் அனைத்து மக்களின் விருப்பத்தைப் பெற்றதாக இருக்க வேண்டுமே தவிர வெறுப்பைப் பெற்றதாக இருக்க முடியாது. தெற்கின் இணக்கம் முக்கியம். அனைத்து இன மக்களின் பிரச்சினைகளையும் தீர்க்கக்கூடிய வகையில் தான் தீர்வு அமையும்.

பன்னாட்டுக்கு அடிபணிந்தோ அல்லது வேறு சக்திகளுக்கு அடிபணிந்தோ நாம் இந்த நாட்டைக் கூறுபோடமாட்டோம் - காட்டிக்கொடுக்கமாட்டோம். அரசைக் கவிழ்ப்பதற்குச் சதி செய்பவர்களின் பேச்சைக் கேட்டு மக்கள் ஏமாறக்கூடாது. - என்றார். (வ-4)

## சுமந்திரனை...

சம்பிக்க ரணவக்க.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரனை குண்டு வைத்துக் கொலை செய்வதற்கு முயற்சி செய்த நான்கு முன்னாள் போராளிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக அரசு தகவல் வெளியிட்டிருந்தது. அரசியலில் இந்த விடயம் தற்போது பேசு பொருளாகியுள்ளது. இது தொடர்பில் அமைச்சர் சம்பிக்க, நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றுகையில்,

அரசுக்கு முக்கிய தகவலொன்று கிடைத்துள்ளது. இது பற்றி விழிப்பாக இருக்கின்றோம். நோர்வேயிலிருந்து செயற்படும் புலிகள் அமைப்பினரே சுமந்திரனைக் கொலைசெய்யும் திட்டத்தின் பின்னணியில் இருக்கின்றனர். இதனுடன் தொடர்புடைய முன்னாள் போராளிகள் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மகிந்த ஆட்சியின்போது எந்தவித விசாரணையும் - கண்காணிப்புமின்றி விடுவிக்கப்பட்டவர்களே இவர்கள். இப்படி 12 ஆயிரத்து 600 பேர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் மீள ஒருங்கிணைவதற்கு ஆரம்பித்துள்ளனர் என்பதற்கு இது சிறந்த எடுத்துக்காட்டாகும். முன்கூட்டியே திட்டத்தை அறிந்து அதைத் தடுப்பதற்கு பாதுகாப்புத் தரப்பு எடுத்த முயற்சி மகிழ்ச்சியளிக்கின்றது - என்றார். (வ-5)

## தீர்வு...

ஒரு முடிவுக்கு வரமுடியும். குறுகிய அரசியல் இலாபத்துக்காக நாம் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தக் கூடாது.

இவ்வாறு கூட்டு அரசிலிருந்து பிரிந்து நாடாளுமன்றில் சுயாதீன உறுப்பினராகச் செயற்படும் அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

தெற்கைக் குழப்பி ஒரு போதும் வடக்குக்குத் தீர்வைக் கொடுக்க முடியாது. அப்படிக் கொடுத்தால் அது நிலையான தீர்வாக வும் அமையாது என்று தமிழ்த் தலைவர் கள் என்னிடம் கூறியுள்ளனர். தெற்கின் இணக்கத்துடனேயே அவர்கள்வடக்குக்கான தீர்வை எதிர்பார்க்கின்றனர்.

வடக்கும் தெற்கும் ஒன்றிணைந்தே செயற்பட வேண்டும். வடக்கு மக்களின் பிரச்சினைகளை அறிந்து அவர்களுடன் இணைந்து அபிவிருத்தி செய்தால் அவர்களின் மனங்களை வெற்றிகொள்ளலாம். மாறாக, அவர்கள் விரும்பாத -அவர்களுக்குத் தேவையில்லாத அபிவிருத்திகளை நாம் அவர்களிடம் திணிக்கக்கூடாது.

இப்படிப் போனால் நிச்சயம் இனவாதத்தை ஒழிக்கலாம். ஆகக் குறைந்தது பரீட்சார்த்தமாக இப்படி ஒரு வருடமாவது செய்து பார்ப்போம். நிச்சயம் மாற்றத்தைக் காண முடியும். அரசியல் தீர்வு தொடர்பில் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் மனம் திறந்து பேச வேண்டும். அதன் மூலமாகத்தான் நல்ல பயனைப் பெறலாம். கூட்டமைப்புக்கும் அரசுக்குமிடையில் நான் அறிந்தவரை எந்தவோர் இரகசிய ஒப்பந்தமும் கிடையாது. குறுகிய அரசியல் இலாபத்துக்காக நாம் பொய்க் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தக் கூடாது.

இனியொரு போர் செய்யமுடியாது. இனவாதத்தைத் தூண்ட முடியாது. நல்லிணக்கம் ஊடாகவே இந்த நாட்டை அபிவிருத்தி செய்யமுடியும். அந்த அபிவிருத்தியில் இருந்து வடக்கைப் புறந்தள்ளிவிடமுடியாது. - என்றார். (வ-4)

## சில...

அமைச்சின் செயலர் கருணா சேன ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.

காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கு, பாதுகாப்புத் தரப்பி னரே முட்டுக்கட்டையாக இருப்பதாக கடந்த வாரம் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இந்த அலுவலகத்தை நிறுவுவதற்கு முன்னதாக பாதுகாப்புத் தரப்பின் கரிசனைகள் தொடர்பில் கவனம் செலுத்தக் கோரும் ஆவணத்தை பாதுகாப்பு அமைச்சு அரச தலைவரிடம் கையளித்துள்ளது என்றும், இதன் காரணமாகவே இந்த அலுவலகத்தை அமைப்பதற்கான பணிகளில் தாமதம் ஏற்படுகின்றது என்றும் அந்தச் செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கொழும்பு ஊடகத்துக்கு பதில் வழங்கியுள்ள பாதுகாப்பு அமைச்சின் செயலர் கருணாசேன ஹெட்டியாராச்சி, அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவிடம் பாதுகாப்பு அமைச்சு அறிக்கை கையளித்துள்ளது. ஆனால் இந்தப் பணியகத்துக்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. இராணுவ நிலைகளுக்குள் நுழைந்து தேடுதல் நடத்த அனுமதித்தல் உள்ளிட்ட சில சட்டப்பிரிவுகள் தொடர்பிலேயே நாம் எமது கரிசனையை வெளியிட்டுள்ளோம் - என்றார். (வ-5)

## கடலில்...

செல்வநாயகபுரம் பாடசாலைக்கு அருகிலுள்ள நண்பர்கள் ஆறு பேர் கடலில் குளிப்பதற்காகச் சென்றுள்ளனர். அதில் மூன்று பேர் குளித்துக்கொண்டிருந்த போது, நீரில் மூழ்கிய நிலையில் ஒருவர் காப்பாற்றப்பட்டார். மற்றைய இருவரும் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. அவர்கள் இருவரையும் தேடும் பணி மீனவர்களின் உதவியுடன் இடம்பெறுகின்றது.

நீரில் மூழ்கி அடித்துச்செல்லப்பட்டுள்ளவர்கள் திருகோணமலை செல்வநாயகபுரம் பாடசாலைக்கு அருகில் வசித்து வரும் பீ.கேசவன் பிரசாத் (வயது - 24) துரைராசா கிரிஷாந்தன் (வயது-25) என்று பொலிஸார் தெரிவித்தனர். (வ)

## நுகேகொடை...

இந்தக் கூட்டத்துக்கு பதிலடி கொடுக்கும் வகையிலான கூட்டமொன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான அமைச்சர் பி.ஹரிசன் அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் ஏற்பாடு செய்திருந்தார்.

தலைமை அமைச்சர் ரணில் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் கபீர் ஹாசீம் உள்ளிட்ட முக்கிய உறுப்பினர்கள் பங்கேற்றிருந்தனர்.

இதன்போது உரையாற்றிய அமைச்சர் கபீர் ஹாசீம், நுகேகொடையில் கூட்டத்தை திரட்டுவது இலகுவான விடயம். சிறியதொரு நிலப்பரப்பில் கூட்டத்தை வைத்து மக்கள் வெள்ளம் திரண்டது என்று மார்தட்டிக் கொள்வதற்கு மகிந்த அணி முயற்சிக்கின்றது. குறித்த கூட்டத்தால் அரசுக்கு எந்தவொரு சவாலும் ஏற்படவில்லை.

ஆட்சியை கவிழ்ப்பதற்குரிய முதல் வேட்டு, முதல் வேட்டு என்று கூவிக் கூவி கூட்டங்களை நடத்தி, நடத்தியே தற்போது இறுதி வேட்டும் தீர்ந்துவிட்டது. அந்தக் கூட்டத்தால் அரசுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. திருடர்களை இன்னும் இரண்டு வருடங்களுக்குள் சிறையில் அடைப்போம். மக்களும் இதனையே விரும்புகின்றனர் - என்றார். (வ-5)

## ஐ.நாவுக்கு...

தற்கான ஆயத்த நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சித்திரவதைகள் மற்றும் ஏனைய கொடூரமான, மனிதமாபிமானமற்ற, அல்லது இழிவுபடுத்தும் நடவடிக்கைகள், தண்டனைகள் தொடர்பான ஐ.நா சிறப்பு அறிக்கையாளரான, ஜுவான் மென்டஸ், ஐ.நா மனித உரிமைகள் சபையின் மார்ச் மாத அமர்வில் அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளார்.

இந்த அறிக்கை அண்மையில் வெளியிடப்பட்டிருந்தது. இந்த அறிக்கைக்கு மார்ச் மாதம் நடைபெறும் ஜெனிவா அமர்வில் பதில் அறிக்கை தாக்கல் செய்யப்படும் என்று அயலுறவுத்துறை அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த அறிக்கையை நிராகரித்துள்ள பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர், எந்தவிதமான சான்றுகளும் இல்லாமல் தனி நபர்களின் வாக்குமூலங்களின் அடிப்படையில் இந்த அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்தார். இதனை முழுமையாக ஆய்வு செய்ய வேண்டும். எனினும், இந்த அறிக்கையின் எந்தவொரு பரிந்துரைக்கும் இணங்க முடியாது என்றும் அந்த அதிகாரி கூறியுள்ளார்.

அறிக்கையில் பொலிஸாரின் சித்திரவதைகளுக்கே முக்கிய கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு பொலிஸாரால் எவரேனும் சித்திரவதை செய்யப்பட்டிருந்தால், அந்த நபர் நீதிவான் முன்னிலையில் நிறுத்தப்படும் போது அதுபற்றி முறையிட முடியும். எவரேனும் அவ்வாறு செய்யவில்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி மேலும் தெரிவித்தார். (வ-5)

## ஒய்வெடுக்கவிருந்த...

தடவை போட்டியிட்டார்? இவ்வாறு தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கேள்வியெழுப்பியுள்ளார்.

அரசியலில் இருந்து ஓய்வு பெற்று சென்ற தான் மீண்டும் வருவதற்கு மைத்திரியே காரணம் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச நுகேகொடைக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அநுராதபுரத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்தில் உரையாற்றியபோதே ரணில் விக்கிரமசிங்க மகிந்தவிடம் மேற்கண்டவாறு கேள்வியெழுப்பியுள்ளார்.

தான் போட்டியிடுவதற்கு மைத்திரிபால சிறிசேனதான் காரணமெனவும் இல்லையென்றால் ஓய்வு பெற்றிருப்பேன் எனவும் மகிந்த கூறியுள்ளார். மற்றையஅரச தலைவர்கள் இரண்டு தடவை போட்டியிட்டு ஓய்வு பெற்றுவிடுவர். ஆனால் இவரோ 18ஆவது திருத்தத்தை மேற்கொண்டு மீண்டும் போட்டிக்கு வந்தார். தான் ஓய்வு பெற எண்ணியிருந்தால் எதற்கு அரசமைப்புத் திருத்தத்தை மேற்கொள்ள வேண்டும்? என்றார் தலைமை அமைச்சர் ரணில். (வ-4)

## கேரளாக்...

வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின்படி மிஹிந்தலை ரம்பேவசந்தி பிரதேசத்தில் அவர் பயணித்துக் கொண்டிருந்தபோது பொலிஸ் உத்தியோகத்தர்களால் சோதனையிடப்பட்டது. இதன்போது அவரிடம் கஞ்சா போதைப் பொருள் இருந்தமை தெரியவந்தது. அவர் கைது செய்யப்பட்டார். அவை தொடர்பில் குறித்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் விசாரணை மேற்கொள்ளப்படுகிறது என்று பொலிஸாரால் மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4)

## நாவற்குழி...

நாவற்குழியில் குடியேறியுள்ள சிங்கள மக்களுக்கும், தமிழ் மக்களுக்கும் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக வீடுகள் அமைத்துக் கொடுக்கப் படவுள்ளன. தமிழ் மக்களுக்கு 200 வீடுகளும், சிங்கள மக்களுக்கு 50 வீடுகளும் இவ்வாறு அமைத்து வழங்கப்படவுள்ளன.

இதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு இன்று காலை 10.30 மணிக்கு நாவற்குழியில் நடைபெறவுள்ளது. தமிழ் மக்களுக் கான ஒரு வீட்டினதும், சிங்கள மக்களுக் கான ஒரு வீட்டினதும் அடிக்கல் இன்று நடுகை செய்யப்படும். யாழ்ப்பாண மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், இந்த வீட்டுத் திட்டத்தை இடைநிறுத்துமாறு கோரிக்கை விடுக்கப் பட்டிருந்தது. 1983 ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில், இங்கேயிருந்த சிங்கள மக்களின் குடும்பங்களுக்கு மாத்திரமே வீடு வழங்க முடியும் என்று கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (வ-5-10)

## சாலையைக்...

குள்ளானது. இந்த விபத்தில் 15 எருமை மாடுகள் பரிதாபமாக உயிரிழந்தன. 10 மாடுகள் படுகாயமடைந்தன. பேருந்தில் பயணித்த 10 பயணிகள் படுகாயமடைந்தனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து நேற்று மாலை மொரட்டுவ நோக்கிப் புறப்பட்ட பேருந்து இரவு 9.30 மணியளவில் மாங்குளத்தைத் தாண்டி கொல்லர்புளியங்குளம் பகுதியில் பயணித்துக்கொண்டிருந்த வேளையில் திடீரென வீதியைக் கடந்த மாட்டுப் பட்டியின் மீது மோதியது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த 10 பயணிகள் படுகாயமடைந்த நிலையில் உடனடியாக மாங்குளம் வைத்தியசாலைக்கு அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து நோயாளர்காவு வண்டியில் சம்பவ இடத்துக்கு விரைந்த மாங்குளம் வைத்தியசாலை ஊழியர்கள் படுகாயமடைந்தவர்களை வைத்தியசாலைக்கு ஏற்றிச் சென்றனர்.

இந்த விபத்தில் படுகாயமடைந்தவர்களில் சிலர் மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டனர். இவ்விபத்தினில் 15 மாடுகள் உயிரிழந்ததோடு 10 மாடுகள் படுகாயமடைந்து வீதியில் கிடக்கின்றன. படுகாயமடைந்த மாடுகளுக்கு சிகிச்சையளிப்பதற்கு கால்நடை வைத்தியரின் உதவி நாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-101-106)

## ஐ..தே.கட்சியின்...

பின் ஊடாக பௌத்த மதத்துக்கான முன்னுரிமையில் எந்தப் பாதிப்பும் ஏற்படாது. மகிந்த அரசுதான், நாட்டுக்குப் பாதகம் ஏற்படக் கூடிய கூட்டாட்சி முறையை நடைமுறைப்படுத்த முயற்சித் தது. எமது அரசு அவ்வாறு செய்யாது என்றும் அமைச்சர் சஜித் கூறினார். (வ-5)



## வரலாற்றில் இன்றைய தினம்

1948 - மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டார்.

2000 - கென்ய ஏயர்வேய்ஸ்சுக்குச் சொந்தமான விமானம் விபத்துக்குள்ளாகியபோது அதிலிருந்த 179 பேரில் 10 பேர் மட்டுமே உயிர் தப்பினர்.

1994 - அரசமைப்பு சீர்திருத்தம் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் நடவடிக்கை மார்ச்சில் முடிவு என அரசால் தெரிவிப்பு.

2004 - இஸ்ரேலியப் படைகள் பீரங்கிகளுடன் காசா மேற்குக் கரையுள் புகுந்தன.

2006 - பனையோலைப் பைகள் சூழல் மாசடைவதைத் தடுக்க அறிமுகம்.

2013 - போர்க்குற்ற விசாரணைகளுக்கு அழுத்தம் வலுக்கின்றது. ஆதரவு தெரிவித்து ஹிலாரிக்கு செனட்டர்கள் கடிதம்.

**ஆசிரியர் :** அமெரிக்கா எங்கே உள்ளது?

**மாணவன் :** தெரியாது சார்!

**ஆசிரியர் :** இருக்கை மேல் ஏறி நில்லடா..!

**மாணவன் :** ஏறி நிண்டா தெரியுமா சார்?



### பன்னாட்டுத் தினங்கள்

**ஜூலை**

01 - கேளிக்கை தினம்& மருத்துவர்கள் தினம் முதலாவது சனிக்கிழமை கூட்டுறவுதினம்
11 - மக்கள் தொகை தினம்
15- கல்வித்தினம் மூன்றாவது ஞாயிற்றுக் கிழமை தேசிய ஐஸ்கிறீம் தினம்
20 சதுரங்க தினம்




அந்தக் கல்யாண சத்திரத்தில் விதவிதமான உணவுப் பண்டங்கள் வைக்கப்பட் டிருந்தன. எந்த உணவைச் சுவைக்கலாம் என யோசித்த நேரத்தில், சமையல்காரன் வந்துவிடவே தப்பித்தோம், பிழைத்தோம் என மண்டபத்தை விட்டு வெளியே ஓடி வந்தது எலி.

அந்த நேரத்தில் தெருவோரமாக இருந்த மதில் மீது ஒரு காகம் அமர்ந்திருந்தது. அந்தக் காகம் எலியைக் கண்டுவிட்டது. எலியைக் கண்ட மகிழ்ச்சியில் அந்தக் காகமானது, எலியின் அருகே பறந்து வந்து அதனை விரட்டிப் பிடிக்க முயன்றது. தனது தடித்த அலகினால் எலியைக் கொத்தப் போனது. காகம் தன்னைத்தாக்க வருவதைக் கண்ட எலி கீச்... கீச்... என்று அலறியபடி பரிதாபமாகக் காகத்தைப் பார்த்தது.

காகம் அண்ணா! நீங்கள் செய்வது சரிதானா? மண்டபத்தில் உள்ளே வந்த மனிதருக்குப் பயந்து தெருவில் ஓடிவந்தேன். இங்கே தெருவில் நீங்கள் என்னைப் பிடித்துக் கொல்ல நினைக்கிறீர்களே... என் மீது கொஞ்சமாவது கருணை காட்ட மாட்டீர்களா?" என்று அன்போடு கேட்டது.

அதனைக் கேட்ட காகம், எலியே! எனக்கு மிகவும் பசியாக இருக்கிறது. என் பசிக்கு இப்போது உணவு தேவைப்படுகிறது. அதனால் உன்னை இரையாகக் கொள்ள வேண்டுமென்று நினைக்கிறேன். அதனால், அடம் பிடிக்காமல் எனக்கு இரையாகிவிடும்!" என்று கண்டிப்புடன் கூறியது.

காகம் அண்ணா! உங்கள் பேச்சிலும் ஒரு வித நியாயம் இருப்பதாக உணர்கிறேன். ஆனால், உங்கள் குஞ்சுக்கு இதைப்போல் ஓர் ஆபத்து நேர்ந்து அது வேறு ஏதாவது பறவையிடமோ, விலங்குகளிடமோ சிக்கிக் கொண்டால் அது என்ன பாடுபடும். உங்கள் குஞ்சு போன்று என்னை நினைத்து எனக்கு உயிர் பிச்சை கொடுங்களேன்!" என்று பரிவோடு கெஞ்சியது எலி.

எலியின் சாமர்த்தியமான பேச்சினால் காகத்தின் மனது இளகிவிட்டது. சிறிது நேரம் யோசனை செய்த காகம் எலியைப் பார்த்து, எலியே! உன்னைப் பார்த்தபோது எப்படியாவது உன்னைச் சாப்பிட்டு விட வேண்டும் என்ற எண்ணம்தான் தோன்றியது.

உன் அன்பான வார்த்தைகளைக் கேட்கிற போது அந்த எண்ணம் என் மனதை விட்டு அகன்றுவிட்டது. நீ உன் சாதுர்யமான பேச்சினால் என் மனதினுள் இருக்கிற பாச உணர்ச்சியினைத் தட்டி எழுப்பிவிட்டாய். இனிமேல் நீ பயமில்லாமல் செல்லலாம்!" என்று கூறியபடி வேறு இரையைத் தேடிப் பறந்து சென்றது. எலியும் உயிர்பிழைத்த மகிழ்ச்சியில் தன் இருப்பிடத்தை நோக்கி வேகமாக ஓடியது. அன்பான பேச்சினால் எதிரியின் மனதைக் கூட மாற்றிவிடலாம் என்பதை அந்த எலி மிக நன்றாகவே அன்று புரிந்து கொண்டது. அன்புக்கு இத்தனை பெரிய சக்தியிருப்பதையும், அது தனக்கு ஏற்பட்ட அனுபவத்தின் மூலமாக அறிந்து கொண்டது. தானும் பிறரிடம் அன்போடு இருக்க வேண்டும் என்று அன்று முதல் அது உறுதி பூண்டது.

## இலங்கையின் அரச தலைவர்கள்



வில்லியம் கோபல்லாவ -1962 -1972

ஜே.ஆர் ஜயவர்தனா - 1978 -1979

ரணசிங்க பிரேமதாசா - 1989 -1993

டிங்கிரி பண்டா விஜயதுங்கா - 1993 -1994

சந்திரிகா குமாரணதுங்க - 1994 -2005

மகிந்த ராஜபக்ச - 2005 - 2015

மைத்திரிபால சிறிசேன - 2016 முதல்



## வர்ணம் தீட்டுவோம் வாங்க....








டைனோசர்கள் பெரும்பாலும் கால் விரல் களால்தான் நடக்கும்.



கிளி ஓர் ஆண்டுக்கு 30 முட்டை மட் டுமே இடும். இதன் ஆயுள்காலம் 50 ஆண்டுகள்



## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 30

**எவ்.ஏ. கிண்ணம் கிளிநொச்சி லீக்**

கிளிநொச்சி மாவட்ட கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான எவ்.ஏ. கிண்ணத் தொடரின் இறுதியாட்டம் இன்று இடம்பெறவுள்ளது. முழங்காவில் விநாயகர் விளையாட்டுக் கழக மைதானத்தில் பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் கனகபுரம் அணியை எதிர்த்து வலைப்பாடு ஜெகமீட்பர் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.க. கால்பந்தாட்டம்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 22 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இந்தத் தொடரில் இன்று மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் லக்கிஸ்ரார் அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதவுள்ளது. (ம-23)

## இல்லமெய்வன்மை

தென்மராட்சி ஜன. 30

மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் க.எழிலழகன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தொழிலதிபர் த.ஜெயந்தனும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி திருக்கணித பதிப்பக முகாமையாளர் கா.சிவஞானசுந்தரம், தென்மராட்சி கல்வி வலய உடற்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ந.சிறிகாந்தா ஆகியோரும் கலந்து கொள்வர். (ம-9)



## நல்லூர் பிரதேச செயலக கரப்பந்தாட்டம்; நாயன்மார்கட்டு பாரதி அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 30

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப்பந்தாட்டத்தில் ஆண்கள் பிரிவில் நாயன்மார்கட்டு பாரதி அணி சம்பியனானது. அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. நாயன்மார்கட்டு பாரதி அணியை எதிர்த்து கொக்குவில் அமராகவி அணி மோதியது. ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் மூன்று செற்களையும் முறையே 25:21, 25:23, 26:24 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம- 23)

## உதயசூரியன் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜன. 30

நல்லூர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான கயிறு இழுத்தலில் நாவலடி உதயசூரியன் அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய மைதானத்தில் இறுதிப் போட்டி நேற்று நடைபெற்றது. அரியாலை ஐக்கிய அணியை எதிர்த்து நாவலடி உதயசூரியன் அணி மோதியது. இதில் நாவலடி உதயசூரியன் அணி 2:0 என்ற ரீதியில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)

## ஆவரங்கால் மேற்கு சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரொன்றில் ஆண்கள் பிரிவில் ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழக அணி சம்பியனானது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன் தினம் இறுதியாட்டம் இடம்பெற்றது. ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய இளைஞர் கழக அணி மோதியது. முதலாவது செற்றை 25:18 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது ஆவரங்கால் மேற்கு இளைஞர் கழக அணி. எனினும் இரண்டாவது செற்றை 23:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தது. சரிவில் இருந்து மீண்டு அடுத்த இரு செற்களையும் முறையே 25:19, 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியதை அடுத்து அந்த அணி 3:1 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்றுச் சம்பியனானது. (ம-23-422)





## பிலிப்நேரிஸ் சம்பியன்

யாழ்ப்பாணம், ஜன. 30

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான வலைப்பந்தாட்டத்தில் பெண்கள் பிரிவில் சென். பிலிப்நேரிஸ் அணி சம்பியனானது.

செம்பியன்பற்று விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் நடைபெற்றது. மாமுனை கலைமகள் அணியை எதிர்த்து செம்பியன்பற்று சென். பிலிப்நேரிஸ் அணி மோதியது. சென். பிலிப்நேரிஸ் அணி 8:0 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-422)

## பாடும்மீன் மூன்றாமிடம்

யாழ்ப்பாணம், ஜன. 30

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்திய இரண்டாம் பிரிவு அணி களுக்கு இடையிலான கால்பந்தாட்டத்தில் நாவாந் துறை சென். மேரிஸ் அணி மூன்றாம் இடத்தை தனதாக்கியது.

கொழும்பு சிற்றி லீக் கால்பந்தாட்ட விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பேருவளை கிறைட் ஸ்ரார் அணி மோதியது.

இதில் குருநகர் பாடும்மீன் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாம் இடத்தைத் தனதாக்கியது. (ம-23)

## காங்கேசன்துறை இளைஞர் கழகம் கரப்பந்தாட்டத்தில் அபார ஆட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 30

யாழ். மாவட்ட இளைஞர் கழகங்களுக்கு இடையில் நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரொன்றில் பெண்கள் பிரிவில் காங்கேசன்துறை இளைஞர் கழக அணி சம்பியனானது.

ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இறுதியாட்டம் இடம்பெற்றது. பெண்களுக்கான இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை இளைஞர் கழக அணியை எதிர்த்து பருத்தித்துறை சென். தோமஸ் இளைஞர் கழக அணி மோதியது. மூன்று செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதல் செற்றை 25:15 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றியது காங்கேசன்துறை இளைஞர் கழக அணி. எனினும் அந்த அணி இரண்டாவது செற்றை 17:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இழந்தது. இறுதி செற் 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் காங்கேசன்துறை இளைஞர் கழக அணியின் வசமாக முடிவில் அந்த அணி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனானது. (ம-23-422)



# பெங்களூரில் வேண்டும் ஸ்ரோக்ஸ்

## கோக்லி விருப்பம்

நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் பெங்களூர் அணிக்காக ஸ்ரோக்ஸ் விளையாட வேண்டும் என்று அதன் தலைவரான கோக்லி விருப்பப்பட்டார் என சில இந்திய ஊடகங்கள் குறிப்பிட்டன. இந்தியாவுக்கு எதிரான மூன்றாவது ஒருநாள் ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற ஸ்ரோக்ஸ் முக்கிய காரணமாக



இருந்தார். தவிர, அவர் சிறந்த சகலதுறை வீரராகவும் வலம் வருகிறார். இடதுகைத் துடுப்பாட்டம் ஸ்ரோக்ஸின் தனிச்சிறப்பு இதனாலேயே கோக்லி, நடப்பு வருட ஐ.பி.எல். தொடரில் தனது அணியில் ஸ்ரோக்ஸ் இருந்தால் சிறப்பாக இருக்கும் என்று கருதுகிறார் என்று தெரிவிக்கப்பட்டது. (ம)



### 5 ஆண்டுகளின் பின்னர்

# அலெப்போவில் அரங்கேறியது கால்பந்தாட்டம்

கடந்த ஐந்து வருடங்களின் பின்னர் சிரியாவின் அலெப்போ நகரில் மீண்டும் கால்பந்தாட்டம் நடைபெற்றது.
சிரிய ஜனாதிபதி அர் அசாத்தை பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி தோற்றம்பெற்ற ஆயுதக் குழுக்கள் படிப்படியாக அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவாக மாற்றம் பெற்றன. சிரியப் படை மற்றும் அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையே கடந்த ஐந்து வருடங்களாக உள்நாட்டுப் போர் இடம்பெற்று வந்தது. கிட்டத்தட்ட 3 லட்சத்து 50 ஆயிரம் மக்கள் உயிரிழந்தனர். மில்லியன் கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர்.
சிரிய அரசுக்கு உதவியது ரஷ்யா. கடந்த டிசெம்பர் மாதம் ஆயுதக் குழு அடக்கப்பட்டு போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இதனையடுத்து அலெப்போ நகர் படிப்படி யாக தற்போது வழமைக்குத் திரும்புகிறது. 5 வருடங்களின் பின்னர் அங்கு மீண்டும் கால்பந்தாட்டமொன்று அரங்கேறியது. அல் இட்டிகாட் - ஹிரியா அணிகளுக்கு இடையிலேயே இந்த ஆட்டம் இடம் பெற்றது. (ம-எ)

# மகிழ்ச்சி!

இந்திய அணியின் களத்தடுப்பு மிகவும் திருப்தி தருகிறது என்று தெரிவித்தார் அந்த அணியின் முன்னாள் ஜாம்பவானான சச்சின்.
கொல்கத்தாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
இந்தியகிரிக்கெட் அணியின் களத்தடுப்பு உலகளவில் முதல் தரமானதாக உள்ளது. அனைத்து வீரர்களும் களத்தடுப்பில் ஈடுபடும் முறையைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்திய வீரர்கள் மிகவும் ஆக்ரோசமாக களத்தடுப்பில் ஈடுபடுகிறார்கள். அணியில் அதிகளவான இளம் வீரர்கள் உள்ளனர். இதுவும் இந்திய அணியின் களத்தடுப்பு துடிதுடிப்பாக இருக்க முக்கிய காரணம். துடுப்பாட்டமும் சிறந்த முறையில் உள்ளது. பந்து வீச்சு வரிசை தான் அவ்வப்பொழுது தடுமாற்றம் காட்டுகிறது. அதுவும் சிறப்பாக அமைந்துவிட்டால் இந்திய அணி சகல துறைகளிலும் பலம்வாய்ந்ததாக இருக்கும் என்று சச்சின் மேலும் தெரிவித்தார். (ம)



# றோயர் பெடரர் நெருப்பாட்டம்

## நடாலும் விடாப் போராட்டம்

ஆஸ்திரேலியத் தொடரில் ஆண்கள் ஒற்றையர் பிரிவில் சம்பியனானார் சுவிற்சர்லாந்தின் முன்னணி வீரரான றோயர் பெடரர்.
நடப்பு வருடத்தின் முதலாவது பன்னாட்டு அந்தஸ்து பெற்ற தொடராக ஆஸ்திரேலியத் தொடர் நடைபெற்று முடிவடைந்துள்ளது. ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் சுவிற்சர்லாந்தின் முன்னணி வீரரான பெடரரும், ஸ்பெய்னின் முன்னணி வீரரான நடாலும் நேற்று மோதினர்.
ஐந்து செற்களைக் கொண்ட ஆட்டத்தின் முதல் செற்றை 6:4 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் பெடரர். அடுத்த செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார் நடால்.
மூன்றாவது செற் 6:1 என்ற புள்ளிகளின் அடிப்படையில் பெடரரின் வசமானது. நான்காவது செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றினார் நடால். முதல் நான்கு செற்களின் நிறைவில் இருவரும் தலா 2 வெற்றிகளுடன் இருந்தனர். ஆட்டத்தின் ஐந்தாவதும் இறுதியுமான செற்றில் வெற்றி பெறுபவரே சம்பியன் என்ற நிலையில் அந்த செற்றை 6:3 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பெடரர் சம்பியனானார். கடந்த ஆறு மாதங்களாக பெடரர் காயத்தால் ஓய்விலிருந்தார். ஆஸித் தொடரிலேயே அவர் மீண்டும் வந்தார்.
தொடரைக் கைப்பற்றும் நம்பிக்கையையும் அவர் ஏற்கனவே வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# வாழ்வின் கடினமான தருணம் உசைன் போல்ட் உருக்கம்

ஒலிம்பிக் பதக்கத்தைத் திருப்பி வழங்குவதை தனது வாழ்க்கையின் கடினமான தருணம் என்று குறிப்பிட்டார் ஜமைக்காவின் குறுந்தூர ஓட்டப்பந்தய வீரர் போல்ட்.
சீனாவின் பீஜிங்கில் கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த ஒலிம்பிக் போட்டியில் 4 வீரர்கள் பங்குபற்றும் 100 மீற்றர் அஞ்சலோட்டத்தில் ஜமைக்கா அணி தங்கம் வென்றது. ஜமைக்கா குழாமில் இடம்பெற்றிருந்த வீரர்களில் ஒருவரான கார்டர், ஊக்கமருந்து பயன்படுத்தி தொடரில் களமிறங்கியமை தெரியவந்தது. இதனால் பதக்கத்தைத் திரும்ப வழங்குமாறு ஒலிம்பிக் சம்மேளனம் உத்தரவிட்டது. தற்போது பதக்கத்தை போல்ட் ஒலிம்பிக் சம்மேளனத்தில் கொடுத்துள்ளார். இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
"தங்கப் பதக்கங்களில் ஒன்றைத் திரும்ப ஒப்படைப்பதென்பது மிகவும் கடினமான சூழ்நிலையே. எனினும் ஒலிம்பிக் சம்மேளனத்தின் முடிவை மதிப்பதால் அதற்கு நான் கட்டுப்படவே வேண்டும்" என போல்ட் மேலும் தெரிவித்தார். (ம)

# இல்ல மெய்வன்மை

வரணி, ஜன. 30
எழுதுமட்டுவாழ் சிறிகணேசா வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் குறித்த பாடசாலையின் மைதானத்தில் இன்று திங்கட்கிழமை பி.ப.1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் க.கஜேந்திரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலயப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் (கல்வி அபிவிருத்தி திருமதி சி.சிவநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (ம-122)

# 2ஆவது ரி–20 ஆட்டம்; இந்தியா தக்க பதிலடி

## தொடரில் இருப்பைத் தக்கவைப்பு

இங்கிலாந்துக்கு எதிரான இரண்டாவது ரி-20 ஆட்டத்தில் 5 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரில் இருப்பைத் தக்க வைத்தது இந்திய அணி.
இந்த இரு அணிகளுக்கும் இடையில் மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடர் நடைபெற்று வருகிறது. முதலாவது ஆட்டத்தில் இங்கிலாந்து வெற்றிபெற்றமையால் இந்த ஆட்டத்தில் வென்றேயாக வேண்டும் என்ற நெருக்கடி இந்தியாவுக்கு இருந்தது.
நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. ஆரம்ப வீரர்களாக கோக்லி மற்றும் ராகுல். 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கோக்லி. ரெய்னா ஒற்றை இலக்கத்தைத் தாண்டவில்லை. ஆரம்பம் முதலே தடுமாறினார் யுவராஜ். அவர் 12 பந்துகளை எதிர்கொண்டு 4 ஓட்டங்களை மட்டுமே பெற்றார். டோனியின் இடத்தில் களமிறக்கப்பட்டார் மனீஸ் பாண்டே. அவர், தான் எதிர்கொண்ட முதல் 20 பந்துகளில் ஒரு பவுண்டரியையேனும் பதிவுசெய்யவில்லை. ஓர் முனையில் இவ்வாறு தடுமாற்றங்கள் இருந்தாலும் மறுமுனையில் அரைச்சதம் கடந்தார் லோகேஸ் ராகுல். அவர் 71 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியா 144-8.
பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து 22 ஓட்டங்களைப் பெற்றிருந் போது ஆரம்ப வீரர்கள் இருவரையும் இழந்தது. 23 பந்துகளை எதிர்கொண்டு 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் மோர்கன். ஸ்ரோக்ஸ் 38 ஓட்டங்களுடன் வீழ்த்தப்பட்டார். ரூட் 38 ஓட்டங்களைக் குவித்தார். எனினும் அவர் 38 பந்துகளை எதிர்கொண்டிருந்தார். அவரது ஆட்டத்தால் இங்கிலாந்துக்கு பெரிதான நன்மை என்று ஏற்படவில்லை. முடிவில் 5 ஓட்டங்களால் வென்றது இந்தியா.
இரு அணிகளும் தலா ஓர் வெற்றியைப் பெற்றுள்ளன. அடுத்த ஆட்டத்தில் வெற்றிபெறும் அணியே சம்பியன். (ம)



# பாராட்டி வாழ்த்துகின்றோம்

## செல்வி சிவரூபி நமசிவாயம்

**(பயிற்றப்பட்ட ஆசிரியர், கலைமாணி, காரைநகர் இந்துக்கல்லூரி, காரைநகர்)**



வங்கக்கடலலைகள் தங்கித் தாலாட்ட எங்கும் புகழ்மிகுந்த
எழில் கொஞ்சும் காரைநகர் இலங்கும் ஈழத்துச் சிதம்பரனார்
துலங்கும் திருத்தலமும் பழம்பெரும் புகழ்மிகு புண்ணிய
தலமாம் இம்மண்ணில் மலர்ந்த மணற்காட்டு அம்மன்
மாணிக்க ஒளியாக மங்காதருளாட்சி செய்து மனத் துயர்கள்
களைந்து தழைத்தோங்கி வாழ பஞ்சமில்லா மண்ணாம்
விஞ்சுபுகழ் காரையூரில் தெங்கும் பனை நெரங்கும்
தொன்மைப் புகழ் மணக்கும் தங்கும் கட்டுமரம் அங்கம்
குலுங்கி ஆடும் அழகிய நகரினிலே இளகிய உளத்தோன்
இங்கிதமானவன் மங்காப்புகழுடை மாசிலான் நமசிவாயம்
நற் திருமகளாம் சிவனருள் மலர்ந்த
**சிவரூபி** நற்செல்வி
காசினி போற்றிடும் கவினுரு கல்வியை மேதினிதனிலே
கசடறக் கற்று போதனையாற்றும் நற்பணியேற்று சாதனை
படைத்திட சங்கற்பம் பூண்டு கொண்ட பணிதனில்
குறையிலாதியங்கி அருவமாய் நின்றோன்
திருவாலவாயவனின் அடிதனைப்போற்றும் போதனை புகட்டி
காரையூர் இந்துவில் காத்திரமாகவே முகிழ்ந்தனை
முழுமையாய் செழிப்புறு ஆசிரியையாய் விழிப்புடன்
சைவமும் தமிழும் தழைத்திட விளைந்த வித்தகியே!
சைவத்தமிழ் வளர்ந்திட மெய்யுணர்வாக நின்று பிரசங்கம்
தனைக் கருத்தாளத்துடன் எடுத்து நேர்முறையில் நின்றுரைக்கும்
சீர் மிகுந்த பேச்சாற்றல் **சிவரூபி. நமசிவாயம்** அது உமக்கே
உரித்தானதென வரித்துக் கூறிடலாம்.
மெய்யுரையாற்றிவரும் பொய்யிலா உள்ளமே!
யாழ். பல்கலைக்கழகத்தின் நிலைத்திடக் **கலைமாணியாய்**
மன மகிழ்வுடன் மலர்ந்தீர்!
மாநிலம் தனிலே மகிழ்வுற வாழ்க!
நானிலம் புகழ நலமுடன் வாழ்க!

**2012 - 2014**

**கோப்பாய் ஆசிரிய கலாசாலை**
**நண்பர்கள்**

**விற்பனைக்கு**

கட்டட இடிபாட்டுக்கல், மண்
விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு:- 077 1021 867**

**ஆங்கில வகுப்புகள்**

தரம் 6-11(O/L) வரையான மாணவர்களுக்கு யாழில் வீடுகளுக்கு வந்து, அனுபவம் வாய்ந்த நம்பகமான, பிரபல பாடசாலை ஆசிரியரால் சிறப்பாக கற்பிக்கப்படும்.
✸ O/L மாணவர்களுக்கு விசேட கவனம் செலுத்தப்படும்

**077 252 8824**

**முக்கிய அறிவித்தல்**

பரிமளா ஸ்ரோர்ஸ் தயாரிப்பான V.S.P நல்லெண்ணை எள்ளின் விலை அதிகரிப்பால் 30.01.2017 இல் இருந்து விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்பதை வாடிக்கையாளர் அனைவருக்கும் மனவேதனையுடன் தெரியப்படுத்துகிறோம்.

ஆகக் கூடிய சில்லறை விலை
1 போத்தல் 750ml-540/=
1 போத்தல் 350ml-270/=
1 போத்தல 200ml-160/=

**தயாரிப்பாளரும் ஏகவிநியோகத்தருமான**
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
**இல.26A, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.**

**021 222 9165, 021 222 4135**

**SPOKEN ENGLISH**
**WITH DIPLOMA CERTIFICATE**

இம்முறை O/L,A/L எழுதியோர், பல்கலைக்கு தெரிவானோர், தொழில்புரிவோர்,வெளிநாடு செல்வோர் உயர்கல்வி மாணவர்கள் இணைய முடியும்.

ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் மூன்றே மாதங்களில் சரளமாக ஆங்கிலத்தில்பேசமுடியும்

2வது சனி,ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 04.02.2017

1. காலை 08.00-10.00 3. பி.ப 01.00-03.00
2. காலை 10.00-12.00 4. மாலை 03.00-05.00

வாரநாள் வகுப்புகள் (செவ்வாய்,வியாழன்) 31.01.2017
1.காலை 08-10 2.காலை 10-12

பயிற்சிநெறிமுடிவில் பெறுமதியான Diploma சான்றிதழ்

SAAMSON
Experts in English Training

279, ஆஸ்பத்திரி பின்புற வீதி. யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

# மரண அறிவித்தல்

## துரைசிங்கம் ஜெயசிங்கம்



**பிறப்பு** **26.11.1946**
**இறப்பு** **27.01.2017**

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் ஜெயசிங்கம் 27.01.2017 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - மகிழ்மலர் தம்பதிகளின் அன்பு மகனும், ஜெயசிங்கம் சத்தியலக்சுமியின் அன்புக் கணவரும், கருணேஸ்வரி (மானிப்பாய்), கருணாகரன் (லண்டன்), ஜெகதீஸ்வரி (மானிப்பாய்),ஐங்கரன் (லண்டன்), றஜீவ்கரன் (மானிப்பாய்) ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகராசா (மானிப்பாய்), காயத்திரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும், ஜஸ்வரியன், வைஸ்ணவி ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற தனபாலசிங்கம் (சுவிஸ்), ஜெயபாலசிங்கம் ஜெயமலர் (மானிப்பாய்), இன்பமலர் (மானிப்பாய்), குணரத்தினசிங்கம் (ஜேர்மனி), குணசிங்கம் (கனடா), தவராயசிங்கம் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.01.2017) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுவில் றோட்,**
**பொன்னம்பலம் லேன், மானிப்பாய்.**

(AJA 00703/)
(11,17,18)

**தகவல் :**
**குடும்பத்தினர்**

**077 515 9918 - றஜீவ்கரன்**

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.01.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.